கண்

கற்றது குற்றமா?

ஆசிரியர்:

வ. ரா.

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

வெளியிடுவோர்:

கஸ்தூரி பதிப்பகம்

திருத்துறைப்பூண்டி, தஞ்சை ஜில்லா.

1944

முதல் பதிப்பு] [விலை ரூ. 2.

உள்ளடக்கம்

கற்றது குற்றமா?
அமலநாதன்
வண்ணார வீரம்மாள்
கமலி—விமலி

சென்னை, நுங்கம்பாக்கம், இண்டர்நேஷனல் பிரிண்டிங்வொர்க்ஸில்
அச்சடிக்கப்பெற்றது.

முன்னுரை

எனக்கும் சிறைவாசம் நேர்ந்தகாலமுண்டு. வேலை இல்லாமல்போனால், எந்த இடத்திலும் எந்தக்காலத்திலும் பொழுது போவது கஷ்டம். அதுவும், சிறையிலே, பொழுது அசையாமல், ஆடாமல் நிற்பதுமாதிரி இருக்கும். பொழுது கொஞ்சங்கூட போகாத சிறையிலே எழுந்த கற்பனைகள் இந்தக்கதைகள்.

இரவில், நீண்ட நேரம் தூக்கமே வராது. எனவே, தனி அறையில் இருந்த எனக்கு, துணைக்காகவும் தோழமைக்காகவும், கணபதிராயன் என்ற ஒருவனை, நான் கற்பனையின் மூலமாக சிருஷ்டிசெய்துகொண்டேன். கணபதிராயன் தனியாக வர சம்மதிக்கவில்லை. அவன் பூபதிராயன் என்று வேறொருவனை தன்னோடு கூட்டிக்கொண்டுவந்தான்.

கணபதிராயன் ஞானவானைப்போல பேசுவான்; அவனுக்கு தத்துவமும் தருமோபதேசமும்தான் பிடிக்கும். பூபதிராயனுக்கோ, மண்ணில் சுகத்துடனும் சுதந்திரத்துடனும் வாழ்வதோடுகூட, அரசும் செலுத்தவேண்டும் என்று வெறி.

எனக்கு தூக்கம்வராதகாலத்திலெல்லாம், இவர்கள் இருவரும் என்மனதை போர்க்களமாக்கிக்கொண்டு, ஒருவரோடு ஒருவர் மல்யுத்தம் செய்வார்கள். ஆரம்பத்திலே இவர்களுடைய சண்டை எனக்கு இன்பமாயிருந்தது. ஆனால், நாளாக நாளாக, அதிலே எனக்கு வெறுப்பு உண்டாயிற்று. காரணம், நான், உருத்தெரியாதபடிக்கு, உடல்மெலிந்துபோனதுதான்.

தூக்கமே இல்லாமல்போகவே, நான் சோளக்கொல்லை பொம்மையைப்போல ஆகிவிட்டேன். சிறை டாக்டரை, தூக்கத்துக்கு மருந்துகேட்டேன். அவர் சிரித்தார். நான் கைதியாக அவர் முன்னேநின்று அவரைக்கேட்டதால் தானே, அவருக்கு சிரிக்க சந்தர்ப்பம் ஏற்பட்டது என்று நான் கோபங்கொண்டேன். என்னுடையது, சக்தியில்லாதவனுடைய கோபம். ஆகவே, என் ஆத்திரத்தைப்பார்த்து, டாக்டர் மறுபடியும் சிரித்தார். அவருடைய சிரிப்பு எனக்கு நிதானத்தை உண்டாக்கிற்று.

'நீங்கள், எனக்கு, உங்களுக்குத் தெரியாமலேகொடுத்த மருந்துக்கு வந்தனம். நான் போய்வருகிறேன்' என்று டாக்டரிடம் விடைபெற்றுக்கொண்டு, என் அறைக்கு வந்து

விட்டேன். அன்றிரவு முதல், எனக்கு தூக்கம் வருவதற்காக, கணபதிராயன் எனக்கு சொன்ன கதைகள் இவைகள்.

இந்தக்கதைகளின் மூலமாக, நான் பிரம்மானந்தமான தூக்கத்தைப்பெற்றேன். பின்னர், சிறை ஆஸ்பத்திரி வழி செல்லவே இல்லை.

இந்தக்கதைகள், குதூகலமான உணர்ச்சிகளை என் உள்ளத்தில் எழுப்பின. நான் உற்சாகம் அடைந்தேன். மேலும் மேலும் தன்னம்பிக்கையும் தைரியமும் உண்டாயின. சிறை டாக்டரை மருந்துப்பிச்சை கேட்டு, சித்தம் குலைந்து, கண்கலங்கின நான் திடசித்தனானதுபோல, இவைகளைப்படிக்கும் தமிழர்களும் ஆகலாம் என்ற ஆசைகொண்டு, இவைகளை வெளியிடத்துணிந்தேன். ஏற்பது, சிறையிலும் சரி வெளியேயும் சரி, இகழ்ச்சிதான். சந்தேகமே இல்லை.

எதையும் பிச்சையாக, கருணைபிரசாதமாக கேட்காமல், தலை நிமிர்ந்து வாழ்க்கையில் தமிழர்கள் போராடவேண்டும் என்பது என்னோடு பிறந்த ஆசை. அந்த ஆசை பலிப்பதற்கு, இந்தக்கதைகள் மிகுதியும் உதவும் என்பது என் நம்பிக்கை.

இந்தக்கதைகளை படிக்க கேட்ட நண்பர் ஒருவர் வெகு அழகாக தமது கருத்தைச்சொன்னார். 'கதைகள் துவக்கத்தில் வெகுவிரிவாக ஆரம்பமாகின்றன. முடியும்பொழுது, சட்டென்று முடிந்து போகின்றனவே' என்று அவர்சொன்னார். அவருடைய முடிவு சரியானதே. நான் அவருக்கு சொன்ன சமாதானத்தை, விளக்கிச் சொல்லவே, இந்த முன்னுரை எழுதினேன்.

'கணபதிராயன், எனக்கு தூக்கம் வருவதற்காக, இந்தக் கதைகளை சொன்னான். எனக்கு தூக்கம் வரும்பொழுதும், அவன் கதையை நீட்டிக் கொண்டுபோக முடியுமா? எனக்கு கொட்டாவி வருவதைப்பார்த்தால், அவன் ஆனந்தம் அடைவான். வெயிலில் காய்கிற சாமான்களை, மழை வருவதைப் பார்த்து, பட படவென்று எடுப்பதைப்போல, கணபதிராயன் என் கொட்டாவியைக்கண்டு, கதையை சட்டென்று முடித்துவிடுவான்' என்று நான் நண்பரிடம் சொன்னேன்.

இந்தக் கதைகளை படிக்கும் நண்பர்கள், இந்த சமாதானத்தை ஏற்றுக் கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன்.

நுங்கம்பாக்கம்,
சென்னை.

வ. ரா.

கற்றது குற்றமா?

கணபதிராயன் சொன்னதாவது :—

ஒரு சமயம் எனது தனிச்சவாரியிலே, திருக்குற்றாலத்துக்குப் போயிருந்தேன். அந்த வருஷம் பருவம் அபரிமிதமான அற்புதத்துடன் கூடியிருந்தது. சாரலும் மழையும் ஏதேஷ்டம். வீழ்ச்சி ஆகாய கங்கையைப்போல மிக்க அழகு வாய்ந்து பார்ப்பவர் மனதைக் கவர்ந்தது.

எதிர்பாராமல் அந்த வருஷம் ஏகப்பட்ட கூட்டம். காலி பங்களாவே கிடையாது. பெரிய மனிதர்கள் பங்களாக்களுக்காக அலைகின்றார்கள். சாதாரண மனிதர்கள் தங்குமிடத்துக்கு திண்டாட்டம். இருந்தாலும் மனித இயற்கை எந்த சந்தர்ப்பத்திலும் ஏமாந்து போகுமா? எட்டுப்பேர்கள் என்று கண்டிப்பான உத்திரவு, கொட்டை எழுத்துக்களில் ரயில் வண்டிகளில் பொறிக்கப்பட்டிருக்கிறது. கலியாண தேதி காலங்களில், தேர் திருவிழா நாட்களில், அந்த எட்டுப்பேர் வண்டிகளில் எத்தனைபேர்கள் ஏறி உட்கார்ந்து கொண்டு விடுகிறார்கள்?

வந்தவர்களுக்கு இடங்கொடுக்கும் பராக்கிரமம் பண்டைக்காலத்து சங்கப்பலகைக்குமட்டும் என்று நாம் எண்ணக்கூடுமா? ரயில்வண்டி முதல் எல்லாச் சங்கதிகளிலும் ஹிந்துக்களின் இயற்கையே இதுதான். தங்களையே நொந்துகொண்டும், பிறரையும் மனதிற்குள்ளாகவும் வாயைவிட்டும் திட்டிக்கொண்டும் உதவிசெய்து விடுவார்கள். ஹிந்து பொதுக் குடும்பவாழ்க்கையைத்தான் எடுத்துக்கொள்ளுவோமே. ஒரு குடும்பத்துக்கு ஐந்து வீடுகள் சொந்தமாயிருக்கும். என்றாலும் ஒரு சிறிய வீட்டில் ஐந்து குடும்பத்தாரும் ஒன்றாகச்சேர்ந்து குடியிருப்பார்கள். ஐந்து பேர்கள் தாராளமாய் சௌகரியமாய்ப் படுத்துக்கொள்ளக்கூடிய இடத்தில் பன்னிரண்டு பேர்களுக்குமேல் நெருக்கிக்கொண்டு படுத்துக்கொள்ளுவார்கள். இதில் ஒரு பகுதி பிரிந்துபோய்

இன்னொரு வீட்டில் குடியிருந்தால் என்ன? மாட்டார்கள். ஏன்? பொதுக்குடும்பப் பாச பந்தம் அவர்களைக் கூட்டி வைத்து கொல்லுமே யல்லாமல், பிரித்து வைத்து வாழ வைக்காது. ஏழையான பொதுக் குடும்பத்தைப்பற்றி சொல்லத் தேவை இல்லை. ஒருவன்தான் சம்பாதிப்பான். ஒன்பது பேர்கள் அவனுடைய சம்பாதனைத்துக்காக காத்துக்கொண்டிருப்பார்கள். இவர்கள் தனித்தனியே பிரிந்து போய் சுயமே, சம்பாதித்து வாழ்க்கை நடத்தினால் என்ன? காடிக்கஞ்சியை பொதுவாக மூடிக்குடிக்கலாம் என்று அந்த ஒன்பதில் ஒவ்வொன்றும் உளறும்!

ஆனால் பொதுக்குடும்ப பாசமிருக்கிற ஹிந்துக்கள் ஒரு ஊரில் ஒத்து வாழ்வதுமட்டும் கிடையாது. அது எந்த விபரீதத்தின் விளைவோ, யார் கண்டார்? காடிக்கஞ்சிப் பழமொழி ஊருக்குமாத்திரம் பொருந்தாதுபோலிருக்கிறது. ஊருக்கு ஏன் போகவேண்டும்? மேலத்தெருவிற்கும் கீழத்தெருவிற்கும் சண்டை. நடுத்தெருவுக்கும் ஓரத்து வீதிக்கும் மனஸ்தாபம். காமன் பண்டிகையில் எரிந்த கட்சியா எரியாத கட்சியா என்ற கூப்பாடு; அடுத்தாற்போல மனஸ்தாபம்! பிறகு கள் சாராயக்கடைப் பிரவேசம்! அடி தடி சண்டை! ஆஸ்பத்திரியில் டாக்டர் ஸர்ட்டிபிகேட்! வக்கில்வீடு! மாஜிஸ்ட்ரேட் கச்சேரி! பணச்செலவு! புத்தி கொள்முதல்! ராஜி!! அடுத்த வருஷமும் இதே சண்டை. சக்கரம் மட்டும் நிற்காமல் அழகாயும் விநோதமாயும் சுற்றிக்கொண்டேவரும். அன்பே உருவான பொதுக் குடும்ப வாழ்க்கையின் விபரீத பலன்களில் இது ஒன்று. இது பொது வாழ்க்கையின் நேரான பலன் என்று நான் சொல்லவில்லை. பொதுக் குடும்பத்திலே ஊறுகின்ற அன்பு, அந்த வீட்டு வாயிற்படி வருவதற்குள்ளேயே வறண்டு போகின்றதே என்று வருத்தப்படுகிறேன். ஆனால் தேர் திருவிழாக்களிலும் ரயில் வண்டிகளிலும் எப்படியோ அதிகமாக சண்டைபோடாமல் ஒத்துப்போய்விடுகிறோம்.

நான் திருக்குற்றாலத்துக்குப் போன வருஷத்தில் ஜன சந்தடி மிகுதியும் அதிகம் என்று சொன்னேனே, இடக் கஷ்டத்தைச் சொல்லி முடியாது. நகரங்களில் ஒரு வீட்டில்

தனித்தனியே ஒன்பது குடிகள் இருப்பதுபோல எல்லா வீடுகளிலும் ஜனங்கள் நிறைந்திருந்தார்கள். தனவந்தர்கள் வசித்து வந்த பங்களாக்களிலும் நெருக்கம். சகோதர தனவந்தர் அசட்டுச் சிரிப்பு சிரித்துக்கொண்டு இடம் கேட்டால், ஏனைய தனவந்தர் மாட்டேன் என்று சொல்லமுடியுமா? அதுவும் மோட்டார்காரை தமது பங்களா வாசலில் பார்த்த பிறகு! நடுத்தர ஜனங்களும், சாதாரண மனிதர்களும், தெருவில் இடங்கிடைக்காமல் தவித்து நிற்பவர்களை, தாங்களே அவர்கள் பரிதாபக்கோலத்தைக்கண்டு வலுவிலே வீடுகளுக்கு அழைத்துக்கொண்டு போய்விடுவார்கள்.

இந்த நிலையில் என்கதி என்ன! "சமயத்துக்கு உதவ வேண்டும். எனவே வாடகை வேண்டாம்" என்று பூட்டி வைக்கப்பட்டிருந்த ஒரு சிறு பங்களா எனக்கு கிட்டியது. நான் அதற்கு வாடகை கொடுக்கவில்லை. நாடோடியான நான் எத்தனை ஊர்களிலும் தங்கும்போதெல்லாம் வாடகை கொடுப்பது? என்றால் கொடுக்கமுடியுமா? அந்த சிறு பங்களா திருநெல்வேலி டவுனில் வசிக்கும் ஒரு தனவந்தருடையதாகும். அவர் எனக்குத்தெரிந்தவர். குற்றாலத்தில் ஒரு மாதத்திற்கு தங்கவேண்டும் என்ற எனது ஆசை அவருக்கு எப்படியோ தெரிந்துபோயிற்று. அவர் தமது பங்களாவை எனக்கு தற்காலிகமாக தானம் செய்தார். நானும் அவருடைய நாகரிகப் பிச்சையை நாசூக்காய் ஏற்றுக்கொண்டேன். சாவியைப் பெற்றுக்கொள்ளக்கூடிய இடத்தையும் எனக்கு குறிப்பிட்டுவிட்டு அந்த இடத்துக்கும் கடிதம் எழுதினார். இது பருவகாலத்துக்கு நெடுநாள் முன்னதாகவே நடந்த நிகழ்ச்சி.

திருநெல்வேலி ஜில்லாவில் எங்கெல்லாமோ, சுற்றிவிட்டு, பருவகால சமயத்துக்கு திருக்குற்றாலம் வந்து சேர்ந்தேன். எனது தனவந்த நண்பர் தமது மனதை மாற்றிக்கொண்டு பங்களாவை வாடகைக்கு விட்டு விட்டாரோ என்று எனக்கு சிறிது சந்தேகமுண்டு. ஏனெனில் தனவந்தர்களுக்குமறதியும் பெரிய இடத்து தாட்சிண்யமும் அதிகம். அது எனது நீண்டகால அனுபவமாகும். அவர்களுடைய சொல்லைக்கொண்டு, நான் எந்தக்காரியத்திலும் இறங்கி

விடுவதில்லை. ஒரு சமயம் ஒரு கனவானிடம் அவருடைய வண்டியைக் கேட்டிருந்தேன். சரியென்று அவர் உத்திரவு கொடுத்தார். ஒரு நாழிகை சென்றதும், வண்டியைப்போய்ப் பார்க்கையில், வண்டி இல்லை. கனவானைக்கேட்டேன். 'ஒரு பெரிய மனிதர் தம்மை கேட்காமலே, வண்டியை கட்டிக் கொண்டு போய் விட்டார்' என்று சொல்லி அவர் பரிதபித் தார். அவர் சொல்லியதில் பொய் கிடையாது என்பது எனக்குத் தெரியும். பணக்காரன், ஏழைப்போக்கிரிக்கு பயப்படவேண்டும்; சகோதர தனவந்தன் சொல்லை தட்ட முடியாது; ஸர்க்கார் சில்லரைச்சிப்பந்திகள் முதல் ஜில்லா கலெக்டர் வரையில் எல்லாரிடமும் குனிந்து சலாம் செய்து பிழைக்க வேண்டும்.

இந்த நாட்டுப் பணக்காரன் வந்த பாதையின் கோணல் அது! அவன், பாபம்! என்ன செய்வான்? அவனுடைய உடம்பில் முதுகெலும்பைத் தவிர, மற்ற எல்லா எலும்பு களும் நெருக்கமாகவும் கெட்டியாகவு மிருக்கின்றன. முது கெலும்புமட்டும் கிடையாது. ஆண்டவன் சிருஷ்டியில் பழுக் குறைவு போலும்! என் மனதில் சஞ்சலப்பட்டுக்கொண்டே, சாவியிருந்த தென்காசி வீட்டை நோக்கிப் புறப்பட்டேன். அந்த வீடு பூட்டியிருந்தது. வீட்டுக்காரர் வெளியே சென் றிருந்தார். 'சாமி வரம்கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்க வேண்டாமா' என்று நினைத்து, அலைந்த களைப்பு தீர, அங்கேயே திண்ணையில் படுத்துறங்கிவிட்டேன். தூங்கும் போது வண்டி நின்ற சப்தம் போலவும் குழந்தைகள் சிரித்து விளையாடும் சப்தம் போலவும் காதில்படவே விழித்துக்கொண்டேன். காதில்பட்ட சப்தங்கள் உண்மை யெனக் கண்டு, சந்தோஷமடைந்தேன்.

வண்டியில் வந்த தென்காசி கனவான், என்னைப் பார்த்தவுடன், யாரென்று கண்டு கொண்டு, சந்தோஷித்து உபசாரமெல்லாம் செய்து, அவர்கள் வீட்டிலேயே போஜ னம் செய்வித்து, மற்றப்படி வேண்டிய வசதியெல்லாம் செய்து தருவதாகவும் சொன்னார். அவருக்கும் பங்களா கொடுத்த கனவானுக்கும் எனது வந்தனத்தை தெரிவித்துக் கொண்டேன். தன் வண்டியிலேயே போகலாம் என்று

சொல்லி, அந்த நண்பர் என்னை அவருடைய வண்டியில் எனக்கென காலியாக வைக்கப்பட்டிருந்த பங்களாவில் கொண்டுவந்து விட்டு, 'வேண்டிய வசதிகளுக்கெல்லாம் எழு துங்கள். ஒரு வேலைக்காரன் வேண்டுமானாலும் அனுப்பு கிறேன்' என்று சொல்லிவிட்டு விடைபெற்றுச் சென்றார்.

பங்களாவை எனது வசம் செய்துகொண்ட நான், பங் களா, அருவியின் பக்கத்திலேயே அழகானதாகவும் சிறிய தாகவும் சுத்தமாகவும் அது இருந்தது கண்டு, சந்தோஷ மடைந்தேன். பிறகு படுக்கையை விரித்துப் படுத்துக் கொண்டேன். மழை தாரை தாரையாக பெய்தது. சார லின் வேகம் அற்புதம். இவ்விரண்டையும் பங்களாக்குள் ளிருந்தே அனுபவிக்க வேண்டுமென்பது என் எண்ணம். பங்களாவில் சாரல் நுழையாத இடம் உண்டா? இல்லை. குற்றாலத்து மழை பெரியார்களின் கோபத்தைப்போல. நிமிஷத்தில் தோன்றும்; நிமிஷத்தில் மறையும். பெய்தால், நெல்லூர்ப் பசுக்கள் பால் பொழிவதுபோல பொழிந்து தீர்த்துவிடும்.

மழை நின்றதும், இரண்டு பேர்கள் பங்களாவில் நுழைந்தார்கள். அவர்களில் ஒருவர் ஆண்; மற்றவர் பெண். ஆணுக்கு வயது சுமார் 25 இருக்கலாம். பெண்ணுக்கு இருபதுக்கு மேற்படாது என்பது என் மதிப்பு. இருவரும் புருஷன் மனைவியைப்போல காணப்பட்டார்கள். முத விலே அதைக்கூட என்னால் நிச்சயமாய் நிதானிக்க முடிய வில்லை. அவர்களிருவரும் கூச்சம் சிறிது மில்லாமல் சிரித்து விளையாடிக்கொண்டிருந்தார்கள். அந்த ஆண் மகன் ஏதோ சொல்ல, அவள் அவன் கன்னத்தில் பாவனை அடி அடித்தாள். அதிலிருந்து அவர்கள் சகோதர சகோதரிகளோ தோழர்களோ அல்லவென்று மதித்துக்கொண்டேன். ஆனால் அவர்கள் மாமூல் புருஷன் பெண்சாதியைப்போல் நடந்து கொள்ளவில்லை. எனவே, எனக்கு அது சிறிது வியப்பா யிருந்தது. எந்தப்பொருளில் ஒருவனுக்கு வியப்புதோன்று கிறதோ, அந்த பொருளைப்பற்றி விசாரிக்கவேண்டுமென்ற ஆவல் பிறப்பது இயற்கையல்லவா? ஆனால் நானாக எதையும் வாய்விட்டு கேட்க இஷ்டப்படவில்லை.

படுக்கையிலிருந்தபடியே கால்களை இன்னும் கொஞ்சம் அதிகமாக நீட்டிப்படுத்துகொண்டு, அவர்களை கவனித்துக் கொண்டிருந்தேன். என்னைப்பற்றி அவர்கள் ஏதோ பேசிக் கொண்டிருப்பதாக மட்டும் அவர்களின் சம்பாஷணையின் ஜாடையிலிருந்து தெரியவந்தது. என்னைப்பற்றி லேசாகக் கேலிசெய்கிறார்கள், சிரிக்கிறார்கள் என்ற சந்தேகமும் எனக்கு உண்டாயிற்று. என் சந்தேகம் தப்பிதமாயுமிருக்கலாம் என்று சும்மாயிருந்தேன். ஆனால் படுக்கையை சுற்றிவைத்துவிட்டு, அவர்களை ஒருமுறை பார்த்தேன். இதற்காகத்தான் அவர்கள் காத்திருந்தவர்கள்போல 'வரலாமா' என்று கேட்டுக்கொண்டே, உள்ளே நுழைந்தார்கள். வாருங்கள் என்று வரவேற்றேன். வந்து, பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார்கள். அவர்களிருவரையும் பார்ப்பது என் கண்களுக்கு நல்விருந்தாயிருந்தது. அவர்களிருவருக்கும் கபடம் அதிகமாயிருந்ததாக அவர்கள் முகத்திலிருந்து தெரியவில்லை. இருவரும் நல்ல ஜோடி.

முதலிலே, அந்தப்பெண் பேசினாள். "உங்கள் உறக்கத்தை நாங்கள் கலைத்துவிட்டோம் போலிருக்கிறது; மன்னிக்கவும். 'சென்ற ஐரோப்பியப் போர்க்காலத்தில், துவக்கத்தில் டாக்டர் பெத்மன் ஹால்வெக் என்று முதல் மந்திரி ஒருவர் இருந்தது உங்களுக்கு தெரிந்திருக்கும். பெல்ஜியத்தினுள்ளே அனுமதியின்றி ஜெர்மன்சேனை நுழைந்து, ஒரு நாளிருக்கும். அந்த சமயத்தில் முதல் மந்திரியார் ஹால்வெக், ஜெர்மன் பார்லிமெண்டில் பேசும்போது, 'தேவை எந்த சட்டத்தையும் அனுசரிக்காது. (ஆபத்துக்குப் பாபமில்லை). நம்முடைய சேனைகள் ஏற்கனவே பெல்ஜிய நாட்டுக்குள் புகுந்து விட்டன' என்றார். அவசியமிருந்தால், அயலார் வீட்டில் அழைப்பின்றி, அனுமதியின்றி ஆக்கிரமிக்கலாம் என்ற பெரிய இடத்து தர்மசாஸ்திரத்தை கைக்கொண்டு உள்ளே நுழைந்து விட்டோம்" என்றாள். அவள் சிலேடையாகவும் சிரித்துக்கொண்டும் சொன்னதின் பொருள் எனக்கு விளங்கிவிட்டது. மழைக்காகமட்டும் அவர்கள் அங்குவந்து தங்கவில்லை என்பது எனக்கு வெட்டவெளிச்சமாயிற்று.

குற்றலத்தில் இடப்பஞ்சத்தால் அவர்கள் என்னிடம் வந்திருக்கிறார்கள் என்று தெரிந்துகொண்டேன்.

ஆனால் வந்தவர்களின் வேலையை முன்கூட்டியே தெரிந்துகொண்டு பதில் சொல்லத் துவக்குவது அனாவசியமான ஆத்திரத்தையும் அநாகரிகத்தையும் காண்பிப்பதாகும் என்பது என் சித்தாந்தம். வந்தவேலை தெரிந்தால் என்ன சொல்லுவது, என்னசெய்வது என்பதை முடிவுசெய்து கொள்ளலாம். ஆனால் காலத்துக்கு முன்னே வெளியிடுவது அவ்வளவு மரியாதை இல்லை, வந்தவர்களுக்கு. ஆனால் அந்தப் பெண் நன்றாக ஆங்கிலம் படித்தவள் என்பதை நான் தெளிவாகத் தெரிந்துகொண்டு, சும்மாயிருந்தேன். அவள் ஆணை மௌனமாய் வைத்துவிட்டு, தானே பேசியது எனக்கு புதிதாயிருந்தது. ஆனால் அது ஆபாசமாய் மனத்தில் படவில்லை. ஏனெனில் அவள் குரலிலும், பார்வையிலும், சொற்களிலும் யாதொரு ஆபாசமும் தென்படவில்லை. குரல் வினயத்தோடு கலந்து கணீரென்றிருந்தது. பார்வை தெளிவு. சொற்கள் தெளிவாயும் கம்பீரமாயு மிருந்தன. அவள் சொன்னதற்கு நான் பதில் சொல்லவேண்டாமா?

"நீங்கள் சொல்லிய சட்டம் உலகம் தோன்றியது முதல் இருக்கிறது. அதற்கு பலவந்தம் என்று முட்டாள் உலகம் பெயர் கொடுத்திருக்கிறது. அத்தகைய பலவந்தம் வல்லான் வகுத்த வாய்க்காலாகும். அதை எதிர்ப்பது மடமை. எதிர்க்காம லிருக்கமுடியாது, இயற்கைக்கு பொருந்தாது. வழக்கத்துக்கு விரோதம். ஆனால் புதியமாதிரி பேசி நடப்பதால், உங்களுக்கு தோற்றுப்போக எனக்கு மனமில்லை. உங்கள் ஆக்கிரமிப்பு, குழந்தை பாலுக்கு அழுவதுபோல. அதைக்கண்டு தாய் எப்பொழுதேனும் மனம் நொந்துபோவாளா? நானும் உலகத்தில் ஒருவனல்லவா" என்றேன்.

'தாயினிடத்தில் குழந்தைகளுக்கு கூச்சமும் வெட்கமும் ஏது? தாயைக்கண்டு கூச்சப்படும் குழந்தை இயற்கைக்கு மாறாக பிறந்ததாகும். நாங்கள் பேசுவதும் நடப்பதும் புதுமாதிரியாக உங்களுக்கு தோன்றினாலும், இயற்கைக்கு விரோதமல்லவே? பழைய வழக்கத்துக்கு மாறாக விருக்கலாம்' என்றான் அந்த ஆண்மகன்.

'இல்லை; உங்கள் மனதை தாராளமாய் வெளியிடலாம். நான் என்னாலானதை செய்ய காத்துக்கொண்டிருக்கிறேன்' என்றேன்.

'எங்களுக்கு இருக்க, இந்த பங்களாவில் இடம் வேண்டும்' என்று பேச்சை வளைக்காமல், வளர்க்காமல், அந்தப் பெண் கூறினாள்.

'இந்த இடத்தை உங்களுடன் பங்கிட்டுக்கொள்ளத் தயார்' என்றேன்.

இருவரும் சந்தோஷமடைந்தார்கள். 'பங்கிடுவதில் நீங்கள் சாமர்த்தியசாலியாயிருப்பதால், இந்த வீட்டில் நாங்கள் இருக்கும் வரையில் தயாராகும் உணவையும் நீங்கள் பங்கிடவேண்டும்' என்று அந்தப்பெண் சிரித்துக்கொண்டு சொன்னாள்.

அதற்கும் நான் பின்வாங்கவில்லை. "நான் ஒண்டியென்பதை நீங்கள் கண்டு கொண்டதைப்பற்றி எனக்கு சந்தோஷம்" என்றேன்.

'நாங்களும் இந்த உலகத்தில் வாழ்ந்து வசிப்பவர்கள் தான்' என்றான் ஆண்பிள்ளை.

'பெரிய உலகமே நம்மைக் கூட்டிவைக்கும் பொழுது, சிறிய சிந்தனைகள் நமக்கு எதற்கு? உங்கள் சாமான்களை மறு மழை வருவதற்குள் கொண்டுவந்து சேர்த்துவிடுங்கள். வேண்டுமானால் நானும் ஒத்தாசைக்கு கூடவருகிறேன். அதில் ஏன் என் பங்கை குறைத்துக்கொள்ளவேண்டும்' என்றேன்.

'நீங்கள் பங்களாவுக்கு காவலாக இருங்கள். நாங்கள் ஒரு நொடியில் வந்து விடுகிறோம்' என்று அவர்கள் வெளியே சென்றார்கள்.

இந்த விநோத ஜோடியைப்பற்றி சற்று நேரம் சிந்தித்துக் கொண்டிருந்தேன். அவர்களைப்பற்றி நினைக்க நினைக்க எனக்கு சிரிப்பும் சந்தோஷமும் கலந்து வந்தன. ஆணும் பெண்ணும் இந்த ஜோடியிலேதான், பாரதியார் சொல்லுவது போல, சரிநிகர் சமானம். மாடுகளிலும் மனைகளிலும் ஜோடி அமைவது சிரமம் என்று கிராமத்தார் சொல்லுவார்கள்.

இந்த ஜோடி எப்படி அமைந்தது, யார் பொறுக்கிச் சேர்த்தார்கள் என்று அறிய எனக்கு ஆவல் ஏற்பட்டது. அதைக் கேட்பது நாகரிகமாயிருக்குமா? ஆணுக்குப் பெண் சளைக்காத இந்த ஜோடியை பார்த்தாலும், மனிதவர்க்கத்தின் பிணியும் பஞ்சமும் அடியோடு பறந்துபோகும். இந்த ஜோடி தேங்காயைப்போல! உடைந்தால் இரண்டு சமமான மூடிகளாகத்தானிருக்கும். என் பாக்கியத்தைப்பற்றி நினைத்து சந்தோஷப்பட்டேன். எங்குசென்றாலும், பார்ப்பதற்கும் விசாரிப்பதற்கும் ஒரு விநோதம் கண்களில்படுகின்றதே என்று கருதிக்கருதி களிப்படைந்தேன். பெண் ஆங்கிலத்தில் பெரும் படிப்பாளியாயிருப்பின், ஆணுடைய லட்சணம் எத்தகையதாயிருக்கும்?

ஜெர்மனி தேசத்து மகாகவி கதே ஒருவர்தான், வேண்டுமென்றே படிப்பில்லாத பெண்ணை மணந்ததாக சரித்திரம் கூறுகின்றது. கதே தமது பின்வாழ்வில் மிகவும் வருந்தினார். ஸோக்ரதர் என்ற மகா ஞானி, அறிவில்லாத முரட்டுப் பெண்பிள்ளையை கலியாணம்செய்து, மிகவும் கஷ்டப்பட்டார். ஸோக்ரதரைப்பற்றி ஒரு சிறுகதை சொல்லுவதுண்டு. அது உண்மையிலேயே நடந்ததாம். ஸோக்ரதரின் நாகரிகமில்லா மனைவிக்கு தன் புருஷனின் அருமை தெரியவில்லை. அவள் அடிக்கடி புருஷன்மீது கோபம்கொண்டு அவரைத் திட்டுவாள். ஒருநாள் அவள் கோபம் அளவுக்கு மிஞ்சிப்போயிற்று. துடைப்பத்தால் ஸோக்ரதரின் தலையில் அடித்தாள். பிறகு சாணி நீரை தலையில் கொட்டினாள்.

ஞானி சிரித்தார். பக்கத்திலிருந்த நண்பரிடம் 'முதலில் இடி இடித்தது. பிறகு மழை பெய்தது' என்று சிரித்துக்கொண்டே சொன்னாராம். மகாமேதாவிகளுக்கு மேற்கூறிய வாழ்க்கைச் சங்கடம் நேருவது சகஜம். மேதாவிகளை நேரே அளவிடும் அறிவும் ஆற்றலும் அவர்களின் மனைவிமார்களுக்கு உண்டாவதில்லை, இருப்பதில்லை. ஆனால் சராசரி ஆணுக்கும் பெண்ணுக்கும் இத்தகைய இடுக்கண் நேருவதில்லை. நானிருந்த பங்களாவை பங்கிட்டுக்கொள்ள வந்த ஜோடி, சராசரி இனத்தை சேர்ந்ததாகும். உலகத்

திலே சராசரி மனிதன்தான் உயர்ந்தவனாகும். எல்லாக் குணங்களும் பிரியப்படத்தக்க அளவில் அவனிடமிருக்கும். சராசரி மனிதன் எல்லோருக்கும் நண்பன். எல்லோருடைய தன்மைகளும் இவனிடத்தில் ஓரளவுக்கு இருப்பதால், இவனைக்கண்டால் பிரியமும் நம்பிக்கையும் ஏற்படும். பெரிய மனிதர்களைக்கண்டால், பக்தியும் பயமும்தான் ஏற்படும்.

இவ்வாறு யோசித்துக்கொண்டிருக்கையில், ஆணும் பெண்ணும் தலைக்கு விதம் போட்டுக்கொண்டது போல, மூட்டைகளைத் தூக்கிக்கொண்டு வந்தார்கள். பின்னே, ஒரு ஆளும் சில சாமான்களை தூக்கிக்கொண்டு வந்தான். 'குடும்பம் தூக்க முடியவில்லை' என்றான் ஆண்.

'அதனாலேதான் குடும்பச்சுமை பெண்களின் தலையில் சுமந்து நிற்கிறது' என்று தனது தலையிலிருந்த சமையல் பாத்திரங்களை தொட்டுக்காட்டி, பெண் சிரித்தாள்.

'குடும்பத்துக்கு அலங்காரமான வேலையாளும் கூட வருகையில், நீ அனாவசியமாய் சுமந்தாய்' என்றான் ஆண்.

'குடும்பத்துக்கு ஆபரணம் ஆள் அல்ல. குடும்பத்துக்கு பூஷணம் விரும்பத்தக்க விருந்து' என்று என்னைப் பார்த்து சிரித்தாள் அந்தப்பெண். எல்லோரும் சிரித்தோம்.

குடும்பம் ஆர்ப்பாடமின்றி பங்களாவில் இறங்கிற்று. ஆள் திரும்பிப்போனான். சாமான்கள் அதனதன் இடங்களில் வரிசைப்படுத்தப்பட்டன. இரவு சமையலுக்கு, சிறிது நேரம் சென்றபிறகு துவக்கப்பட்டது. நான் கறி நறுக்கி கொடுத்தேன். பெண் அடுப்பு மூட்டி உலை வைத்தாள். அவள் புருஷன் நீர் கொண்டுவந்து சுற்றுவேலைகளை செய்தான். சமையலை முடித்துவைத்துவிட்டு, மூவரும் அருவிக்கு நீராட்டத்துக்கு சென்றோம். அங்கேயும் குழந்தைகளைப்போல அவர்கள் விளையாடினார்கள். அவர்களின் களியாட்டம் என்னையும் விளையாட்டுப் பிள்ளையாக அடித்துவிட்டது.

நீராட்டம் முடிந்தது. நாங்கள் இருப்பிடம் வந்து சேர்ந்தோம். அவர்களுடைய உற்சாகத்தை என்னென்று சொல்வேன்! அவர்களிடம் மனச்சோர்வு ஒருநாளும் ஏற்

படாதுபோல் தோன்றிற்று. வாழ்க்கையிலே அவ்வளவு ருசி அவர்களுக்கு! மேலும் ருசிமட்டும் இருந்து என்ன பயன்? வாழ்க்கையில் ருசிமட்டும் இருந்து, வாழும் வகை தெரியாவிடில், அது துயரத்துக்கும் பொறுமைக்கும் அஸ்தி வாரமல்லவா? இவர்களிடம் பொறுமைக்கு துளிக்கூட இடமில்லை. எப்பொழுதும் குதூகலக்கடலில் ஆழ்ந்து களிப்புடனிருப்பவர்களிடம் பொறுமை எப்படி கிட்ட நெருங்கும்? குளிர்காலத்தில் கணப்புச்சட்டியை அறையில் வைத்தால், அறைமுழுதும் சூடுகொடுத்து விடுவதைப் போல, இவர்களுடைய உற்சாகம் ஏனையோரையும் உற்சாகப் படுத்தும் தன்மையதாகும்.

ஆனால் உற்சாகம் காரணமாக யாரையும் அவர்கள் அலட்சியமாக நடத்தவும் இல்லை, பேசவும் இல்லை. என்று ஆம் நயவஞ்சக சுயகாரியப் புலிகளைப்போல் நடந்துகொள் ளவுமில்லை. தங்கள் தலையில் சாமான்களை தூக்கிவந்ததை நான் பார்த்ததும், உடல் உழைப்பின் கௌரவத்தை உணர்ந்தவர்கள் என்று முடித்துக்கொண்டேன். படித்த வர்களும் பெரியதனக்காரர்களும் பாவனை அடக்கம் காண் பித்து, வேலைசெய்வதைப்போல, அவர்கள் செய்யவில்லை. உள்ளபடியே அவர்கள், வேலையிலே இயற்கையான ஊக்கம் காண்பித்தார்கள். நிமிஷத்துக்கு நிமிஷம் அவர்களைப்பற்றி என் மனத்தில் மதிப்பு உயர்ந்துகொண்டே வந்தது. அவர் களைப்போல ஏனையோரும் வாழ கற்றுக்கொண்டால், உல கம் இனிமையாகத்தோன்றாதா என்று எண்ணிக்கொண் டேன் தனி மரம் தோப்பாமா?

இருப்பிடம் வந்ததும் 'சாப்பிட நேரம் வந்துவிட்டதா அல்லது இன்னும் கொஞ்சம் நாழி ஆகட்டுமா' என்று அந்தப்பெண் கேட்டாள்.

'அதிருக்கட்டும். உங்கள் பெயரைக்கூட இன்னும் தெரிந்து கொள்ளாமல், நான் எவ்வளவுகாலம் பொறுத் திருக்கமுடியும். உங்கள் பெயர்கள்' என்றேன்.

'அவர் பெயர் கோபாலன். என்பெயர் தங்கம்மாள். நாங்களிருவரும் (ஐரோப்பியர்கள் சொல்லிக்கொள்வது

போல) சேர்ந்து முழுப்பொருள் ஆகிவிட்டோம்' என்று அந்தப் பெண் சொன்னாள்.

'பாரசீக நாட்டிலே ஆண்கள் வேலைசெய்யாமல், சோம் பிக்கிடந்து ஹுக்கா பிடித்துக்கொண்டிருப்பார்களாம். பர்மாவிலும் அவ்வாறு என்று சொல்கிறார்கள். நாங்கள் இருவரும் முழுப்பொருள் ஆனபிறகு, எனக்கு இந்த அம் மாள் வேலையே வைப்பதில்லை. எனக்குத் தடை உத்திரவு போட்டுவிட்டார்கள். முழுப்பொருளில் நான் எவ்வளவு பகுதி என்பது உங்களுக்கு தெளிவாக விளங்கிவிட்ட தல்லவா' என்று கோபாலன் சிரித்துக்கொண்டு கூறி னான்.

'ஒவ்வொரு ஜோடியிலும் சப்பை மாட்டை நல்லமாடு இழுத்துக்கொண்டுபோகும்' என்று நீங்கள் கேள்விப்பட்ட தில்லையா' என்றாள் அவள்.

'ஆம், கேள்விப்பட்டது மாத்திரம் இல்லை. பார்த்து மிருக்கிறேன். கொண்டி மாடு சப்பை மாட்டை இழுத்துக் கொண்டு போய், படுகுழியில் தள்ளுவதை' என்றான் கோபாலன். எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தோம். மேலும் கோபாலன், 'உலகமே பெண்களுக்கு சொந்தம். அவர்கள் ஆண்களை, பலவித வேஷம் போட்டுக்கொண்டு ஆடச்சொல்கிறார்கள். ராஜபார்ட் போட்டுக்கொண்ட ஆண், தான் உண்மை ராஜா என்று எண்ணிக்கொள்கிறான். பெண் கள் உலகத்தின் வில்முடிக்கிகள். அவர்கள் ஆண்களைக் கவிகளாகவும் வீரர்களாகவும், உத்தியோகஸ்தர்களாகவும் உழவர்களாகவும், வக்கீல்களாகவும் வைத்தியர்களாகவும் இன்னும் எண்ணரிய, சொல்லரிய வேஷதாரிகளாகவும் அமைத்து உலகத்தை ஆட்டிவருகிறார்கள். அதைத்தெரிந்து கொள்ளாமல், ஆண்களும் கூத்தாடுகிறார்கள். அப்படி யிருக்க நான்மட்டும் அந்த விதிக்குத்தப்பி நடக்க முடியுமா' என்றான்.

'இம்மாதிரியே பொய் ஸ்தோத்திரம் செய்து, பெண் களை ஆண்கள் அடிமைகளாக்கிவிட்டனர். ம-ா-ா-ஸ்ரீ கோபா லன் அவர்கள் சொல்லுவதை தாங்கள் நம்பவேண்டாம்!

எச்சரிக்கை செய்கிறேன்' என்றாள் தங்கம்மாள். மீண்டும் சிரிப்புத்தான்.

'உங்களுக்குள் மத்தியஸ்தம் செய்யமுடியாது. மனத் தாங்கலுக்கு மத்தியஸ்தம் செய்யலாம். மனப்பூரிப்புக்கு மத்தியஸ்தம் செய்ய யாரால் ஆகும்? செய்யத்துணியும் சாது, முட்டாள் பட்டம் பெறுவான்' என்றேன். எல்லாரும் சிரித்தோம்.

'நல்லது. உங்கள் நட்பு எனக்கு கிட்டியது எனது பெரும்பாக்கியம். நீங்கள் ஜோடி சேர்ந்த கதையைக்கேட்க எனக்கு மிகுதியும் ஆவல். சொன்னால் கேட்கிறேன். ஆனால் நீங்கள் இப்போதிருப்பதைப் பார்த்தால், இருவரும் போட்டி போட்டுக்கொண்டு, என்னை முழுமுட்டாளாக அடித்து விடுவீர்களோ என்ற பயம் எனக்குண்டு' என்றேன்.

'நான் சொல்லட்டுமா? அல்லது—' என்று சொல்லி, தங்கம்மாள் கோபாலனின் முகத்தைப் பார்த்தாள்.

'பெண்களின் பார்வை ஆண்களுக்கு கட்டளையாகும். உனது கட்டளையை சிரமேற்கொண்டு நானே சொல்லுகிறேன். நீயே சாட்சி. நீயே காரணம்' என்றான் கோபாலன்.

சாப்பிட்ட பிறகு ஆகட்டும் என்றாள் தங்கம்மாள். 'சித்தம்' என்றான் கோபாலன்.

மீண்டும் எல்லோரும் சிரித்தோம். எவ்வளவு நேரம் தான் சிரித்துக்கொண்டிருக்கமுடியும்? அந்த ஜோடியைக் கண்டாலே, எனக்கு சிரிப்பு தானாக வரும். கேலிச் சிரிப்பு அல்ல. உள்ளப் பூரிப்பிலிருந்து எழும் உற்சாகச் சிரிப்பு. அவர்களுடன்கூட இருந்தால் ஊண் உறக்கமின்றி உற்சாகத்தின்மூலமே வளர்ந்து, வாழ்க்கையை கழித்துவிடலாம். ஜோடியிலே ஒருவருக்கொருவர் சளை என்பதில்லாமல் இருக்கின்றனர். காட்டை வெட்டிக்கொண்டுவா என்றால் மலையையும் சேர்த்து கட்டிக்கொண்டுவந்து விடுவார்கள் இந்த ஜோடி. அவர்களிடம் அவ்வளவு ஜீவதாது நிரம்பியிருந்தது. ஜீவதாதுவுக்கே, தனியான மகிமையும் பெருமையும் உற்சாகமும் இருப்பதை, இந்த ஜோடியிடமிருந்து தெளிவாக தெரிந்துகொண்டேன்.

சாப்பிட ஆரம்பித்தோம். தங்கம்மாள் பரிமாறினாள். 'சமையல் எப்படியிருக்கிறது' என்றாள். 'தங்கம் கலந்ததில் தாமிரம் இருக்குமா? தங்கம் கை வைத்தது தேனைப் போல ஆகிவிடாதா' என்றான் கோபாலன்.

'கோபாலன் நாக்கு, கீதம் நிறைந்த புல்லாங்குழல். அது எப்பொழுதும் துதிநிறைந்த கானம் செய்துகொண்டுதானிருக்கும். நீங்கள் சொல்லுங்கள்' என்றாள் தங்கம்மாள்.

'கோபாலன் சொன்னது கற்பனையாக விருக்கலாம். ஆனால் அவர் மிகைப்பட கூறவில்லை. என் நாக்கு பட்டவர்த்தனமான நாக்கு. அதற்கு இந்த சமையல் நன்றாக இருக்கிறது' என்றேன்.

'உங்களைப்போல் கோபாலன் சொல்லக்கூடாதா' என்றாள் தங்கம்மாள்.

'எல்லோரும் ஒரேமாதிரி யிருந்தால், பிரம்மாவின் வேலை எளிதாகிவிடாதா? சிருஷ்டியில் அழகும் ஆனந்தமும் இருக்குமா? அல்லது எனக்கும் உனக்கும் வாக்குவாதம் ஏற்படுமா? அதைப்பார்த்து நமது நண்பர்தான் சிரிப்பாரா' என்றான் கோபாலன்.

சாப்பாடு முடிந்தது. 'கதை சங்கதி என்னவாயிற்று' என்றாள் தங்கம்மாள்.

சித்தம் என்றான் மறுபடியும் கோபாலன்.

'நமது நண்பரைப்பார்த்தால் மிகவும் களைப்படைந்தவர்போலிருக்கிறார். இரண்டு மூன்று நாளாய் உறக்கமில்லை போலிருக்கிறது. இரவு கழிந்து, பொழுதுவிடிந்ததும்' என்று தங்கம்மாள் சொல்லுவதற்குள், 'சூரியன் உதயமாகும். நீராடச் செல்லலாம்' என்றான் கோபாலன். 'அப்படியானால், அதன் பிறகு கதை' என்றாள் தங்கம்மாள் தோற்றுப் போகாமல். அவர்கள் விளையாட்டு எனக்கு வெகுவினோதமாயிருந்தது. "கேலியாகப்பேசினாலும், தீர்ப்பு தீர்ப்புத்தான். நாளைக்காகட்டும்" என்று சொல்லி படுக்கையை எடுத்துக்கொண்டு, வெளி வரண்டாவில் படுத்துக்கொண்டு நிமிஷப்பொழுதில் உறங்கிப்போனேன்.

மறுநாள் காலையில் நான் எழுந்திருக்குமுன், அவர்களிருவரும் எழுந்து, வீடுமுழுதும் கூட்டி மெழுகி, சுத்தம் செய்துவிட்டு, நான் படுத்திருந்த இடத்தைமட்டும் விட்டு வைத்திருந்தனர். என் பங்கை, நான்செய்ய அவர்கள் விடவில்லை. அவர்களே செய்தார்கள். பிறகு மூவரும் அருவிக்குச்சென்று திருப்தியாகும்வரை ஸ்னானம்செய்து வீடு திரும்பி, ஏதோ ஆகாரம் செய்துகொண்டோம். சரியாக ஞாபகம் இல்லை.

'நமது நண்பர் கணபதிராயன் நேற்றிரவே கேட்டாரே, இன்னும் நமது கதையை சொல்லவில்லையே. அவர் மனதைப் புண்படுத்தலாமா' என்றாள் தங்கம்மாள்.

'கதைக்கு குறுக்கே நிற்பது நானில்லை. இதம் சொல்லுபவளைப்போல் நீ முந்திக்கொண்டால், தப்பித்துக்கொள்ளலாம் என்று நினைக்காதே. குற்றவாளி நானல்ல' என்றான் கோபாலன்.

'கதையை நேரே சொல்லிவிட்டால், நான் குறுக்கிடப் போவதில்லை. நேரில்லை என்று எனக்குப் பட்டால், சிலவற்றைச்சொல்ல எனக்கு பாத்தியம் உண்டு. அந்த பாத்தியதையை இழக்க நான் சம்மதிக்கமாட்டேன்' என்றாள் தங்கம்மாள்.

'சரி, நீயே சொல்லிவிடு. எப்படி வேண்டுமானாலும் சொல். நான் ஆட்சேபிக்கவில்லை' என்றான் கோபாலன்.

'ஏதேது, கதையே எளிதில் வெளிவராதுபோலிருக்கிறது. கதையே எனக்கு வேண்டாம்' என்று சிரித்துக்கொண்டு சொன்னேன்.

'வேண்டாம் என்றால் உடனே ஆரம்பித்து விடவேண்டியதுதான்' என்றாள் தங்கம்மாள்.

'சரி, துவக்குகிறது தானே' என்றேன்.

'யார் என்று இன்னும் தெளிவாகத் தெரியவில்லையே' என்றாள் தங்கம்மாள்.

'சரி அய்யா! நானே, அந்தப்பழியை ஏற்றுக்கொள்ளுகிறேனே' என்றான் கோபாலன்.

'அப்பாடா' என்று பெருமூச்சுவிட்டேன். கோபாலன் பின்வருமாறு சொல்லத்தொடங்கினன்:—கேளும்.

எனக்கு கதை சொல்லத்தெரியாது. நான் சொல்லப்போகும் வரலாற்றில் குறை இருக்கத்தான்செய்யும். சொல் குறைமட்டும் இல்லை. விஷயக்குறையும் இருக்கும். ஏனெனின் தங்கம்மாளின் பால்யகாலத்து வாழ்க்கை எனக்குத் தெரியாது. அது அவள்தான் சொல்லவேண்டும். (தங்கம்மாள் தலையை அசைத்தாள்). மேலும் கோபாலன் கூறினதாவது:—

என்பெயர்தான் உங்களுக்கு தெரியும். இந்த நாட்டில் குலம் கோத்திரம் கேட்பதும் சொல்லிக்கொள்வதும் ஒருவகை மரபு. நான் தொண்டமண்டல வேளாளர்களைச் சேர்ந்தவன். முதலியார் பட்டம்; ஆனால் அந்தப்பட்டத்தை என் பெயருடன் எப்பொழுதும் நான் ஒட்டிக்கொண்டதில்லை. பழக்கத்தைத்தவிர அதற்கு வேறுகாரணம்கிடையாது. ஆனல் பிறர் காரணம் கற்பிக்கவும் கூடும் என்பதும் எனக்குத்தெரியும். அவர்களுடைய இந்த கற்பனைக்காரணம் என் சம்பந்தப்பட்டவரையில் உண்மையல்ல என்று மட்டும் நான் சொல்லிக்கொள்கிறேன்.

நான் (தங்கம்மாளும் கூடத்தான்) தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்தவன் என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும். தஞ்சாவூர் ஜில்லாக்காரர்களுக்கு தங்கள் புத்தி விசேஷத்தால் சிறிது தலைக்கனம் உண்டு என்று உங்களுக்கு ஏற்கனவே தெரிந்திருக்கும். உங்களை நாங்கள் உங்கள் வீட்டிலேயே உத்தரவின்றி ஆக்கிரமித்தது அந்த ஜில்லாவின் பிரத்தியேக குணத்தை ஒட்டித்தான் என்று சொல்லவும் வேண்டுமா?

எனக்கு இப்பொழுது வயது 25; கோர்ட்டில் உறுதி வாக்குமூலம் கொடுப்பதைப்போல நான் பேசுவதை மன்னித்து விடுங்கள். எனது இயற்கையும் ஆங்கிலப்படிப்பும் அதற்கு காரணங்கள். எனக்கு தமிழ் நேரே பேசத் தெரியாது என்பதும் நீங்கள் இதற்குள் தெரிந்துகொண்டிருக்கக்கூடும். அந்தக் குறையையும் நீங்கள் பொருள்

படுத்தக்கூடாது. உங்களை திருப்தி செய்விக்கவேண்டும் என்ற என் ஆவலைமட்டும் எடுத்துக்கொண்டு, என்னை ஆசீர்வதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதல் முதல் நாடகமேடையில் அடிவைக்கும் வேஷதாரி படும் அவஸ்தையைப்போல் நான் படுகிறேன் என்று சொல்லவும் வேண்டுமா?

தஞ்சை ஜில்லாவில் மன்னார்குடி தாலுக்காவில் நான் பிறந்தேன். எங்கள் ஊருக்கு 'பொய்யூர்' என்று பெயர். இந்தப் பெயர் வர காரணம் என்ன என்று பல பெரியார்களிடம் கேட்டிருக்கிறேன். அவர்களுக்கும் காரணம் தெரியவில்லை. பரம்பரையாக வந்த பெயருக்குக் காரணம்சொல்லுவது எதற்காகவென்று மிகவும் தெளிவாக உள்ளங்கை நெல்லிக்கனியை விண்டு காண்பிப்பதுபோல என்னிடம் ஒருவர் சொன்னார். பின்னர் எதற்குத்தான் காரணம் வேண்டுமென்று மனத்திற்குள்ளாகவே சொல்லி சிரித்துக்கொண்டு, பேச்சை நிறுத்திக்கொண்டேன். தெரியாது என்று சத்தியமாக எதையும் ஒப்புக்கொள்ளமாட்டான் தஞ்சாவூர் ஜில்லாக்காரன். எல்லாவற்றையும் கரைகண்டதாக அவன் நினைப்பு.

பொய்யான உடலுக்கு மெய் என்று பெயர்கொடுத்து அழைப்பதுபோல, மெய்யாய் பரம்பரையாய் இருந்துவரும் ஊரைப் பொய்யூர் என்று அழைத்திருக்கலாம் என்று தத்துவமுறையில் இன்னொருவர் ஓதினார். முதலில் பேசியவரைக்காட்டிலும் இவரிடம் முட்டாள்தனம் அதிகமாய் இருந்தாலும், ஏதோ காரணத்தைத்தேட முயற்சி செய்தார். பொய்யூர் என்று பெரியார்கள் நிச்சயமாய் பெயர் வைத்திருக்கமாட்டார்கள் என்றுமட்டும் நினைத்துக்கொண்டு, காரணம் வினவுவதை நிறுத்திக்கொண்டேன். பின்னர் வெகு காலம் கழித்து, பெயரும் காரணமும் விளங்கின. எங்கள் ஊரின் பெயர் பொழியூர். பொய்யூர் அல்ல. பண்டைக் காலத்தில் ஒரு சமயத்தில் பாண்டிநாட்டுக்கும் சோழநாட்டுக்கும் எல்லை ஹத்தாக இருந்து, எங்கள் ஊர், பொழியூர் என்ற பெயர் பெற்றது எனத்தெரிந்துகொண்டேன். அக்கம் பக்கத்து கிராமங்களைக்காட்டிலும், எங்கள் ஊரிலே அதிகமாக மழை பெய்வதுண்டு. அந்தக் காரணம்பற்றி பொழியூர்

என்று பெயர்வந்திருக்கலாமோ என்று நான் யுக்திவாதமும் செய்ததுண்டு. இதைப்பற்றி நான் இவ்வளவு நீளமாக பேசி யிருக்கமாட்டேன். சொந்த ஊர்ப்பெருமைதான் காரணம்.

பொய்யூரிலே எங்கள் குடும்பம் கொஞ்சம் செல்வ முள்ளது. எனவே செல்வாக்கு அதிகம். ஸர் தாமஸ் மன் ரோவின் ரயத்வாரி திட்டத்தால், சில்லரை மிராசுதார்கள் தஞ்சாவூர் ஜில்லாவில் அதிகமான பிறகு, கொஞ்சம் ஜாஸ்தி யான பூமி உள்ள எங்கள் குடும்பத்துக்கு அதிக கௌரவம் இருந்தது. எங்கள் குடும்பத்து பெரியார்கள் எல்லாம் சிக்கனமாக வாழ்ந்து, சொத்தை விருத்திசெய்து விட்டார் கள். என் தகப்பனார்காலத்தில் நாங்கள் ஆங்கிலக்கல்வி பயிலத் துவக்காவிடில், இன்னும் எங்கள் சொத்து பெருக் கடைந்திருக்கும். என் தகப்பனுருக்கு சடகோப முதலியார் என்றுபெயர். என் தாயிருக்கிறார். நான்தான் என் தாய் க்கு தலைப்பிள்ளை. எனக்குப்பின் இரண்டு சகோதரர்களும் ஒரு சகோதரியும் பிறந்திருக்கிறார்கள். அவர்கள் யாதொரு குறைவுமின்றி சௌக்கியமாய் இருக்கிறார்கள். என் தங் கைக்கு கலியாணமாகவேண்டும். தம்பிகள் படித்துக்கொண் டிருக்கிறார்கள்.

எங்கள் ஊர் முள்ளியாற்றங்கரையில் இருக்கிறது. முள்ளியாற்றில் ஒருபொழுதும் நீர் வற்றுவதில்லை. தஞ்சை ஜில்லா ஆறுகள் வருஷத்தில் நான்கு மாதங்கள் வற்றி வரண்டுபோவது வழக்கம். இந்த ஆற்றில்மட்டும் எப்பொழு தும் நீர் ஓடுவதைக்கண்டு எனக்கு ஆச்சரியமாயிருந்தது. பூமி ரொம்ப பள்ளமாகையால் ஊற்றுப்பெருக்கால், நீர் ஓடுகிறதென்று பின்னர் தெரிந்துகொண்டேன். கம்பன் கவிதையைப்போல் தங்குதடையின்றி சதா ஓடிக்கொண் டிருக்கும் முள்ளியாற்றின்பேரில் எனக்கு ரொம்பப்பிரியம். எங்கள் ஊர்த் துறையில் ஒரு மண்டபம் உண்டு. மண்ட பத்தினருகே வேம்பும் அரசும் பிணைத்து வளர்ந்து செழிப் பாய் நிற்கின்றன. மண்டபத்தின் ஒரு மூலைக்கோடிக்குப் போய் ஆற்றை நோக்கி உட்கார்ந்து இயற்கையின் அழகைப் பார்த்தும் சிந்தித்தும் களிப்படைவது என்வழக்கம். ஊரி லிருந்தபொழுதெல்லாம் இந்த வழக்கத்துக்குமாருக நடந்த

தில்லை. அதிகாலையில் முள்ளியாற்றில் ஸ்னானம்செய்வதும் மாலையில் மண்டபத்துக்குப்போய், காற்றுவாங்கி வீற்றிருப்பதும் என் வழக்கம். ஆங்கிலம் படிக்கத்துவக்கிய சிறிது காலத்துக்கெல்லாம் மன்னார்குடிக்குச்சென்றேன். பின்னர் சென்னைக்குப்போனேன். நான் படிப்பிலே அவ்வளவாக சாமர்த்திய சாலியுமல்ல. முட்டாளுமல்ல. நடுத்தரம்.

நம் நாட்டுப்பையன்கள் ஆங்கிலம் கற்கும் அவதி உங்களுக்குத்தெரியுமா? அப்பா! அதைச்சொல்லி முடியாது. பி.ஏ. பட்டம்பெற்ற ஒருவன் ஆங்கில பாஷைக்காக பத்து வருஷங்களும் கல்வியின்பொருட்டு நான்கு வருஷங்களும் செலவிடுகிறான். நான் சொல்ல வருவது ஒருக்கால் உங்களுக்குப் புரியாமலிருக்கலாம். ஒருவன் ஆங்கிலத்தில் கல்வி கற்பதற்காக செலவிடும் பதினான்கு வருஷங்களில் தமிழில் அதே கல்வியைக் கற்றுக்கொள்ளுவதாயிருந்தால், ஏழு ஆண்டுகளில் அதை முடித்துவிடலாம். இந்த ரகசியம் பெற்றோர்களுக்கு தெரியாது. மொத்தத்தில் கல்வியின் பொருட்டு பணம் செலவு செய்வதாக அவர்களின் நினைப்பு. ஆயிரக்கணக்கில் பணம் செலவுசெய்து பி.ஏ. பட்டம்பெற்று கல்விமான் என்று பெயரெடுக்கும் மனிதனுக்கு என்ன தொழில் தெரியும்? வீட்டுப்பணத்தை, வருமானத்தைக் கவனிக்காமல் செலவு செய்யும் தொழில் அவனுக்குத் தெரியும். அந்தச் செலவை அவசியச்செலவு, நாகரிகச்செலவு என்று பிறரிடம் சொல்லி, தன்னையே ஏமாற்றிக்கொள்ளத் தெரியும்.

சென்னைப் பல்கலைகழகத்தில் நான் சரித்திரத்திலும் இலக்கியத்திலும் எம்.ஏ. பட்டம்பெற்றேன். ஆங்கில இலக்கியம் எனக்கு உயிர்த்தாரகம். ஆங்கில சரித்திரம் தித்திக்கும் தேன் எனக்கு. ஆங்கில இலக்கியத்தைப் படிக்க முயன்றவர்களுக்குத்தான் அதன் அருமை தெரியும். தமிழிலே யாப்புத்தெரிந்தவன் கவியாக மலர்ந்து விடுகிறான். ஆங்கிலநாட்டிலே, யாப்பை அறியாமலே பல அருங்கவிகள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பது என் துணிபு.

பிறவிக்கூச்சத்துக்கு நான் அடிமை. வீட்டிலேகூட என் தாயாரிடம் சில சமயங்களில், தேவையானால், பேசு

வேன். தகப்பனுரிடம் அதிகமாகப் பேசினதில்லை. ஆனால் அவர் என் படிப்பு நிமித்தமாக நான் கேட்ட பணத்துக்கு அதிகமாக அனுப்புவாரேயல்லாமல், ஒருபொழுதும் குறைத்து அனுப்பினதே இல்லை. நான் ஊருக்கு வரும்பொழுது ஒருதரம் என்னை ஏற இறங்கப் பார்ப்பார். அவ்வளவுதான். உடம்பு சுகமா என்றுகூட கேட்கமாட்டார். ஒருசமயம் எனக்கு சென்னையில் காய்ச்சல் வந்தது. நான் எவ்வளவோ வேண்டாம் என்று சொல்லியும் என் நண்பர் ஒருவர் எனக்குத்தெரியாமல், என் தகப்பனுருக்கு தகவல் அனுப்பிவிட்டார். அவ்வளவுதான். மறு ரயிலில் சென்னைக்கு வந்துவிட்டார். என்பேரில் அவ்வளவு உயிர் அவருக்கு.

வீட்டிலே எனக்கென்று ஒரு தனி அறை இருக்கிறது. அதிலே தான் குடியாக கிடப்பேன். இரண்டாயிரம் ரூபாய் செலவு செய்து சுமார் 700 புஸ்தகங்கள் வரையில் சேர்த்துவிட்டேன். என்ன அழகு என்றல் அதிலே தமிழ் புஸ்தகம் ஒன்றுகூடக்கிடையாது. ஆங்கில இலக்கியக்கடலில் அமிழ்ந்து ஸ்னனம் செய்தவன், தமிழ் இலக்கிய சாக்கடையில் இறங்கி சேறு பூசிக்கொள்வான என்பது எனது அப்போதய அபிப்பிராயம். ஊரில் எவருடனும் நான் அதிகமாகப் பேசியதில்லை. ஆனல் என்னைக்கண்டால் எல்லோரும் பிரியமாகப் பேசுவார்கள். இதன் காரணம் எனக்குத் தெரியவில்லை. நான் எம்.ஏ. பட்டம்பெற்றதும், செல்வாக்குள்ள உறவினர் உதவியால், மாதம் 150 ரூபாய் சம்பளமுள்ள ஸர்க்கார் உத்தியோகம் எனக்கு கிடைத்தது. அதுவும் சென்னையிலே.

நான் படிக்கும்பொழுதும், உத்தியோகம்பெற்ற பிறகும் என் கலியாண விஷயமாய் நானும் யாரிடமும் பேசினதில்லை. எவரும் என்னிடமும் பேசினதில்லை. என் தாயார் மட்டும் எனக்குகேட்கும்படியாக இரண்டொருதரம் இதைப்பற்றி பிரஸ்தாபித்திருக்கிருர். மேலும் என் கலியாண விஷயமாய் நான் சிந்தித்ததும்கிடையாது. என் தகப்பனுர் கலியாணத்தைப்பற்றி வாய்திறக்கமாட்டார் என்பதும் எனக்குத்தெரியும். எனக்கு கலியாணத்தைப்பற்றி பொதுவாக யாதொரு வெறுப்பும் இல்லை. (இந்த சமயம் தங்கம்மாள் சிரித்தாள்.) கலியாணம்செய்துகொண்டு, இப்பொழுது

கதை சொல்லிக்கொண்டிருக்கும் என்னைப்பார்த்து தங்கம்மாள் பரிதாபச் சிரிப்பு சிரிக்கும் நிலைக்கு வந்திருக்கிறேன் என்பதுமட்டும் உண்மை. (மீண்டும் தங்கம்மாள் நகைத்தாள்) ஆனால் இயற்கையை எதிர்த்துப் போராட, யாரால் முடியும்?

விவாகத்தைப்பற்றி விசாரிக்காமல், யோசிக்காமல், அதை விரைவிலே நடத்திவிடவேண்டுமென்ற ஆவல்மட்டும் நம் ஜனங்களிடையே இருந்து வருகிறது. நான் ஏதோ பிரசங்கம் செய்து வருவதாய் நீங்கள் நினைக்கவேண்டாம். தங்கம்மாள் நகைக்கவேண்டாம். நீண்டகாலமாக நான்யாரிடத்திலும் சொல்லாமல் என் அகத்தே ஒளித்துக்கொண்டு வந்ததை, நீங்கள் 'கதை சொல்' என்று குத்திவிட்டீர்கள். காசிக்குப்போய் காவடி கொண்டுவந்தேன் என்று சுருக்கமாய் சொல்லுவது எனக்கு அசாத்தியம். என் உள்ளத்தில் நான் அனுபவித்து வந்த துயரங்களை யாரிடமாவது சொல்லி ஆற்றிக்கொள்ளவேண்டுமென்பது என் எண்ணம். இதைக் காட்டிலும் ஏற்ற சந்தர்ப்பம் எனக்கு கிடைக்குமா? அதுவும் தங்கம்மாள் சாட்சியாகவும் விகடகவியாகவும் அமர்ந்திருப்பதைக்காட்டிலும்!

கலியாணம் என்பது தனது சுயம்வர பாத்தியதையும் வசதியையும் இழந்து, சந்தையில் அடிமையை விலைக்கு வாங்குகிற சம்பவமாக மாறிவிட்ட பின்னர் விவேகிகளுக்கு மணத்தில் இனிப்பு ஏற்படுமா? கலியாணம் என்றால் ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் கழுத்தில் கட்டை கட்டுவதுபோல் ஆகிவிட்டது. கட்டையை தூக்கிச்செல்ல யார்தான் சம்மதிப்பார்? தான் நேரே வேட்டையாடாத பொருளை தின்பவன் பெருவயிறு படைத்தவன். தான் தேடாமல் பொருளை செலவழிப்பவன் வீணன். தங்கள் இஷ்டமில்லாமல், மணமுடிக்க இசைபவர்கள் மூடர்கள், கோழைகள். ஆகாராதிகளை வழக்கத்தையொட்டி உட்கொள்ளுவதில் பெருத்த நஷ்டமுண்டாகாது. கலியாண விஷயத்தில் மனிதன் மரக்கட்டையைப்போல நடந்துகொண்டால், அவனிடம் மனிதத்தன்மை இருக்கப்பெறுமா? பல தலைமுறைகள் சென்றால், மனிதனும் யந்திரத்தைப்போல

உயிரில்லாமல் வாழத்துவக்கி விடுகின்றான். இத்தகைய கதி எனக்கும் நேரலாகாது என்ற கருத்துக்கொண்டு, கலியாணத்தைப்பற்றி நினைக்காமலே இருந்துவந்தேன். ஆனால் ஆங்கில இலக்கியத்தைப் படிக்கப்படிக்க என் இதயம் புழுங்கிற்று. ஒரு பெண்ணும் பிடிக்காத அளவுக்கு அகம்பாவியாகிவிட்டேனோ என்று நினைத்து நானே என்னை நொந்து கொள்வேன். உயரப்பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாமா என்று எண்ணுவேன். நம்முடைய ஜன சமூக நிலைமையை ஓராமல் தனியான கற்பனைக் கருத்துக்களை உள்ளத்தில் புதைத்து வைத்துக்கொள்வதால், துன்பமேயல்லாமல் இன்பம் கிட்டாது என்பது என் அனுபவம்.

எனக்கு உத்தியோகமானபிறகு ஒருசமயம் ஒருமாத ரஜாவில் பொய்யூருக்குப் போயிருந்தேன். ஊரிலுள்ள யாவரும் என்னை ஒவ்வொருவராக துக்கம் விசாரிப்பவர்களைப் போல வந்துபார்த்து, எனக்கு கிடைத்த பாக்கியத்தைப் புகழ்ந்தும் வியந்தும் பேசினார்கள். அவர்கள் சல்லாபம் எனக்கு பிடிக்கவில்லை. வடகோடி துருவத்தைக்கண்ட வீரன் வந்தால், இவர்கள் என்னசெய்வார்களோ எனக்குத் தெரியவில்லை. ஸர்க்காரில் அற்ப உத்தியோகம் கிடைத்தவுடனே, இவர்கள் தலைகால் தெரியாமல் ஆனந்தக் கூத்தாடுகிறார்கள். மனிதனுடைய வாழ்க்கை ஸர்க்கார் உத்தியோகத்திலே புகுந்து அடக்கம் பெற்றுவிட்டதா? இவர்களுடைய அர்த்தமற்ற ஆனந்தமும் மோகமும் பலப்பல நினைப்புக்களை என் உள்ளத்தில் எழுப்பின. ஆனால் அவர்களின் பேச்சுக்கு யாதொரு பதிலும் சொல்லாமல், எல்லாவற்றையும், மந்திரித்த பசுவைப்போல கேட்டுக்கொண்டிருந்தேன்.

கோடிக்கணக்கில்பொருள் சம்பாதிக்கும்மோட்டார் அரசனாகிய போர்டு, பௌதிக சாஸ்திரிகளான எடிஸன், மார்க்கோனி போன்றவர்களை இவர்கள் கண்டால், கண்ட இடத்திலேயே, கண்ட நிமிஷத்திலேயே, தங்கள் பிராணனைவிட்டுவிடுவார்கள் போல, இவர்களுடைய பேச்சுப்பாவனையிலிருந்து, நான் அறிந்துகொண்டேன். காலத்தின் சூழ்ச்சியால், மிதமிஞ்சிய அற்பத்தனம் இவர்களுக்கு வரப்பெற்றதைக்

குறித்து, நான் பெரிதும் வருந்தினேன். வருஷத்திலே இரண்டாயிரம் ரூபாய் வருமானம், கண்களிலே பெரியதொரு பொக்கிஷமாக படக்கூடிய நிலைக்கு இவர்கள் வந்துவிட்டார்களே, எனக்கருதி ஏங்கினேன். ஸர்க்காரைச் சுற்றியில்லாமல், இவர்களால் வாழ்க்கை நடத்தமுடியாது போல இவர்கள் தங்கள் பேச்சின் மூலமாய் காண்பித்து கொண்டது, எனக்கு வியப்பை உண்டாக்கிற்று. அற்பத்தனமும் பேராசையும் ஒரே இனத்தைச் சேர்ந்தவை என்று அவர்களின் நடவடிக்கைகளிலிருந்து தெரிந்துகொண்டேன். என்றாலும், எனக்கு இதுவரையிலும் இல்லாத ஒரு புதிய அனுபவமும் உணர்ச்சியும் ஏற்பட்டன.

பெண்களைப்பற்றி குறை பேசுவதில் பயனென்ன என்று நினைத்தேன். ஆண்கள் தங்கள் உண்மை நிலை தவறி அடிமைகளாக வாழுங்காலத்தில், பெண்கள் அடிமைகளுக்கு அடிமைகளாகத்தான் வாழ்ந்து வரமுடியும். கல்வியறிவில்லாத, அற்பத்தனம் நிறைந்த, பேராசைபடைத்த, கோழைத்தனத்தை ஆபரணமாகப் பூண்டிருக்கும் மனிதன் கலியாணத்தின் மூலமாக, எந்த பலனை அடைய விரும்புகிறான்? சம்பளமில்லாத சாசுவத வேலைக்காரியை அவன் விரும்புகிறான். வாழ்க்கையைப்பற்றி கவலைப்படாதவன் வாழ்க்கைத் துணைவியைப்பற்றி கவலைப்படப்போகிறானா? பொய்யூர் வாசிகளின் இல்லற வாழ்வு எனக்கு சற்றும் இனிப்பை அளிக்கவில்லை.

எப்பொழுதும் போல தகப்பனார் "வா" என்பதோடு நிறுத்திக்கொண்டு, தமது அலுவலின்பேரில் சென்றார். தாய்மட்டும் சற்று அதிகமாகவே, இந்தத்தடவை பேசினார். எதையோபேச, இரண்டு மூன்றுதரம் வாயெடுத்துவிட்டு, பேசாமல் நிறுத்திக்கொண்டார். என்னிடத்தில் எதையும் சொல்ல என் தாயார் இதுவரையிலும் கூச்சப்பட்டதில்லை. இப்பொழுது கூச்சப்பட்டதற்கு காரணம் தெரியவில்லை.

"ஏதோ சொல்ல வாயெடுத்தீர்களே, அம்மா, அதை ஏன் சொல்லாமல் நிறுத்திவிட்டீர்கள்? உங்கள் பேச்சை நான் என்றைக்கேனும் தட்டியிருக்கிறேனா" என்றேன்.

"இல்லையப்பா! ஒன்றுமில்லை. வெறும் பித்தான எண்ணம்! உனக்குத் தெரியாததை நான் என்ன சொல்லப்போகிறேன்? என்றாலும் மனம் கேட்காமல், அதைச்சொல்ல வாயெடுத்தேன்? ஆனால் இதுசமயமில்லை என்று நிறுத்திக் கொண்டேன். ஒன்றும் அவசரமில்லை" என்றார்.

"அவசரமிருப்பினும் இல்லாவிடினும், பாதகமில்லை. நீங்கள் என்னிடம், நீங்கள் பெற்று வளர்த்த பிள்ளையிடம், கூச்சப்படுவது என் மனதுக்கு சமாதானமாயில்லை. நீங்கள் அதை இப்பொழுது என்னிடம் சொல்லுவீர்களாகில், என் மனதுக்கு ஆறுதல் ஏற்படும்" என்றேன்.

"உனக்கு ஏன் வருத்தமுண்டாக்கவேண்டும்? மனம் சலித்துக்கொள்ளாதே. சொல்லிவிடுகிறேன். உன் கலியாணத்தைப்பற்றி உன்னிடம் பேசலாமாவென்று நினைத்தேன். அவ்வளவுதான்" என்றார்.

"நீங்கள் பேசாமல் வேறு யார் பேசக்கூடும்? வேறு யாருக்கு அந்தக் கடமையும் பாத்தியமும் உண்டு? அதற்காக நீங்கள் ஏன் கூச்சப்படவேண்டும்? என் உத்தியோகத்தையும் சம்பளத்தையும் கண்டு, ஊரார் பயந்து பக்தி காண்பிப்பதுபோல, நீங்களும் நடந்துகொள்ளவேண்டுமா? கலியாணம் செய்துகொள்ள வேண்டியதுதான். கலியாணத்துக்கு பெண் வேண்டாமா" என்று சிரித்துக்கொண்டு சொன்னேன். என் சிரிப்பைக்கண்டு என் தாயாரின் கூச்சமும் போய்விட்டது.

"நீ கடைசியில் சொன்னதை நினைத்துத்தான், உன்னிடம் கலியாணப் பிரஸ்தாபம் செய்ய கூச்சப்பட்டேன். நல்ல பெண், கண்ணில் தென்படவில்லை. நானும் மூன்று வருஷங்களாகத்தான், கண்கொத்திப் பாம்பைப்போல கவனித்து வருகிறேன். காலம் கைகூடவேண்டும். இப்பொழுது எதற்கு அந்தப் பேச்சு" என்று சம்பாஷணையைத் தாயார் ஒருவாறு முடித்துவிட்டார். நானும் என் அறைக்குச்சென்று, எனது புஸ்தக பர்ணசாலையில் புகுந்து, தவம் செய்யத் துவக்கினேன்.

ஆங்கில இலக்கியத்தின் நயத்தையும் ஸ்வாரஸ்யத்தையும் நான் புகழ்ந்தால், எனது தமிழ் சகோதரர்களுக்கு

கோபம் வந்தாலும் வரும். கோபப்பட்டு ஆகிற காரியம் என்ன? கடல் தவளையொன்று வழிதப்பி, கிணற்றுக்குள் வந்து விழுந்ததாம். கிணற்றிலும் ஒரு தவளையிருந்தது. வந்து விழுந்ததைப்பார்த்து "நீ எங்கிருந்து வருகிறாய்" என்று கிணற்றுத்தவளை கேட்டது. கடலிலிருந்து என்றது மற்றைய தவளை. கடல் எவ்வளவு பெரிதிருக்கும் என்று கிணற்றுத் தவளை கேட்டு, தனது உடம்பை ஒப்பிக் காண்பித்தது. அதைக்கண்டு இன்னும் பெரிது என்றது கடல் தவளை. இப்படி சொல்லிக்கொண்டுபோகவே, கிணற்றுத் தவளை நன்றாக மூச்சுப்பிடித்துக்கொண்டு, தனது உடம்பை மிகுதியும் ஒப்பிக்காண்பிக்க எத்தனிக்கையில், வயிறு வெடித்து இறந்து போயிற்றாம்.

கவிதையும் காவியமும் கதையும் கலைநூலும், மற்றும் சரித்திர சாஸ்திர நூல்களும் ஆங்கில பாஷையில் இருப்பன போன்று, வேறு எந்த பாஷையிலிருக்கின்றன? எவ்வளவு இருக்கும் என்று எவரேனும் கேட்டால் அவருக்கு கிணற்றுத்தவளையின் கதி நேருமோ என்று நான் அஞ்சுகிறேன். வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் ஆங்கிலேயர்கள் எவ்வளவு அரும்பாடுபட்டிருக்கின்றார்கள்! தொட்ட, துவக்கிய காரியத்தை அவர்கள் ஒருநாளும் நடுவழியில் விட்டுவிடும் வழக்கமேயில்லை. தோல்வியே அறியாத நாட்டார் என்று அவர்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அதைப்பற்றி ஏன் பேசவேண்டும்? ஜனங்களின் சிறுமை கண்ணிற்படும்பொழுதெல்லாம், மனதுக்கு ரொம்பவும் கஷ்டமாயிருக்கிறது. வாழ்க்கையின் மர்மத்தை விள்ள முயற்சிசெய்யும் ஆங்கில ஆசிரியர்களுடன் சல்லாபம் செய்து, என் அறையில் இருந்தேன். மாலைப்பொழுது வந்தது. வழக்கப்படி முள்ளியாறு மண்டபத்துக்குப் போகலாம் என்று எண்ணி, வெளியே சென்றேன்.

முள்ளியாற்றுக்குச் சென்றதும் நான் இதுவரையிலும் பார்க்காத ஒரு காட்சியை கண்டேன். தண்ணீர்க்கரையில் ஒரு பெண் ஸ்நானம் செய்து முடித்துவிட்டு, உடை மாற்றிக் கொண்டு, வீட்டுக்கு திரும்பும் தருவாயிலிருந்தாள். பக்கத்திலே ஒரு வேலைக்காரி நின்றுகொண்டிருந்தாள். அந்தப்

பெண்ணைப் பார்த்தேன். ஆனால் வெறித்துப் பார்க்கவில்லை. வெறித்துப் பார்ப்பது நாகரிகக் குறைவல்லவா? என்றா லும், திருட்டுத்தனமாக இரண்டொருமுறை பார்த்தேன். பெண் ஊருக்குப் புதிது. இதற்குமுன் அவள் இந்த ஊருக்கு வந்ததாயும் தெரியவில்லை. வேலைக்காரியை கேட்கலாமென் ருலோ, பெண்ணும்கூட இருக்கிருள். மேலும் இத்தகைய ஆசாமிகளுடன் பேசும் வழக்கம் நான் இதுவரையிலும் வைத்துக்கொண்டதில்லை. இதுவரையிலில்லாத புதியதொரு பரபரப்பு என் உடம்பில் தோன்றிற்று. அந்த பரபரப்பு எனக்கே பிடிக்கவில்லை.

"என்ன இருந்தாலும் கிராமத்தைப்போல பட்டின வாழ்வு சுகப்படாது. நல்ல ஸ்னனம்! வீட்டுக்குப்போக லாமா" என்றுள் அந்தப் பெண்.

அந்தக்குரல் காந்தமாய் இழுத்துவிட்டது என்னை. (தங்கம்மாள் சிரித்தாள்) "சபை முறையைத் தழுவி, தங்கம் மாள் சிரித்தது ஒழுங்குக்குறைவு என்று உங்களிடம் தெரி வித்துக்கொள்ளுகிறேன். தங்கம்மாளை வைத்துக்கொண்டு இனிமேல் என்னல் கதைசொல்ல முடியாது." என்று கோபாலன் கோபிப்பதைபோல பேசினன்.

"இதையெல்லாம் முன்னமேயே யோசித்து, கணபதி ராயனுக்கு கதைசொல்ல ஆரம்பிக்காமல் இருந்திருக்கவேண் டும் என்று பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அலை ஓய்ந்து ஸ்னனம் செய்வது தங்கள் கருத்தா" என்று தங் கம்மாள் கூறி மறுபடியும் நகைத்தாள்.

சரி என்று கோபாலன் சொல்லுகிருன்:—"அந்தக் குரல் சிலுவையில் அறைந்ததுபோல என்னை அந்த இடத்தி லேயே நிறுத்திவிட்டது. கால் முன்னும் ஓடவில்லை; பின் னும் இழுக்கவில்லை. நெட்டைப் பனையைப்போல நின்று கொண்டிருந்தேன். நான் சற்றேறக்குறைய ஆறடி உயரம் என்பதை நீங்கள் தெரிந்துகொண்டிருப்பீர்கள்.

அந்தப் பெண் அந்த இடத்தைவிட்டு அகன்ருள். சிறிது நேரத்திற்கு எல்லாம், என் நினைவு எனக்கு வந்தது. சிந்திக்கலானேன். அவள் யார், எந்த ஊர் முதலிய விவரங்

களை அறிய எனக்கு ஆசை. நான் யாரைக்கேட்பேன்? யாருக்குத் தெரியும் என்று நான் தெரிந்துகொள்ளுவது? மேலும் எனக்கு பிறரிடம் சல்லாபப் பழக்கம் இருந்தாலல்லவோ எதையும் எவரிடமும் விளையாட்டாகவும் வினையாகவும் பேசித் தெரிந்துகொள்ள முடியும்? நான்தான் மௌனம் சாதிக்கும் புத்த விக்கிரகத்தை போன்றவனாயிற்றே! மண்டபத்துக்குச்சென்று காற்றுவாங்கலாமென்று சென்றேன். என் உடம்புமட்டும் அங்கிருந்தது. என் நினைவுமுழுதும் வேறு இடத்துக்குப் போய்விட்டது. இடத்தையும் குறிப்பிடவேண்டுமா?

வழக்கம்போல நான் மண்டபத்தில் தங்குகிற நாழிகையளவு அன்று தங்கவில்லை. வீட்டிற்குத் திரும்பினேன். மனதிலே அமைதியில்லை. இரவில் ஆகாரமும் செல்லவில்லை. தாயார் காரணம் கேட்டார். கலியாணத்திற்கு ஆயிரம் பொய்சொல்லலாம் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்களல்லவா? அந்த ஆயிரத்தில் இரண்டொன்றை அப்பொழுதே சொல்ல துவக்கிவிட்டேன். காலமே வைத்தியனை அழைத்துவரலாமென்று தாயார் சொன்னார். வேண்டாமென்று சொன்னேன். பிடிவாதம் செய்வார்போலிருந்தது. மெதுவாக ஒன்றும் பேசாமல் மெத்தைக்கு சென்றேன்.

எங்கள் வீடு மாடி வீடு. மெத்தை அறை ஒன்றிலே நான் படுத்துக்கொள்ளுவது வழக்கம். நல்ல நிலவு. கவனிப்பாரற்ற சந்திரன்! இரவு முழுதும் அவன் தனியாக இருப்பதை எவரேனும் லட்சியம் செய்கிறார்களா? ஏதோ ஒன்றிரண்டு காதலர்கள் சந்திரனைப்பார்த்து, தென்றற்காற்றால் கொளுத்தப்பட்டுப் புலம்புகின்றனர். மற்றையயாவரும் தாளிட்டு வீட்டினுள்ளே குறட்டைவிட்டு உறங்குகின்றனர். நான் காதலனாகாவிட்டாலும், கவலை பிடித்தவனாகிவிட்டேன். சந்திரனைப் பார்த்துக்கொண்டே இருந்தேன். தென்றலான புலி என்மீது கொடுமையாய்ப் பாய்ந்துகொண்டிருந்தது. ஆனால் நான் பயப்படவில்லை. இன்னும் கொடுமையாய் பாயவேண்டும் என்று விருப்பம் கொண்டேன். நெடுநேரம் நிலவிலே நடந்துகொண்டிருந்தேன்.

இந்த சமயங்களில் நேரத்தை அளவிட்டுச் சொல்ல முடியாது என்று சொல்லவும் வேண்டுமா? இதற்குள் நடு தெருவினின்றும் பாடும் குரல் ஒன்று கேட்டது. நடுத் தெருவில் எங்கள் வீட்டிற்கு எதிரே, பின்புறமாக, சொர்ணத்தாச்சி வீடு இருக்கிறது. சொர்ணத்தாச்சி எங்களுக்கு எட்டத்து உறவினர். அவர்களுக்கு பிள்ளைகுட்டி கிடையாது. அவர்கள் வீட்டிலிருந்துதான் குரல் புறப்படுகிறது என்று தெரிந்தது. பெண்ணின் குரல் என்றும் தெரிந்து கொண்டேன். அவள் ஏன் இந்த வேளையில் பாடுகிறாள்? ஊரார் அதை கேவலமாக எண்ணுவார்களே என்று நான் பயந்தேன். பாட்டுமட்டும் ஒரு நாழிகை வரையிலும் கேட்டுக்கொண்டே இருந்தேன். அப்படியே தூங்கிப்போனேன்.

காலமே எழுந்திருந்து வழக்கம்போல முள்ளியாற்றுக்கு ஸ்னானம் செய்யச்சென்றேன். அங்கு என்ன கண்டேன்? முதல் நாள் பார்த்த பெண் ஸ்னானம் செய்து, பரபரப்பு இல்லாமல் தலையை துவட்டிக்கொண்டு, நுனி முடிச்சுப்போட்டு, அதிலே ஒரு ரோஜாமலரை சொருகி வைத்துக்கொண்டாள். மாற்றுச் சேலையை உடுத்திக் கொண்டு, அரசுமரத்தடிக்குப்போய், பிரதட்சணம் செய்தாள். 108 எண்ணினேன். பின்னர் சூரிய நமஸ்காரம் நடைபெற்றது. சங்கீதத்தைக்கேட்டு 'மருண்ட 'கோனைப் போல, ஆற்றின் கரையிலிருந்துகொண்டே இவை யாவற்றையும் கவனித்து வந்தேன். ஆனால் என்னை அவள் சற்றும் கவனித்ததாக தெரியவில்லை.

நான் சென்னை சர்வகலாசாலை இரட்டைப்பட்டம்பெற்ற எம்.ஏ. என் முகத்திலேயே அது எழுதி ஒட்டப்பட்டிருக்கும் என்பது எனது குழந்தை நினைப்பு. நான் வயதில் இளைஞன்! அறிவாளி! அழகுவாய்ந்தவன்! ஊருக்கு 'ராஜா'! இவ்வளவு சிபார்சுகளும் லட்சணங்களும் இருப்பினும் அவள் யாதொன்றையும் கவனித்து லட்சியம் செய்ததாக தெரியவில்லை. எனது இதயம் எங்கேயோ பதுங்கிக்கொண்டது. அவளது செயல்களை என் கண்கள்மட்டும் அப்படியே விழுங்கிக்கொண்டிருந்தன. நல்ல அதிருஷ்டத்துக்கும் ஒரு முடிவுவேண்டாமா!

அவள் போய்விட்டாள். நானும் ஆறும் பாக்கி. ஆற்றினிடம் முறையிட்டுக்கொள்ளுவதா? அது தன் கதியிலே தயங்காமல் சென்றுகொண்டிருக்கிறது. மனிதர்களும் அவ்வாறு தானே செய்யவேண்டும்? ஆற்றினிடமிருந்து புத்தி கற்றுக்கொண்டேன். ஸ்னானம்செய்து முடித்துக்கொண்டு வீட்டுக்குச் சென்றேன்.

அந்தப் பெண் பார்வைக்கு புதிதாய் இருந்தாள். அவளை நினைக்க நினைக்க ஆனந்தமும் அதிசயமும் ஒருங்கே கூடி, என் உள்ளத்தில் கூத்தாடின. ஆனால் என்னையே நான் வெறுத்துக்கொண்டேன். ஏன்? ஊர் சின்ன ஊர். அதிலே வந்தவர்கள் போனவர்கள், எல்லோருக்கும் தெரியும். கிராமத்தில் இதை விசாரிக்காமல் இருந்தால் அவர்களுக்குப் பொழுது போகாது. அது அவர்களுக்குப் பரம்பரை பழக்கம். எல்லோருக்கும் இதற்குள் பகிரங்கமாய் தெரியக்கூடிய சங்கதி எனக்குமட்டும் ரகசியமாய் இருப்பதென்றால், அது எனக்குப் பிடிக்கவில்லை. நான் இதுவரையிலும் ஒருவருடனும் பழகாத தன்மையில் இருப்பதனாலே தானே அது எனக்கு ரகசியமாய் இருந்திருக்கிறது? நானும் கலகலப்பாய் இருந்திருந்தால் இந்த ரகசியத்தினால் வேதனைப்பட வேண்டியிருக்குமா? எனவே என்னையே நான் நொந்து கொண்டேன். என்ன நொந்துகொண்டாலும், அவளைப் பற்றி ஒன்றும் தெரியவில்லையே! தெரிந்துகொள்ளவல்லவா வழிதேடவேண்டும்? ஊரில், வெற்றிலைப்பாக்கு கடை வைத்திருக்கிற சுப்பன் ஒருவனோடுதான் ஏதேனும் எப்போதாவது பேசுவேன். அவனைக் கேட்கலாமா?

என் அறைக்குள்சென்று, நிலைக்கண்ணாடி முன்னே நின்று, என் அழகைப்பார்த்தேன். இவ்வாறு செய்வது சிறுபிள்ளைத்தனம் என்று எனது நண்பர்களிடம் நான் பல தடவை சொல்லியிருக்கிறேன். தனக்கு வந்தால்தானே தலைவலியும் காய்ச்சலும், தெரியும்? நண்பர்களிடம் கூறியதை மறக்கவில்லை. ஆனால் அதை எனது செய்கையால் மறுத்துவிட்டேன். என் முகத்தை அணு அணுவாக கவனித்தேன். அழகு இருந்தால் பெண்களுக்கு போதும் என்பது எனது அப்போதைய நினைப்பு. கண்களை எந்தந்த

வரிசைகளிலெல்லாம் வைத்து அழகுபார்த்தேன் ! (தங்கம்மாள் வாய்க்குள் துணியை அடைத்துக்கொண்டு சிரித்தாள். கோபாலன் இதைப் பார்க்காமல் இருப்பாரா?) இப்பொழுது தங்கம்மாள் எனது மடைமையைக்கேட்டு, சிரிப்பது பொருத்தம் உள்ளதாகும். (உடனே தங்கம்மாள் துணியை எடுத்துவிட்டுக் கடகடவென்று நகைத்தாள். நாங்களெல்லோரும் சிரித்தோம். அதிகமாக சத்தம் செய்து கோபாலன் சிரித்தார்.)

என் பெயரை எஸ்.ஜி. பால் என்று மாற்றிக்கொண்டதை உங்களுக்குச் சொல்ல மறந்துபோனேனே ! கண்ணாடியின் முன்நின்று கவனித்த நான் "எஸ்.ஜி. பால் அழகில் அவ்வளவு குறைந்தவனல்ல; படிப்பிலும் பதவியிலும், அப்படியே; என்றாலும் அந்தப் பெண்ணின் பார்வையை அவனால் கவரமுடியவில்லையே! என்னவேண்டியிருக்கிறது" என்று எனக்குள்ளாகவே சொல்லிக்கொண்டேன். இதற்குள் காலடிச்சத்தம் கேட்டது. திரும்பி, திருட்டுவிழி விழித்தேன். நான் செய்துகொண்டிருப்பது திருட்டு என்பது என் எண்ணம். பலகாரம் சாப்பிட என் தாயார் என்னைக்கூப்பிட்டார். பலகாரம், ஆகாரம் முதலியன எல்லாம் உபசார சங்கதிகளாய் முடிந்தன. பலகாரம் சாப்பிடும் பொழுது வைத்தியனின் நினைவு தாயாருக்கு வராமல் இருக்க வேண்டுமேயென வேண்டிக்கொண்டேன். இந்த சமயங்களில் வேண்டிக்கொள்ளுவதற்கு விரோதமாகத்தான் எல்லாம் நடக்கும். மீண்டும் வைத்தியப் பிரஸ்தாபம் நடந்தது. ஏதோ சாக்குச் சொல்லிவிட்டு, என் அறைக்குப் போய்விட்டேன்.

அங்கேபோயும் பயன் என்ன? எங்குசென்றாலும், மனிதனின் நிழல் கூடவேசெல்லும் என்பார்கள். அவன் அவன் நினைப்பும் அவன்கூடத்தான் செல்லும். அதையும் சேர்த்து பெரியோர்கள், "அவனவன் நிழலும் நினைப்பும் அவனவனுடன் செல்லும்" என்று கூறியிருக்கலாம்.

அன்னத்தை தூது விட்டான் நளன். மேகத்தைத் தூது அனுப்பினான் பின்னொருவன். எனக்கு எது தூது செல்லும்? ஏதேனும் இணங்கினாலும், தூதை வரவேற்க

ஒருவர் வேண்டாமா? என் நினைப்புத்தான் என்னுடைய தூது என்று நினைத்து, அறையில் எனது சாய்வுநாற்காலியில் சாய்ந்துகொண்டேன். அவசர சமயத்துக்கு பயன்படாத புத்தி என்னத்திற்காகும்? கொள்ளை நேரும் காலத்தில் அதைத் தடுக்கமுடியாத சரீர பலம் யாருக்கு உபயோக மாகும்? அது போல, காதலித்த பெண்ணின் விவரங்களைத் தெரிந்து கொள்ள முடியாதவன் யாரைச்சேர்ந்தவன்? மகாப் பெரிய மனிதன் என்று என் உள்ளத்தில் என்னைப்பற்றி நினைப்பு! அந்த நினைப்பு காரியத்திற்கு ஆகுமா? என்னையே நான் இகழ்ந்துகொண்டும் நொந்துகொண்டும் படுத்திருந் தேன். சிறிது நேரத்தில் கண்ணயர்ந்தேன்

கனவு கண்டேன். நான் அந்தப்பெண்ணைச் சந்தித்த தாகவும், சந்தித்த சமயத்தில் ஏதோ கேட்க, அவள் என்னை மதிக்காததும் தவிர, ஏளனமாக சிலவற்றைச் சொல்லி, எனது அகம்பாவத்தை நான் விட்டாலன்றி, நான் ஒன்றுக் கும் உதவமாட்டேன் என்று என்னைக் கண்டித்தது போல வும் என்கனவில் தோன்றிற்று. கண் விழித்துக்கொண்டு பார்த்தேன். எனது அறையில் சாய்வு நாற்காலியில் கால்களை நீட்டிக்கொண்டு படுத்திருப்பதுதான் தெரிந்தது. அந்தக் கனவு மெய்யாக இருக்கலாகாதா என்று உள்ளம் உருகி னேன். என்னைச்சந்தித்து அவள், என்னை தன் கீதக்குரலால், எவ்வளவு திட்டினாலும் பாதகமில்லை என்று எண்ணினது உண்டு.

அன்று மாலையும் வழக்கம்போல மண்டபத்துக்கு போனேன். ஆனால் மனதிலே வேகமும் ருசியுமில்லை. ஜீரண சக்தி இல்லாதவன் மாமூலாக ஆகாரம் சாப்பிடுவதை ஒப்ப, நான் முள்ளியாற்றுக்கு சென்றேன். ஆனால் மனதை ஒளிப் பதில் புண்ணியம் என்ன? நேற்றையதினம் மாலையில் வந்ததுபோல ஒருக்கால் அந்தப்பெண் ஆற்றுக்கு வரமாட் டாளா, நான் சந்திக்கலாகாதா என்ற அவல ஆசை என்னி டம் இருந்தது என்பதை நான் ஒளிக்கவில்லை. மண்டபத் துக்குச்சென்று நெடுநேரம் உட்கார்ந்திருந்தேன். என்னைத் தவிர ஈ காக்கை இல்லை. அவளும் வரவில்லை.

ஊருக்குப் போய்விட்டாளோ என்று எண்ணினேன். போய்விட்டாள் என்று முடித்துக்கொண்டு வருந்தினேன். "நீ யார்" என்று கேட்பதற்கு எனக்கு தைரியம் இல்லையே? கண்டதையெல்லாம் ஊரார் பேசுவார்களே என்ற அச்சம் ஒருபக்கம், எவ்வாறு புதிய ஆசாமியைக்கேட்பது என்ற நாகரிகக்கோட்பாடு ஒருபக்கம், இரண்டும் சேர்ந்து என்னை கோழையாக்கிவிட்டன. நான் கோழையென்று தெரிந்து கொண்டும், ஆசை என்னைவிட்டு அகலுகின்றதா? அது மட்டுமா? கோழை என்று தெரிந்துகொண்டும், ஆசை இன்னும் அதிகமாக என்னை வெருட்டி வாதைப்படுத்து கின்றது.

ஆசையும் மரணமும் ஒளிந்து கொண்டுதான், மனித னோடு போராடுகின்றன. மனிதத்தனமாய் நேரே நின்று சண்டை செய்யும் ஆற்றல் அவைகளுக்கு கிடையாது. ஒளிந்து பிடிக்கும் விளையாட்டில், அவைகள் கைதேர்ந்தவை கள். ஆசையைப் பூர்த்திசெய்துகொள்ள வேண்டும் அல் லது வைராக்கியத்தால் அதை அடித்துத் துரத்திவிடவேண் டும். இல்லாவிடில் ஆசை ஒழியாது. வெற்றியிலே, காரி யத்திலே கலந்து ஆசை, உருமாறிப்போனலொழிய, அது ஆசையாக மனித உள்ளத்தில் குடியிருந்துகொண்டு அவனை கொன்று தின்றுவரும். ஆசை, மனிதனை பொம்மையாக ஆட்டிவைக்கிறது. ஆசைதான் மனிதன் என்றும் சொல்லி விடலாம்.

மண்டபத்திலிருந்து வீட்டுக்கு வரும்வழியில் இருள் சூழ்ந்துகொண்டது. சந்திரன் இன்னும் உதயமாகவில்லை. வீட்டுக்கு வந்த சிறிது நேரத்திற்கெல்லாம் ஆகாரத்தை வழக்கம்போல முடித்துக்கொண்டு மெத்தைக்குச் சென் றேன். எனது கோலத்தைக்கண்டு பரிதவிக்க ஒருவர் இருந்தாலும் எனது துயரமும் மனவேதனையும் அவ்வளவாக என்னை துன்புறுத்தமாட்டா. சூரியன் சுட்டுக்கொளுத்திக் கொல்லுகின்றான். என்றாலும் மனிதர்கள் பகலிலேதான் வேலைசெய்து தங்கள் தோல்களைக் கறுப்பாக்கிக்கொள்ளு கிறார்கள். சந்திரனோ குளிர்க்கிரணங்களை உல்லாசத்துடன் எங்கும் வீசுகின்றான். அதை அனுபவிக்க மனிதர்கள்

மறுக்கின்றார்கள். நான் படும் பாட்டைப்பார்த்து, மனிதர்களிடம் பரிதாபப்பட துவக்கிவிட்டேன். வேடிக்கையைப் பாருங்கள். பரிதாபம் இவ்வாறுதான் தோன்றும்போலிருக்கிறது!

இப்பொழுது பொழுதுபோய் ஜாமநேரம் இருக்கும். நடுத்தெருவிலிருந்து பாடும் குரல் கேட்டது. எனது மனது துள்ளி எழுந்தது. அவள் ஊரைவிட்டுப் போகவில்லை என தெரிந்து கொண்டேன். நான் அடைந்த ஆனந்தத்தை அளந்து கூறமுடியாது. நிலவில் நடந்துகொண்டபடியே பாட்டைப் பருகினேன். பாடுகிற பெண்ணுக்கு கூச்சம் சிறிதும் இல்லை. பாட்டிலே மனம் லயித்துப்போனால், கூச்சம் உண்டாவது அருமை. பாரதியாரின் விடுதலைப் பாட்டு, முருகன் பாட்டு முதலியவைகளைப் பாடினாள். என்னுடைய ஆங்கில இலக்கிய மோகத்திலே, தமிழ்நாட்டிலே, சுப்பிரமணிய பாரதியார் என்ற கவி பிறந்து பல இன்னல்களுக்கு ஆளாகி, அகால மரணமடைந்தார் என்று மட்டும் தெரியும். அவருடைய கவிதையின் தன்மை எனக்குத் தெரியாது. ஆனால் அவர் "பஞ்சரத்தினத் திருப்புகழ்" என்பதை இனிமையான ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருந்ததை நண்பர் ஒருவர் காட்ட, "நியூ இந்தியா" என்ற பத்திரிகையில் படித்திருந்தேன்.

பின்னர் தான் தங்கம்மாள் எடுத்துக்காட்டி உபதேசம் செய்ததில், அவருடைய நிகரற்ற கவிதா சக்தியும் அவரது வாழ்வின் பெருமையும் அவர் அகால மரணமடைந்ததற்கு காரணமாய் இருந்த தமிழரின் அலட்சிய புத்தியும் விளங்கின. ஆனால் அன்றிரவு அந்தப்பெண் பாடுகையிலே, பாரதியாரின் பாட்டுகள் என்று நான் தெரிந்துகொள்ளாமலே, அவைகளை என்மனம் நாடிற்று. அவைகளைக் கேட்டதில், என் உள்ளம் குவிந்தது. நடுச்சாமத்தில் பாடும் அந்தப் பெண்ணை ஊரார் அவதூறு பேசுவார்கள் என்பது எனக்குத் தெரியும். அவளுக்குத்தெரியுமா? ஆனால் அவள் பாடும் தோரணையிலிருந்து, அவள் மிகுதியும் ஊரார் வம்பை லட்சியம் செய்யக்கூடியவளாகத் தெரியவில்லை. பாட்டும் முடிந்தது. ஆனால் எனக்கு தூக்க சங்கதி பூஜ்ஜியம்தான். மாறி

மாறி கண் விழிக்கலாம் என்று சந்திரனோடு ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் என்று எண்ணினேன். அவன் அதுக்கு இசையமாட்டான்போல தோன்றிற்று. என்னைக் காட்டிலும் கடுமையான காதல் நோயால் அல்லல் அடைந்து ஊக்கமின்றி, சந்திரன் எப்பொழுதும் கண் விழித்துச் செல்லுகின்றான் போலும்!

எனது படுக்கையைக்கூட நாடாமல், நிலவினிலேயே விழித்துக்கொண்டிருந்த நான், கீச்சுக்குருவியின் சத்தம் கேட்டு காலையில் எழுந்திருந்தேன். நிலவினிலே படுத்துறங்கும் வழக்கம் எனக்கு கிடையாது. பேய்க்கு வாழ்க்கைப் பட்டால் புளியமரம் ஏற பயப்படலாமா என்று சொல்லுவார்கள். பஞ்சணையில் துயின்ற ராமன் காட்டுக்குச்சென்ற பின்னர் எதிலே படுத்துறங்கினார்? பஞ்சணை கூட வந்ததா? சந்தர்ப்பங்களுக்கும் உணர்ச்சிகளுக்கும் அடிமையான மனிதன் அவைகளை மீறி காரியம்செய்ய முடியுமா? சந்தர்ப்பங்களின் கொடுங்கோலாட்சிக்கு அவன் கட்டுப்பட்டுத்தானே நடக்கமுடியும்?

அவளுக்கு கலியாணம் ஆகியிருந்தால், அவளைப்பற்றி நினைப்பது தவறாயிற்றே என்று எண்ணினேன். ஆனால் பரிசுத்தமான உள்ளம் தீயவழியில், தவறியும் செல்லாது என்று பேராசிரியர் ஒருவர் எழுதியிருப்பது எனக்கு ஒரு வகைத் துணிவை தந்தது. ஆனால் அது நீரில் மூழ்கித் தவிப்பவன், துரும்பை துணைக்கொண்டதுபோலாகும். அந்தப் பெண்ணிடம் எனக்கு அளவற்ற ஆசை ஏற்பட்டபடியால், அவள் கன்னியாகத்தான் இருக்கவேண்டும் என்று குருட்டுப்பிடிவாதத்துடன் முடித்துக்கொண்டேன். என்றாலும் சந்தேகம் முழுதும் ஒழிந்தபாடில்லை. எனவே, அவசரமில்லாமல் மெதுவாக முள்ளியாற்றுக்கு சென்றேன்.

அவள் வருவதை வழியிலேயே கண்டுவிட்டேன். என் மனம் அவளோடு சென்றது. கால்கள் என்னோடு இருந்தன. எனவே நடையோடுமா? அவளைப் பார்த்தவுடன் பேச வாயெடுத்தேன். வாய் அடைத்துப் போய்விட்டது. காலை வேளையில் காற்று அடித்தும் கூட, உடல் வியர்த்துப்போயிற்று. அவளைப் பின் தொடர்ந்து செல்லலாமா என்று ஒரு

எண்ணம் தோன்றிற்று. அனுகரிகத்துக்குக்கூட நீ துணிந்து விட்டாயா என்று நான் என் மனதை கண்டித்தேன்.

பிறகு, செய்யும் காரியம் தெரியாமல், முள்ளியாற்றில் ஸ்னானம் செய்ய இறங்கினேன். முள்ளியாறு முள்ளாறு ஆயிற்று. உடம்பெல்லாம் குத்திற்று. திரும்பி வரும் பொழுது, ஊர்ப் பெரியார் ஒருவர் 'ஊர் கெட்டுப் போய் விட்டது. காரணமில்லாமல் சமய சந்தர்ப்பமில்லாமல், நடு நிசியில் பெண் ஒருத்தி தனது அடக்கத்தை விட்டுவிட்டு பாடுபடுவதென்றால், ஊரில் ஆண் பிள்ளைகளுக்கு மதிப் பேது ? பட்டணத்துப் பெண்ணும். நாகரிகத்தில் வளர்ந்த தாம் ! இருபது வயதாகியும் கலியாணம் செய்யாமல் வைத் திருந்தால், தாசியைப் போல் ஏன் கொம்மாளம் போடமாட் டாள் ? இதிலே பாசாங்கு அரசுப் பிரதிட்சணம் வேறு ! இங்கிலீஷ் படித்த பெண்ணல்லவா ? நம் ஆசாரத்தை விட வில்லை என்று காட்டிக்கொள்கிறாளாம் ? தும்பைச் செடியில் பூப்பறிக்க ஏணிவைத்துப் பறிக்கும்படி கலிகாலம் நெருங்கி விட்டது" என்று இன்னொருவரிடம் சொல்லிக்கொண்டு போனார்.

என் மனதிலே இதைக்கேட்டு களிப்பும் துயரமும் நடனமாடின. நான் நினைத்தபடியே ஊரார் அவளை அவ தூறு பேசியது எனக்கு துன்பத்தைத் தந்தது. அவ ளுக்கு கலியாணம் ஆகவில்லை என்று கேட்ட என் மனம் எவ் வாறு இருந்திருக்கும் என்பது நான் சொல்லக்கூடியதல்ல. நீங்களே ஊகித்துக்கொள்ளுங்கள். என் மனச் சோர்வு முழு தும் அடியோடு பறந்துவிட்டது. 'சரி, எனது ஆசையில் சாத்தியமுண்டு. பலிக்கலாம்' என்ற களிப்புடன் வீட்டுக்கு வந்தேன். வைத்தியப் பிரஸ்தாபம் ஏற்படாதவாறு புசித் தேன். தாயாரும் திருப்தியடைந்தார். அறைக்குச் சென்று கண்ணாடிமேல் பாய்வதுபோல், என் அழகை பார்த்துக் கொண்டேன். சுற்றளவில், குறைந்தது ஒரு அங்குலமாவது பூரிப்பினால் பெருத்திருப்பேன் என்று நினைத்தேன். ஊர்ப் பெரியாரை வாயார வாழ்த்தினேன். திக்கற்றவர்களுக்கு தெய்வமும் ஊர்ப் பெரியவரும் தான் துணை என்று சொல் லிக்கொண்டே, ஆனந்தமடைந்தேன்.

அன்றையதினம் பிற்பகலில் சுப்பன் கடைக்குச் சென்றேன். 'வரவேண்டும். எம். ஏ!' என்று உபசாரம் செய்து அவன் என்னை அழைத்தான். அவன் எனது திண்ணைப் பள்ளி தோழன். சில்லரைச் சங்கதிகளில் அவன் மிகவும் சமர்த்தன். அவன் கௌரவமாக வாழ்ந்துவந்தான். எம்.ஏ. என்றால் அவன் ரொம்ப மதிப்புவைத்திருந்தான். வருஷத்துக்கு நாலைந்து தடவை அவன் கடைக்குப்போவேன். எம். ஏ. என்று அவன் என்னை முன்னம் அழைத்தபொழுதெல்லாம் எனக்கு சந்தோஷம் உண்டானதுண்டு. இந்த சமயம் இல்லை. எம். ஏ. படிகிற பாடு அவனுக்குத் தெரியாது! அவனிடம் நான் சொல்லிக்கொள்வதும் சரியல்ல என்று சும்மாயிருந்தேன்.

'ஊரில் விசேஷம் ஏதேனுமுண்டா' என்று நான் மாமூலாக கேட்பதைப்போல் கேட்டேன். 'ஊர், நாகரிகம் அடைந்து வருகிறது' என்று சிரித்தான். என்னவென்று கிண்டினேன். "சொரணத்தாச்சி வீட்டுக்கு இங்கிலீஷ் படித்த பெண் ஒருத்தி வந்திருக்கிறாள். கலியாணம் ஆகவில்லையாம்! ராத்திரி முழுதும் பாடித் தீர்த்துவிடுகிறாளாம்! எல்லாம் பக்தி ரசமான பாட்டுகள் தான்; என்றாலும் ஊரார் பேசுவதை காது கொடுத்துக் கேட்க முடியவில்லை. கலியாணம் செய்துகொள்ளாமல் தாசியாகப் போகிறாள் என்று வாய் கூசாமல் சொல்லுகிறார்கள். வந்த அந்த பெண்ணுக்கும் கிராம வாழ்வு நிதானமில்லைபோலிருக்கிறது. இதில் வேடிக்கை என்னவென்றால் அவளிடம் நேரில் யாரும், இது வரை 'நீ செய்வது தப்பு' என்று சொல்லவில்லை. அதற்கு ஊரார்க்கு தைரியம் கிடையாது. ஆள் இல்லாத இடத்தில் பேசுவதுதான், கிராமத்துக்கு, அதுவும் நமது பொய்யூருக்கு, சுபாவமாச்சே? இது உனக்குத் தெரியாதா?"

"இன்னும் ஒரு சேதி. அம்பட்ட அப்பாவு சிங்கப்பூருக்குப் போயிருந்தவன் நேற்றைய தினம் திரும்பி வந்திருக்கிறான். சிங்கப்பூரில் நல்ல சம்பாத்யம்போலிருக்கிறது. கையில் வீர சங்கிலி. காதில் கடுக்கன். ஏக தடபுடல்! சட்டை அணிந்து விரல்களில் மோதிரம் போட்டுக்கொண்டு, இரண்டு மூன்று பெட்டிகள் சகிதமாய் வண்டியில் வந்து

இறங்கினான். இது ஊராருக்குப் பிடிக்கவில்லை. அம்பட்ட அகம்பாவத்தைப் பார் என்கிறார்கள். 'குண்டுமணித் தங்கம் கிடைத்தாலும் அம்பட்டன் குண்டி, கீழே தரிக்காது' என்கிறார்கள். இது எனக்குப் பிடிக்கவில்லை. பெண் சாசுவத அடிமையாகவும், தொழிலாளி பரம்பரை ஏழையாகவும் இருத்தல் வேண்டும் என்பது இவர்கள் எண்ணம் போலும்! உன்னிடம் இவைகளைச் சொல்லலாம் என்று சொன்னேன். நான் இப்படிப் பேசுவது தெரிந்தால், என் கடைக்குத் தீ வைத்து கொளுத்திவிட்டாலும் விடுவார்கள்" என்று சுப்பன் சொன்னான். அதை கேட்டுக்கொண்டேன்.

சுப்பன் அதிகமாய்ப் படிக்காவிட்டாலும், சங்கதிகளை சரியாய் யோசித்துப் பார்ப்பதில் கெட்டிக்காரன். மேலும் அவனுக்கு புதிய புதிய கருத்துக்களைக் கேட்கவும், புதிய புதிய சம்பவங்களைப் பார்க்கவும் சந்தோஷம் அதிகம்.

சுப்பனிடம் விடைபெற்றுக்கொண்டு, நடுத்தெரு வழியாக சொரணத்தாச்சி வீட்டுப் பக்கமாக வந்தேன். குளிர் காய்ச்சல் வந்த மனிதனுடைய கைகால்கள் நடுங்குவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதைப் போலவே எனது கை கால்கள் நடுங்கி ஆட்டமெடுத்தன. புதிதாக கன்ன வாயிலில் நுழையும் குஞ்சுத் திருடனைப்போல நான் பயந்தேன். சொரணதாச்சி வீட்டில் குழந்தைகள் யாராவதிருந்தாலும், பாடம் சொல்லிக்கொடுக்கிறதைப்போல, அங்கு செல்லலாம். அதுவுமில்லை.

சொரணத் தாச்சி ஒண்டி. நான் தாராளமாய் அவர்கள் வீட்டில் நுழையலாம். ஆனால் முடியவில்லை. ஏன்? கூச்சமொன்று. இன்னொரு காரணம் என்னவெனில் மலையுச்சியில் வாழும் அதிகாரிகளைப்போல் நானும் மற்றவர்களோடு சரஸமாய் பழகும் வழக்கம் வைத்துக்கொண்டதில்லை. அந்த 'வழக்கத்தை திடீரென்று இப்பொழுது மாற்றிக் கொண்டால், குட்டு வெளிப்பட்டுவிடாதா? சுய காரியத்துக்காக மானத்தை இழப்பது நாகரிகமாயிருக்குமா? நாகரிகம் என்று பிறரால் மதிக்கப்படுமா? நடுத்தெருவில் நான் அன்றிருந்த நிலை தங்கம்மாளுக்கு அப்பொழுது தெரியாது. மறுநாள் காலையில் முகத்தை நன்றாகத் துடைத்துக்கொண்டு,

கண்ணாடி பார்த்து ஆற்றின் கரைக்குச் சென்றேன். ஒரு வரையும் காணும். தங்கத் தகட்டைப்போல ஜோதி மின்னிக்கொண்டு, அடி வானத்தில் கிளம்பும் இளஞ்சிங்கச் சூரியனைப் பார்த்தேன். என்னுடைய துயரம் யாவையையும் ஒருவாறு மறந்துவிட்டேன். உயிர்க்குலத்தைச் செழிப்புடன் வளரச்செய்து உயிர் கொடுக்கும் ஆதி மூர்த்தியல்லவா சூரியன் ? அவன் வருகையைக் கண்டு நான் களிப்படையாமலிருக்கமுடியுமா ? ஆனால் இந்தக் களிப்பு சிறிது நேரந்தானிருந்தது. அவள் ஏன் வரவில்லை என்ற நினைப்பு மிகவும் அழுத்தமாக மறுபடி உடனே வந்து வதைத்தது. நான்தான் அதிகாலையில் வந்துவிட்டேனே என்று சிந்தித்துக்கொண்டிருந்தேன்.

சிந்தனைக்கு அதிக இடம் இல்லை. அவள் வருவதை எனது கண்கள் பார்த்துவிட்டன. நீர்க்கரைக்கு வந்து விட்டாள். எனக்கும் அவளுக்கும் பத்தடி தூரம் இராது. வேறு யாரும் இல்லை. நான்தான் பேசக்கூடாதா ? போர்க்களத்தில் தனது ஆயுதத்தின் வலிமையை இழக்கக் கடவது என்று கர்ணன் சாபம் பெறவில்லையா ? அந்தப் பெண்ணுடன் நான் அந்த சமயம் வார்த்தையாடினால் என்ன ? குடி முழுகிப்போய்விடுமோ ? என்றால் பேசமுடியவில்லை. இதைப்பற்றி அடுத்தடுத்துப் பேசிப் பயன் என்ன ? என்னால்தான் பேச முடியவில்லையே ! அவள்தான் என்னைப் பார்த்தாளா ? பார்க்கவும் இல்லை. பார்த்ததாக காட்டிக் கொள்ளவுமில்லை. பார்க்க விருப்பம் கொண்டவளாகவும் எனக்குத் தெரியவில்லை. ஆனால் அவள் முகத்தில் மட்டும் ஏதோ மாறுதலிருந்தது. எத்தகைய மாறுதல் என்று என்னால் அறியக்கூடவில்லை. அவள் தனது வழக்கமாயுள்ள ஆற்றின்கரை காரியங்கள் அனைத்தையும் செய்துகொண்டு வீட்டுக்குச் செல்ல யத்தனித்தாள். இதுவரையில் வெகுவான மன குழப்பத்துடன் கால்களை, குழந்தைகள்போல் நீரில் விட்டு ஆட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்த நானும் சரேலென்று ஆற்றிலிறங்கி ஸ்நானத்தை முடித்துக்கொண்டு அவளைப் பின் தொடர்ந்தேன். என்ன ஆச்சரியமென்றால் செல்லும்பொழுது, அவள் ஒருதரம் கூட திரும்பிப் பார்க்க

வில்லை. 'வேண்டுமென்றே அடம் பிடிக்கிறாள்' என்று நினைத்தேன். (தங்கம்மாள் சிரித்தாள்.) இப்பொழுது தெரிந்துவிட்டதா அவள் அப்பொழுது செய்தது அடந்தான் என்று? அவள் நடுத்தெரு வழியாகப் போய்விட்டாள். நானும் வீட்டுக்குச் சென்றேன்.

பிற்பகல் 20 நாழிகை இருக்கும். முகத்தை நன்றாக கழுவி, சந்தனப் பொட்டிட்டு, கிராப்பை நன்றாக சீவி விட்டுக்கொண்டு, அன்றைய தினம் வெளுத்து வந்த தும்பை மலரைப்போன்ற வேஷ்டியை கட்டிக்கொண்டு வெளியே புறப்பட்டேன். "வெய்யில் தணிந்த பிறகு வெளியே போகலாகாதா" என்று தகப்பனுங் கேட்டார். "போகிறவனை ஏன் வழிமறிக்கிறீர்கள்" என்று தாய் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே, நான் வெளியேறிவிட்டேன். நடுத்தெருப் பக்கம் போனேன். அந்த சமயம் சொர்ணத்தாச்சி என்னைப் பார்த்து, வா என்று அழைத்தார்கள்.

நான் மிகக் கூச்சமுள்ளவன்; எனவே ஆவல் யாதொன்றுமில்லாதவன் போல நடையை பின்னாலே தள்ளிப் போட்டு மெதுவாகச் சென்றேன். "உனக்கு உத்தியோகமானது முதல், உன்னை கண்ணிலேகூட காண முடியவில்லையே! என்றைக்கு நீ ஊருக்கு வந்தாய்" என்று சொர்ணத்தாச்சி என்னை கேட்டார்கள். நான் வீட்டிற்குள்ளே நுழைவதற்கு முன், ஆச்சி இவ்வாறு கேட்டதனால் வெளியேயிருந்தபடிக்கே எனக்கு விடை கொடுத்து அனுப்பிவிடுவார்களோ என்று பயந்தேன். எனவே பேசாமல் இருந்தேன். உள்ளே வா போகலாம் என்று ஆச்சி என்னை அழைத்ததும், என் தலை கிர் என்று சுற்றிற்று. இது உள்ளப் பூரிப்பின் பயனாகும். சிறிது நேரம் கழித்து இருவரும் உள்ளே சென்றோம்.

என் கண் தேடியலைந்தது, அந்தப் பெண்ணைத்தான் என்று சொல்லவும் வேண்டுமா? (தங்கம்மாள் இப்பொழுது பெரிதாகக் கனைத்துவிட்டு சிரித்தாள்) தங்கம்மாள் சிரித்ததற்காக, என்னால் உண்மையை மறைக்கமுடியுமா? மேலும் சந்தர்ப்பத்திற்கேற்ற இயற்கைத் தூண்டுதலை வெளியிடுவதற்கு வெட்கம் ஏன்?

அந்தப் பெண் தாழ்வாரத்தில் இருந்தாள், புஸ்தகமும் கையுமாக. என்னைக் கண்டதும் புஸ்தகத்தை மூடிவைத்தாள். அப்பொழுது ஆச்சி சொல்லுகிறார்கள்:—"உனக்கு கோபாலனைத் தெரியாதே! என்னவோ சொல்லிக்கொள்ளுகிறார்களே எம். ஏ. என்று, அதிலே தம்பி இரண்டு பட்டம் வாங்கியிருக்கு. நமக்கு தம்பி சொந்தம்தான். ஆனால் நெருங்கின பந்து அல்ல!!" தங்கம்மாள் இதைக் கேட்டதும் விஷமச் சிரிப்பு சிரித்தாள். அவ்வளவு விஷமத்திற்கும் அர்த்தம் என்ன என்று யோசித்துக்கொண்டிருந்தேன். நான் யோசித்துக்கொண்டிருக்கையில், 'இந்தப் பெண் என் அண்ணன் மகள் தங்கம்மாள்' என்று ஆச்சி சொன்னார்கள்.

சென்னை ராணி மேரி கல்லூரியில் படித்த தங்கம்மாள் என்ற பெண் சென்ற சில மாதங்களுக்கு முன்னர் பி. ஏ. யில் முதல் வகுப்பில் தேறி, பதக்கமும் பெற்றதை நான் பத்திரிகையில் படித்திருந்தேன். அந்தத் தங்கம்மாளா இவள் என்று சந்தேகப்பட்டேன். இனிமேல்கூட சந்தேகத்தை தீர்த்துக்கொள்ள முடியாதா? "நீங்கள் ராணி மேரி கல்லூரி மாணவியா" என்று கேட்டேன். ஆம் என்று சொல்லி, அவள் தலையை அசைத்தாள். நீங்கள் படித்துக் கொண்டிருந்த புஸ்தகம் என்ன என்று கேட்டேன். பிரெஞ்சு மேதாவி விக்டர் ஹியூகோ எழுதிய "லேமிஸராபிள்" என்றாள். இந்தப் புஸ்தகத்தை நான் படித்திருக்கிறேன். ஆச்சரியமான நூல் என்றேன். ஆம் என்றாள் அவள். "நம் இருவருடைய இலக்கிய சம்பந்தமான ருசிகளும் ஒன்றாயிருக்கின்றதே" என்றேன். மீண்டும் விஷமமாக சிரித்தாள். (தங்கம்மாள் இப்பொழுதும் விஷமமாக சிரித்தாள்.) இப்பொழுது விஷமமாக தங்கம்மாள் சிரித்தது போலவேதான் அப்பொழுதும் சிரித்தாள்.

சிறிது நேரத்திற்கெல்லாம், பெருமூச்சு விட்டுக் கொண்டு, தமிழில் இந்தமாதிரி நூல்கள் எப்பொழுது வெளி வருமோ என்று ஏக்கம் கொண்டதைப்போல சொல்லி விட்டு, "பாரதியார்மட்டும் தமிழ் நாட்டில் இக்காலத்தில் பிறந்திருக்காவிடில், நமது நாடு பாலைவனமாய் போயிருக்கும்" என்று அவள் சொன்னாள். அப்பொழுது அவ

ளுடைய கண்கள் ரத்தக்கண்ணீரை வடித்ததைப்போல காணப்பட்டன. எனக்கு உள்ளூற வருத்தம். பாரதியாரைப்பற்றி எனக்கு அதிகமாக ஒன்றும் தெரியவில்லையே என்று வருந்தினேன். 'ஆகா! நான் ஆங்கில பாஷையில் மோகம்கொண்டதால் நேர்ந்த கதியல்லவா இது? எனவே மன்னிப்பு கேட்பதைப்போல, 'எனக்கு பாரதியாரைப்பற்றி அதிகமாகத் தெரியாது. மன்னிக்கவும். நான் ஆங்கிலம் கற்றது குற்றமா' என்றுக்கேட்டேன்.

"அது குற்றம் அல்ல. ஆனால் தமிழை மறந்தது குற்றமாகும்; பாபமாகும். இலக்கணமே சரியாயில்லாத பாஷைகளில் இலக்கியம் குவிந்து கொண்டிருக்க, நமது அருமைத் தமிழில் இலக்கியப் பஞ்சம் ஏற்பட்டுவிட்டதே! பாரதியார் அகால மரணமடைந்ததற்கும் தமிழிலே இலக்கியப்பஞ்சம் ஏற்பட்டதற்கும் ஆங்கிலம் கற்ற நாம்தான் காரணம். அந்தப் பழியை நாம் எந்தவகையில், எப்பொழுது போக்கிக்கொள்ளப்போகிறோமோ, தெரியவில்லை" என்று அவள் சொன்னாள். நான் பெருமூச்சு விட்டுக்கொண்டு, மௌனம் சாதித்தேன். பாரதியாரைப்பற்றியும் தமிழ்மொழியைப்பற்றியும் அவள் இன்னும் என்னவெல்லாமோ சொன்னாள்.

இனியும் நான் வாய் பேசாமல் இருப்பது உசிதம் அல்ல என்று தீர்மானித்துக்கொண்டேன். "நீங்கள் சொல்லியது யாவும் எனக்கு உடன்பாடு. நம்மவர்கள் கண்ணிருந்தும் குருடர்கள்; கற்றறிந்தும் மூடர்கள்; உயிரிருந்தும் நடைபிணங்கள். இந்த நிலைமை ஏற்பட்டதைப்பற்றி, இதற்குமுன் நான் சிந்திக்காமலிருந்தது குற்றம்தான். உங்கள் உருக்கம், என்னை தமிழ் இலக்கியத் தொண்டனாக செய்துவிட்டது" என்றேன்.

நாங்கள் பேசுவதை சொர்ணத்தாச்சி கேட்டுக்கொண்டுதான் இருந்தார்கள். ஆனால் இலக்கியப் பஞ்சம்போன்ற சொற்கள் அவர்களுக்கு விளங்கவே இல்லை. எனவே உங்களுக்குப் பசிக்கவில்லையா என்று பூனை வேலியில் கரடிவிட்டு ஓட்டுவதைப்போல கேட்டார்கள். சிறிது நேரம் யாதொன்றும் பேசாமலே இருவரும் சும்மாயிருந்தோம்.

"உங்களைப்பற்றி அத்தை சொல்லியிருக்கிறார்கள். வெகு நாட்களாக உங்களைக்காண ஆவல்" என்றாள் அந்தப் பெண். இதைக்கேட்கவும் எனக்கு அடங்காத மகிழ்ச்சி உண்டாயிற்று. நான் போய் வரட்டுமா என்று கேட்டேன். அவசரமாயிருந்தால் சரி என்று சொன்னாள். இல்லை; நாளைக்கு வருகிறேன் என்று சொல்லிவிட்டு, விடைபெற்றுக்கொண்டு வெளியேவந்து விட்டேன்.

வீட்டுக்கு வந்ததும் என் உத்தியோகத்தை ராஜிநாமா செய்வதென்று தீர்மானித்துக் கொண்டேன். உடனே மேலதிகாரிக்கு ராஜீநாமாக்கடிதம் எழுதி, அதை அன்றைய தபாலிலேயே சேர்த்துவிட்டேன்.

இந்த ராஜீநாமா கடிதத்திற்கு அந்தப் பெண்தான் காரணம். அதை நகல் எடுத்து, ஒரு பிரதியை சொர்ணத் தாச்சி வீட்டுக்கு எங்கள் வீட்டு வேலைக்காரியின் மூலமாக அனுப்பிவைத்தேன். மறுநாள் நான் சொர்ணத்தாச்சி வீட்டுக்கு போனதும், அந்தப் பெண் என்னை வெறிக்கப்பார்த்தாள். ஆனால் அந்தப்பார்வையில் அன்பு நிறைந்துகிடந்தது. அவள் பேசுவதற்கு முன்னமேயே,

கனக மழை பொழிவதென
தமிழரகம் தழைத் தோங்க
சிறந்த தமிழ் யாமெழுத
செல்வனருள் பெறவேண்டி

நிற்கின்றேன் என்று என்னை யறியாமலே நான் உளறிவிட்டேன்.

அந்தப் பெண் சிரித்துக்கொண்டு, 'யாம் என்று சொன்னது பொருத்தமுள்ளதுதான்; என்னையும் சேர்த்துத் தானே' என்றாள். இது காதலின் கனிமொழி என்று தெரிந்துகொண்டேன். நீளச்செல்லுவானேன்! அதன் விளைவு தான் நாங்கள் இப்பொழுது சேர்ந்து வாழ்வது.

இவ்வாறு கோபாலன் கதையை பட்டென்று முடித்துவிட்டான்.

நான் தங்கம்மாளைப் பார்த்தேன். "கோபாலன் சொன்னதில் ஒரு எழுத்துக்கூட பிசகு கிடையாது. நல்ல வேளையாக, கோபாலன் காதலைப்பற்றி ஒரு சிறு பிரசங்கம் செய்யாமல் விட்டதைக்குறித்து எனக்கு சந்தோஷம்" என்று தங்கம்மாள் இந்த வரலாற்றை ஆமோதித்தாள்.

காதலர்கள் ஒப்புக்கொண்ட பிறகு, நமக்கு என்ன வேலை?

அமலநாதன்

மதுராபுரி என்று ஒரு நகரம். கனகராஜ்யத்துக்கு மதுராபுரி தலைநகரமாகும். மதுராபுரியில் வீரசேனன் என்ற மன்னன் அரசாண்டு வந்தான். பெயருக்குத்தக்க குணங்கள் அமையப்பெற்ற வீரசேனன் தனது நாட்டை செவ்வனே ஆண்டுவந்தான். நீர்வளம் நிலவளம் நிறைந்த நாடாதலின், குடிகளும் உணவு முதலிய சௌகரியங்களுக்கு குறைவின்றி வாழ்ந்து வந்தனர். மதுராபுரியை வர்ணிப்பதற்காக ஒரு வால்மீகி அல்லது கம்பன் இருந்தால் நல்லது. மதுராபுரியில் வீரசேனன் குடிமக்களின் மனம் கோணுமல் அரசாண்டு வந்தான். அவன் தண்ட நீதி சரியாய் நடத்தாமல் ஜனங்களை மனம்போனவாறு விட்டான் என்பது மேற்கூறியதற்கு அர்த்தமில்லை. எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம்போல, தலைநகரத்தில் தண்டநீதி சரியாக நடைபெறுமாகில், ராஜ்யத்தின் எல்லா பகுதிகளிலும் நீதி நன்ருக வழங்கப்பெறும். கோயிலுக்குள் கடவுள் இருப்பதாக ஜனங்கள் மதித்து பயபக்தியுடன் நடந்துகொள்கிருர்கள். ஆனால் கோயிலுக்குள் இருக்கும் குருக்கள் முதலானவர்கள், பொது ஜனங்களைப்போல, கடவுளை அவ்வளவு மதிப்பதில்லை. எனவே தலை அழுகிப்போகுமாகில், உடலைப்பற்றி ஒன்றும் சொல்லத் தேவையில்லை. அதுபோல அரசன் கண்முன்னரே, தலைநகரில் தண்டநீதி தடுமாறி தலைகீழாகப் போகுமாகில், மக்கள் படும் துயரத்தை எடுத்துக்கூற முடியாது.

வீரசேனனுக்கு இந்த ரகசியம் தெரியும்; எனவே அவன் ஒற்றர்களை முழுதும் நம்புவதில்லை. மாறு வேஷம் பூண்டு, அவன் நகர்ச்சோதனை செய்வான். வீரசேனன் அரசியல் காலத்தில், தண்டநீதி சிறிதும் வழுவவில்லை. ஆகவே, ஜனங்களுக்கு யாதொரு குறையுமில்லை. அவர்கள் உழைப்பாளிகளாகி, நாட்டின் செல்வத்தை பெருக்கிவந்தார்கள். வீரசேனன் பொதுஜன வாழ்த்துடன் வாழ்ந்தா

னெனினும், வேற்றரசர்களின் பகைமைமட்டும் அவனுக்கு இருந்துவந்தது. தான் செய்யவேண்டியதை சரிவரச்செய்து விட்டு, பாக்கிப்பொறுப்பை அவன் கடவுளிடம் ஒப்புவித்து விட்டான்.

இவ்வாறு க்ஷேமமாய் வாழ்ந்துகொண்டிருந்த மதுரா புரியில், நடுத்தர வாழ்வில் ஒரு குடும்பம் வாழ்ந்துகொண் டிருந்தது. குடும்பத்தின் தொழில் பயிர்த்தொழிலாகும். குடும்பத்தில் நான்கு பேர்கள் இருந்தார்கள். தாய் தகப் பன்மார் இருவர்; இரண்டு குழந்தைகள். குழந்தைகளில் ஒன்று ஆண்; மற்றொன்று பெண். குடும்பத்தின் நாயகனுக்கு குலசேகரன் என்றும் நாயகிக்கு சொர்ணபாய் என்றும் பெயர். பையனை அமலநாதன் என்று அழைப்பார்கள்; பெண்ணுக்கு மதுரவல்லி என்று பெயர்.

குலசேகரனுக்கு பயிர்த்தொழில் தெரியுமல்லாமல், சொந்தமாய் பயிரிடுவதற்கு அவனுக்கு நிலம் கிடையாது. பிறர் நிலத்தை குத்தகைக்கு வாங்கி பயிரிட்டு, வந்த ஊதி யத்தைக்கொண்டு, அவன் தனது குடும்பத்தை போற்றி வந்தான். குலசேகரன் ஏழையானாலும் மதுராபுரியில் அவ னுக்கு மதிப்பதிகம். சொல்தவறாத வீரன், உத்தம குலசேகரன் என்றும், படிதாண்டாப்பத்தினி சொர்ணபாய் என்றும் நகரத்தில் சொல்லிக்கொள்ளுவார்கள். தனது மெல்லிய ஊதியத்தைக்கொண்டு, குலசேகரன் வாழ்க்கை நடத்தி வந்தானாயினும், குடும்பத்தில் ஒன்றுக்கும் குறை இருந்ததில்லை. அந்தக் குடும்பத்துக்கு சாந்தி மடம் என்று அழைத்தாலும் பொருத்தமுள்ளதாகும். ஆனால் கடவுள் நல்லவர்களைத்தான் சோதிப்பான் என்று உலகிலே சொல் லிக்கொள்ளுவதில்லையா? அதுபோல குலசேகரன் குடும் பத்திலும் ஆயிற்று. திடீரென இருந்தாற்போல, குலசேக ரன் மாண்டுபோனான். அனுயாச மரணம் என்று ஊரார் சொல்லிக்கொண்டார்கள்.

வீரன் சொர்க்கலோகம் செல்லுகிறான்; நல்லவர்கள் நற்கதியடைந்து நல்லுலகம் சேருகின்றார்கள். முக்தன் மோட்சம் அடைகின்றான்; பக்தன் ஆண்டவன் மலரிணையில் கலந்துகொள்ளுகிறான். ஆனால் மண்ணில் இவர்கள் விட்டு

பிரியும் குடும்பம் என்ருகின்றது? இத்தகைய குடும்பத்தை காப்பது உற்ருர், ஊரார் கடன் அல்லவா? மதுராபுரியார் இதை உணரவில்லை. படிதாண்டா பத்தினி சொர்ணபாய் விதவையானுள். அமலநாதனுக்கு வயது மூன்று. மதுர வல்லி ஒருவயதுக்குழந்தை. விதவைக்கோலம் பூண்ட சொர்ணபாய் வெளியேசென்று என்ன வேலை செய்யக் கூடும்? வீட்டுக்கு அரசியாயிருந்த சொர்ணம் நாட்டிலே கூலிக்கு உழைக்கமுடியுமா? அவ்வாறு உழைக்க தீர்மா னித்தாலும், குழந்தைகளை உடன் எடுத்து, அழைத்து செல்லமுடியுமா? அமலநாதன் தகப்பன் இறந்து போன தைக் கண்டானு? அவன் விளையாட, பொம்மை வேண்டு கின்ருன். அதுவும் ராஜா மந்திரி பொம்மைகளை விரும்பு கின்ருன். மதுரவல்லியோ விம்மி விம்மி தாய் முலைப்பா லுக்கு வீறிட்டு அலறுகிருள். இறந்த குலசேகரனுக்கு ஈமக் கடன் ஆற்றி, சுற்றத்தார் தங்கள் வீடுபோய்ச் சேர்ந்தபின், செத்த வீட்டில் என்ன நடக்கிறது என்று கருத்துக்கொள்ள வேயில்லை. சொர்ணபாய் ஒருசமயம் வாய்விட்டு கதறுவாள். ஒருசமயம் அமலநாதனை கட்டியணைத்து உச்சிமோப்பாள். மற்றொருசமயம் மதுரவல்லிக்கு பால் கொடுத்துக்கொண்டு உடம்பை தடவிப்பார்த்து, உள்ளம் பதறுவாள்.

"ஈசா! உன் சோதனை எனக்கு விளங்கவில்லையே! நான் போய் என் நாயகன் இருப்பினும் அவரேனும் குழந்தை களை காப்பாற்றுவாரே! அபலையான நான் என்ன செய் வேன்? இந்த நிலை நீடித்திருக்குமாகில், என் அருமை ரத்தி னங்களை கொன்றுவிட்டு நானும் உயிர் மாய்த்துக்கொள் வேன். நான் நினைப்பது பாதகம் என்று நான் அறிவேன். வேறு வழியில்லையே! நான் என்ன செய்வேன்" என்று வாய்க்குள்ளாகவே புலம்பிக்கொண்டிருப்பாள். அழுது ஓய்ந்தபின் காடிக்கஞ்சியை மூடிக்குடிப்பதென தீர்மானம் செய்துகொண்டாள். "பெண்ணாய் பிறப்பது கூடாது; அது வும் தரித்திரத்தின் கொடுமைக்கு ஆளாவது கூடாது. போதாக்குறைக்கு விதவையானுல் என்ன செய்வது? அது வும் உதவியற்றவளாய் தவிக்கையில், இந்த பாழான குழந்தைகளை எனக்கு ஏன் கொடுத்தாய், ஆண்டவனே"

என்று கதறுவாள். குலசேகரன் இறந்தகாலத்திலிருந்த பொருளைக்கொண்டு, ஏதோ வாழ்வு நடத்திவந்தாள் சொர்ணுபாய், சிறிது காலம். கை நீண்டால் முழம்போடலாம். வருவாயில்லாமல் எவ்வளவு காலம் வாழ்க்கை நடத்தமுடியும்? "நான் உயிருடன் இருப்பதனால்தானே உற்றார் ஊரார், எனது குழந்தைகளை கவனிப்பதில்லை? நான் மரித்து விட்டால், அப்பொழுதேனும், அவர்கள் குழந்தைகளை காப்பாற்றமாட்டார்களா? எனக்கும் என் குழந்தைகளுக்கும் சிறிதும் பயன்படாத எனது உயிர் உடலை நான் மாய்த்துக்கொள்ளுவதுதான் உசிதம்" என்ற முடிவுக்கு அனேகமாய் சொர்ணுபாய் வந்துவிட்டாள்.

அதற்குள் "அம்மா" என்ருன் அமலநாதன். "நான் போய்விடின், நீ யாரை, அம்மாவென வாய்நிறைய அழைக்கப்போகிருய்" என்று அவனை இறுகத்தழுவி முத்தமிட்டு கோவென்று அழுவாள். அமலநாதனுக்கு இது அர்த்தமாக வேயில்லை. "ராஜா பொம்மைக்கு கால்போய் விட்டது. வேறு பொம்மை வேண்டும்" என்று அமலநாதன் கொன்னிக் கொன்னி தாயிடம் கூறுவான். "கடவுளே! இது என்ன விபரீதம்? எனக்கு வாழ வழிதெரியவில்லை. என் அருமைக் குழந்தை ராஜா பொம்மைக்கு அழுகின்ருனே? எனது கஷ்டத்தைப்பார்த்து நீ களிக்கின்ருயா" என தாய் மனம் பதைப்பாள்.

அமலநாதன் ஒருநாள் வீதியில் விளையாடிக்கொண்டிருந்தான். சிறு குழந்தைகள் அவனுடைய தோழர்கள். நொண்டி ராஜா பொம்மையை கையிலெடுத்து அடித்துக் கொண்டு, "நொண்டி ராஜா வேண்டாம், நல்ல ராஜா வேணும்" என்று சொல்லிக்கொண்டிருந்தான். அந்த விளையாட்டை ஒருவர் பார்த்துக்கொண்டிருந்தார். "ஏன், அப்பா! ராஜாவை அடிக்கிருய்? அந்தமாதிரி செய்யலாமா" என்ருர் அவர். அமலநாதன் அவரை ஏற இறங்கப்பார்த்தான். "காலில்லாத ராஜாவுக்கு, கண் ஏது? நொண்டி ராஜா வேண்டாம். நொண்டி ராஜாவை எல்லோரும் அடிப்பார்கள்" என்ருன். "குழந்தை! நீ யார்" என்ருர். அமலநாதன் என்ருன். "உன் அப்பாவின் பெயர் என்ன" என்ருர். குலசேகரன்

என்றான். "உனக்குப் புதுப்பொம்மை உங்கள் அப்பா தரவில்லையா" என்றார். "அப்பாவைக்காணோம்; அம்மா அழுகின்றாள்; அம்மா வாங்கிகொடுக்கமாட்டேன் என்கிறாள்" என்றான் அமலநாதன். "அப்படியா சரி" என்று அந்த மனிதன் அப்புறம் சென்றார். "நொண்டி ராஜா வேண்டாம்" என்று மீண்டும் அமலநாதன் பொம்மையை போட்டு அடித்துகொண்டிருந்தான்.

அந்த நிமிஷமே சொர்ணபாயின் கலி நீங்கிற்று. குடும்பத்துக்கு வேண்டிய பொருள்கள் யாவும் எப்படியோ வந்து சேர்ந்தன. வந்த வகை தெரியவில்லை. வந்த சாமான்களில் ஒரு சீட்டு இருந்தது. அதைப் பிரித்துச் சொர்ணபாய் படித்தாள். "வீணாக மனம் நோகாதே! குலசேகரன் தான் வந்த வழி போய்விட்டான். ஆனால் அவனது வீரக் குழந்தைகளைக் காத்து வளர்ப்பது உனது கடமை. நல்லவர் கஷ்டத்தை ஆண்டவன் அரசர் மூலமாய்ப் போக்குவான். கடவுளை நம்பினோர் கைவிடப்படார். உனக்கு வந்து கிடக்கும் உணவுப் பொருள்கள் யாவற்றையும் நீ தாராளமாய் உபயோகித்துக் கொள். அவைகள் திருட்டுச் சாமான்கள் அல்ல. அவைகள் ஆண்டவன் அமலநாதனுக்கு அளித்தவையாகும்."

கடிதத்தை மறுபடியும் படித்தாள். கண்ணீர் சொரிந்தாள். "அம்மா! ராஜாப் பொம்மை" என்று அமலநாதன் கேட்ட குரல் காதில் விழுந்தது. வந்த சாமான்களில் ராஜா பொம்மை இருந்தது. அதை எடுத்து அமலநாதன் கையில் கொடுத்தாள். அதை எடுத்துக்கொண்டு வெளியில் ஓட்டம் எடுத்தான், அமலநாதன். உடனே ராஜாவை ஒரு பக்கமாய் ஒரு மேடையில் வைத்து, தனது தோழர்களை அழைத்தான். "வாருங்கள் வாருங்கள். நல்ல ராஜா, புது ராஜா வந்துவிட்டார், எல்லோரும் அவரைக் கும்பிடுவோம், வாருங்கள்" என்றான். இதைப் பார்த்திருந்தவர், "பழைய ராஜா செத்துப்போனாரோ" என்று கேட்டார். "நொண்டி ராஜாவை அடித்து துரத்திவிட்டேன்; நல்ல ராஜா வந்தார், நல்ல ராஜா வந்தார்" என்று புதுப் பொம்மையை சுற்றிச் சுற்றி வந்து அமலநாதன் தோழர்க

ருடன் ஆரவாரம் செய்தான். வேடிக்கைப் பார்த்தவர் அமலநாதன் உடம்பை தடவிக்கொடுத்து, தலையின்மேல் கை வைத்து, "நீடூழி வாழ்க" என்று வாழ்த்திவிட்டு அப்புறம் அகன்றார்.

அமலநாதனும் மதுரவல்லியும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்ந்தார்கள். குலசேகரன் உயிருடனிருந்த காலத்தில் அவனுக்கென, தியானம் செய்வதற்கு வீட்டில் தனியிடம் உண்டு. அந்த இடத்தை சுத்தமாய் மெழுகிப் பெருக்கி, கோலமிட்டு, மணைபோட்டு அதன்பேரில் யாரும் போய் உட்கார்ந்துகொள்ளாமல் சொர்ணபாய் பார்த்து வந்தாள். மாலை வந்தவுடன், மணைக்குப் பக்கத்தில் தீபம் ஏற்றி வைப்பாள். அதன் முன்னே உட்கார்ந்துகொண்டு, "எனது இஷ்ட தெய்வமாகிய குலசேகரநாதா! எங்களை பிரிந்த பின்னரும், எங்களை நீ காப்பாற்றிக் கொண்டு வருகிறாய். உன்னை நினைத்து, யாரோ எங்களுக்கு உதவி செய்து வருகின்றார். யார் எனத் தெரியவில்லை. அவரையும் நீ காப்பாற்றுவாயாக! குழந்தைகள் வளர்ந்து வருகின்றன. அவர்களை எவ்வாறு வளர்ப்பது என்று எனக்குத் தெரியவில்லை. ஏழையாகிய நான் அவர்களுடைய உடல் வாடாமல் பார்த்துக்கொள்ள முடியும். அவர்கள் அசத்தியம் பேசாமல் பார்த்துக்கொள்வேன். வேறு வகைகளில் அவர்களை எவ்வாறு, உயர்ந்த நிலைக்கு வருமாறு என்னால் பழக்கமுடியும்? நீதான் அவர்களுக்கு நல்ல புத்தி கொடுக்கவேண்டும். பதியைத் தவிர வேறு தெய்வம் கிடையாது பெண்களுக்கு என்பார்கள். உன்னைத் தவிர எனக்கு வேறு கதி இல்லை; விளையாட்டுக்காக நீ மறைந்து கொண்டிருக்கிறாய் என்று நான் வாழ்ந்து வருகிறேன். எப்பொழுதும் போல, நீ எங்களை காப்பாற்றி வருவாயாக" என வேண்டிக்கொள்வாள்.

அமலநாதன் பள்ளிக்கு அனுப்பப்பட்டான். பள்ளிக்குப் போனாலும், ராஜா பொம்மை கையோடு போகும். அவன் வீட்டுக்கு வருங்காலையிலும் பொம்மை கையோடு வரும். பள்ளியில் அதை யாரும் தொடாமல் பார்த்துக் கொள்ளுவான், அமலநாதன். பள்ளிக்கு வாத்தி வரு முன்

னர், பையன்கள் யாவரையும் கூட்டி வைத்துக்கொண்டு, "வீர சேனன் வாழ்க" என்று சத்தம் போடச் செய்வான். இந்த சங்கதி சில நாட்களுக்குப் பின்னர், வாத்திக்குத் தெரியவந்தது. அமலநாதனை அழைத்தார்; வினவினார். ராஜா பொம்மையை அவனிடமிருந்து கேட்டார். அமல நாதன் கோபம் கொண்டான்; அழவில்லை. கொடுக்க முடியாது என்று மறுத்துவிட்டான். வாத்தி திகைத்துப் போனார். காரணம் கேட்டார். என் அருமை ராஜாவைப் பிரிந்திருக்க முடியாது என்றான். தூக்கத்தில் என்ன செய் வாய் என்றார் வாத்தி. "அவனை கட்டி அணைத்து காப் பாற்றிப் படுத்திருப்பேன்" என்பான்.

"என்னடா, இவ்வளவு பிரியம் உனக்கு" என்பார் அவர். "என் தங்க ராஜா அவர். அவரை நான் கைவிட மாட்டேன்" என்பான் அமலநாதன். "அவரை யாராவது எதிர்த்தால்" என்பார் வாத்தி. "அவரை நான் கொல்லு வேன்; கொல்ல முடியாவிட்டால், சாவேன்" என்று கர்ச் சனை செய்வான். "உன் ராஜாவை என்னிடம்கொடுக்க மாட் டாயா" என்பார். பாதகம் செய்யமாட்டேன் என்பான். அப்படியானால் உனக்குப் பாடம் கிடையாது என்பார் வாத்தி. "சரி வேண்டாம்; என் ராஜா பார்த்துக் கொள்வார். ராஜாவைக் கொடுத்துவிட்டு பாடம் எதற்கு வேண்டும்" என்பான் அமலநாதன். உபாத்தியாயர் திகைத்துப்போனார். அமலநாதன் பேச்சு அவருக்கு புதிதாக விருந்தது. "பாடம் கற்றுக்கொள்ளாவிட்டால், நீ பின்னால் எவ்வாறு பிழைக்க முடியும்" என்று கேட்பார். "மனிதனுக்கு பராக்கிரமம் வேண்டும்; படிப்பு வேண்டாம்" என்று மழலையில் சொல்லு வான் "நீ எங்கு இதை கற்றுக்கொண்டாய்" என்பார் வாத்தி. "எனக்கு எப்படியோ தெரிந்தது; எல்லோருக் கும் இது தெரியவேண்டும்" என்பான் அமலன்.

உபாத்தியாயர் யோசனையில் ஆழ்ந்தார். "அமலா! நீ நல்ல பிள்ளை. நீ சொல்லுவது சரிதான். பராக்கிரமத்தோடு பாடத்தையும், நீ கற்றுக்கொள்" என்பார். "நல்லது; ஆனால் என் ராஜாவை உங்களிடம் கொடுக்கமாட்டேன், சம் மதமா" என்று அமலநாதன் கேட்பான். வேண்டாம்

என்பார் வாத்தி. "வீரசேனன் வாழ்க" என்பான் அமலநாதன். பையன்கள் யாவரும் வாத்தியைக்கூட கவனிக்காமல், "வீரசேனன் வாழ்க" என்று கோஷம் செய்வார்கள். இவ்வாறு பள்ளியில் வளர்ந்தான் அமலநாதன்.

அமலநாதனுக்கு வயது எட்டு ஆயிற்று. ராமனைப் போல திவ்ய முகமண்டலத்துடன் விளங்கினான். ராமன் சியாமளவர்ணம்; ஆனால் அமலநாதன் ரோஜாச் சிகப்பு. அவன் சந்தோஷத்தையும், கோபத்தையும் அவனது முகத்திலே தெளிவாகக் கண்டுகொள்ளலாம். தொடை வரைக்கும் நீண்டிருக்கும் அவனது கைகளைக்கண்டு, வியப்படையாதவர்களில்லை. படபடவென்று பேசுவான். எதற்கும் அஞ்சான். எவரையும் ஏசான். எவரையும் காப்பது தனது கடமை என்று சதா பிதற்றிக்கொண்டிருப்பான். வீட்டிலே தங்குவதில் அவனுக்கு பிரியம் கிடையாது. ஆனால் சொர்ணபாயின் மனம் கோணுமாறு, எதையும் சொல்லான், யாதொன்றையும் செய்யான். மதுரவல்லியை தடவிக் கொடுத்து தேற்றுவான். தகப்பன் இறந்ததைத் தெரிந்து கொண்ட பின்னர், அவனும் "தீபத்தினிடம்" உட்கார்ந்து தியானம் செய்வான். அமலநாதனுடைய இந்த கடைசிச் செய்கையைக் கண்டு, சொர்ணபாய் அடங்காத ஆனந்தம் கொண்டாள்.

சுமார் பத்து வயதிருக்கும் அமலநாதனுக்கு. அப்பொழுது அவனுக்கு ஒருவிதப் பித்து பிடித்தது. பகலில், பெரும்பொழுது அவன் மதுராபுரியின் மயானத்தில் இருப்பான். இவ்வாறு தனியாக சிறிது காலமிருந்தபின், உடன் தோழர்களையும் அங்கு இட்டுச் சென்று, அவர்களுக்கு உபதேசம் செய்வான். "தோழர்களே! மயானத்தைப் பார்த்தீர்களா? இங்கே, செத்தவர்களின் உடல் வெந்து பிடிசாம்பலாய்ப் போய்விடுகின்றது. அதை உறவினர் எடுத்துச் சென்று, நீரில் கரைத்து விடுகிறார்கள். இவர்களைப் போல நாம் சாகக்கூடாது. எவன் ஒருவன் புகழை விரும்பவில்லையோ, அவன் உடல் சாம்பலாகும். ஆனால் புகழை விரும்பும் வீரனுடைய பூத உடல் போனாலும், அவன் என்றைக்கும் அழியாத புகழுடம்பு அடையப் பெறு

கின்றான். நாம் புழுக்களைப்போல, சாதாரண மனிதர்களைப் போல மரிப்பது ஆகாது. புகழை விரும்பி, புண்ணியத்தில் நாட்டங்கொள்ளவேண்டும். பாபிகள், பயங்கொள்ளிகள் என்ற பழி நாமிருக்கும் காதவழி தூரத்தில் கூட கிட்ட வருவது கூடாது; சிவனது தவப் பீடமாகிய மயானத்தில் சத்தியம் செய்யுங்கள்" என்பான் அமலன்.

"வீரசேனன் வாழ்க" என்று அமலனுடைய கூற்றை பையன்கள் ஆமோதிப்பார்கள். அன்று முதல் அமலனை தனியாகப் பார்ப்பது முடியாது. தனது சிறு சேனை புடை சூழ, அமலநாதன் மதுராபுரியின் விஸ்தாரமான வீதிகளில் வளைந்து வருவான். இந்த விந்தையை மாறுவேடம் பூண்டு வீரசேனன் கண்டு களிப்பான். அமலநாதன் சேனையில் தானும் கலந்து செல்லுவான்; ஆனால் அமலநாதனுடைய சேஷ்டைகள் அரண்மனை அதிகாரிகளுக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் மன்னனிடம் முறையிட்டுக் கொண்டார்கள். மன்னன் முதலில் மௌனம் சாதித்தான். பின்னர் அமலநாதன் செய்கை தனக்கும் சம்மதம் என்றான். அதிகாரிகளின் வாய் அடைத்து விட்டது.

அமலநாதன் ஒருநாள் தனது வீதி ஊர்வலத்தை அணிவகுத்து நடத்திச்செல்லுகையில், குருவிவேட்டைக்காரன் ஒருவனைக்கண்டான். குருவிகளைக்கண்டதும் அவன் உடல் பதறிற்று, உள்ளம் பொங்கிற்று. பாபி என்றான். குருவிக்காரன் திரும்பிப்பார்த்தான். கூட்டத்தைக்கண்டு ஒருவாறு திகிலடைந்தான். "அழகிய குருவிகளைக் கொன்று விட்டாயே, பாபி! அவைகள் தம்மினத்துடன் கூடிக்குலவி களிப்பதில் உனக்கு என்ன கோபம்? உன்னைக்கொன்றால், உன் குடும்பத்தார் என்ன பாடுபடுவார்கள்? பேதையே! இனிக்கொல்லாதே, போ" என்றான். "ஐயா! இனி இல்லை. ஆனால் என்னிடம் உயிருள்ள மாடப்புறுவொன்று இருக்கிறது. அதை தங்களிடம் கொடுக்க அனுமதியுங்கள்" என்றான் அவன். அன்றுமுதல் மாடப்புறு எப்பொழுதும் அமலநாதனுடன் ஊர்வலம் செய்யும் உயிர்த்தோழனாயிற்று. வண்ணமழகிய மாடப்புறு அமலநாதன் அருமையான போஷணையால், செழிப்பாக வளர்ந்து வந்தது.

மதுராபுரியின் மற்றொரு வீதியில், பலாயனன் என்று ஒரு தனவந்தன் வாழ்ந்துவந்தான். பலாயனன் ஒருலோபி. பணத்துக்கு உயிருண்டு என்பது அவன் வாதம். எனவே, நாணயத்தை கையால் அழுத்திக்கூட பிடிக்கமாட்டான். அழுத்திப்பிடித்தால், பணத்தின் மூச்சு போய்விடுமோ வென்று அவன் பயப்படுவான். ஆனால் அவன் வட்டிக்கு விடுகிற மனிதர்களை மூச்சுப்போகும்படி பிழிந்து உயிரை எடுத்துவிடுவான். மனிதனுடைய உயிரில் அவனுக்கு அவ்வளவு அக்கரையில்லை, கவலையில்லை. பணத்தின் உயிரிலே அவனுக்கு இரக்கமதிகம். அதனாலே அவன் காணி, காணியாக நிலத்தைச் சேர்த்துவிட்டான். இது நிலத்திலே. பணத்திலோ, அவன் லட்சப்பிரபுவைத்தாண்டி, கோடீசுர னாகிய நிலைமைக்கு வந்துவிட்டான். இவ்வளவு சம்பத்துள்ள பலாயனனுக்கு மனைவியில்லை. அவள் இறந்து பல ஆண்டுகள் ஆயின. மறு விவாகம் அவன் செய்து கொள்ளவில்லை.

பணச்செலவுக்கஞ்சி என்று மதுராபுரியார் சொல்லிக் கொண்டார்கள். ஆனால் பலாயனன் அதை ஏற்றுக்கொண்டதேயில்லை. மறுதாரம் மணக்காவிடினும், இந்த லட்சப் பிரபு—கோடீசுரனுக்கு, தனது இறந்த மனைவியின் மூலமாக ஒரே ஒரு பெண்பிறந்திருந்தாள். அவளுக்கு அன்னபூரணி என்று பெயர். இளம்பிராயத்திலேயே தாயைப்பறி கொடுத்த அன்னபூரணி, தாயின் அன்பு எவ்விதமிருக்கும் என்று அறியாதவளாய் வளர்ந்து வந்தாள். எல்லா விஷயங்களிலும் பலாயனன் "கைமூடி" வாழ்வு வாழ்ந்து வந்தானாயினும், அவனுக்கு அன்னபூரணியிடம் உயிர். அவள் வாய் அசைத்தால் போதும், எதுவும் வாக்கியன் கணக்கில் வந்துவிடும் என்பான் பலாயனன். ஆனால் அவள் வாய் அசைத்ததேயில்லை. அதனாலேதான் அவளிடம் உயிர்போலும்! தகப்பனால் கொடுக்கப்பட்டதை ஏற்றுக்கொள்ளுவாள். தானாக ஒன்றும் கேட்டதில்லை. பலாயனனுடைய விதவை சகோதரி அன்னபூரணியை வளர்த்துவந்தாள்.

எவ்வளவோ சுகம் கிடைக்கலாமெனினும், அன்னபூரணிக்கு எதுவும் அளிக்கப்படவுமில்லை. அவள் அனு

பயிக்கவுமில்லை; அவளுக்கு அவா இருந்ததுமில்லை. விக்கிரமாதித்தன் கதையில் விளங்கின பேசாமடந்தையென அவள் வளர்ந்து வந்தாள். அவளுக்கு வீட்டிலேயே படிப்பும் பாட்டும். வாத்திக்குத் தெரிந்தது யாவற்றையும் அவனுக்குத்தெரியாமல் அவனை தொந்திரவுசெய்யாமல், கற்றுக்கொண்டாள். பாட்டு வாத்தியிடம்மட்டும் சிறிது பேசுவாள். "எனக்குப் புலம்பல்பாட்டு வேண்டாம், பக்திப் பாட்டும் வேண்டாம்; நெஞ்சை உருக்கும் கானம் தேவையில்லை. நெஞ்சை கெட்டிப்படுத்தும் பாட்டு சொல்லிக்கொடுங்கள்" என்பாள். இந்த விந்தைப்பெண்ணின் உள்ளம் சங்கித வித்வானுக்கு சிறிதும் விள்ளவில்லை. ஆனால், நெஞ்சை கெட்டிப்படுத்தும் பாட்டு இன்னதென்று அவருக்குத் தெரியவில்லை. "நான் பாடிக்கொண்டு வருகிறேன். உனக்கு பிடிக்கிற பாட்டை நீ சொல். அதை நான் உனக்கு பழக்கிவைக்கிறேன்" என்பார் அந்த சாது சங்கித வித்வான்.

பணாயனன் பணம் படுத்துகிற பாடு இது. பணம் பாதாளம் வரையிலும் பாயும் என்கிறார்களல்லவா? மேற்கூறிய ஒப்பந்தமூலமாக அன்னபூரணி பாட்டுகற்றுகொண்டு வந்தாள். அவள் மங்கைப்பருவம் எய்தவேண்டியகாலம் நெருங்கி வந்துகொண்டிருந்தது. வருகிற வேகத்தை வர்ணிக்கமுடியாது.

மெல்லிய உடலைக்கொண்ட அன்னபூரணிக்கு அதிகமான சதை கிடையாது. நல்ல நேர்த்தியான முகம். முழந்தாள் வரையிலும் தொங்கும் கூந்தல். கூரிய கண்கள்; கரிய நீரில் செந்தாமரை பூத்ததுபோல, அவளுடைய கண்கள் திகழ்ந்தன. அவளுடைய உதடுகளுக்கு உவமைகூற பண்டைக்கவிகளாலும் முடியாது. அவைகள் கொவ்வை கனிகளோ, தாமரை இதழ்களோ, செங்குழம்புபூசிய டாக்கா மஸ்லினோ, எது என்று சொல்லமுடியாது. அந்த உதடுகள் நகைப்புக்கிருப்பிடமோ, தயைக்கு ஊற்றுக்கண்ணோ, வெறுப்பின் அடித்தளமோ, வீரத்தின் சின்னமோ, அதை காதலர்கள் சொல்லிப் புலம்பவேண்டும்; அல்லது பிதற்றவேண்டும். மந்தப்புத்தியோ என சந்தேகிக்குமாறு, அவள்

எதையும் அமைதியுடனும் நிதானத்துடனும் தான் பேசுவாள். படபடப்பு அவளிடம் சிறிதும் கிடையாது. அமைதியுடன், எவர் சொல்லுவதையும் வாங்கிக்கொள்ளுவாள்.

ஆனால் பணத்துக்கு தொண்டனான பலாயனன், அன்னபூரணியின் பக்கத்தில் ஈ கூடப் பறக்கவிடுவதில்லை. அவன் வேண்டுமென்றே செய்த பந்தோபஸ்தல்ல. கடன் வாங்கி கொடுப்பவர்களைத்தவிர, அவன் வீட்டுக்கு யாரும் விருந்தாக சென்றதில்லை. பலாயனன் பணம்படைத்த சீமானாயினும், வீட்டுச் சமையலுக்கு ஒரு வேலைக்காரனை நியமித்ததில்லை. சமையல் வேலையை தன் சகோதரியிடம் ஒப்புவித்துவிட்டான். அன்னபூரணிக்கு ஒரே ஒரு உரிமையுண்டு. மதுராபுரியின் ஒருபக்கத்திலிருந்த அவர்கள் தோட்டத்துக்கு தினந்தோறும் அவள் சென்றுவருவது வழக்கம், தங்கள் குதிரை வண்டியில். அவளுக்கு இதற்கென குறிப்பிட்ட நேரம் கிடையாது.

மங்கைப்பருவத்தை எட்டிப்பார்த்துக்கொண்டிருக்கும் அன்னபூரணி ஒரு வீதியில் வசித்து வருகிறாள். வீசை வெளியே வர எத்தனித்துக்கொண்டிருக்கும் அமலநாதன் வேறு வீதியில் வசித்து வருகிறான். ஒருவர் மற்றவரை அறியார். இவ்வாறு காலம் கடந்து வந்தது.

ஒருநாள் அமலநாதன் மயானத்தைவிட்டு நகரம் நோக்கி வருகின்றான். வரும் வழியில் கூட்டமாக ஜனங்கள் நிற்பதை கண்டான். பின்னால் குதிரை வண்டியொன்று வந்துகொண்டிருந்தது. எதையோ கண்டு, குதிரை மருண்டது. வண்டி எந்தப்பக்கம், விழுமோவெனத் தெரியவில்லை. பலாயனன் வண்டி என கண்டுகொண்ட கூட்டம் அதைப்பார்த்து களித்து, கூத்தாடிற்று. கரகோஷம் செய்தது. அமலநாதன் இதைப்பார்த்தான். இந்தக்கூட்டத்தின் செயலைக் கண்டு, அவன் மனம் தாளவில்லை. வெருண்ட குதிரையை பிடித்து நிறுத்த எவரும் முயற்சி செய்யவில்லை. தன் தலையின்பேரில் உல்லாசமாக வீற்றிருந்த மாடப்புறாவைப் பிடித்து தனது தோழர்களில் ஒருவனிடம் கொடுத்தான். திடீரெனப்பாய்ந்தான். குதிரையின் கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டான். ஆனால் குதிரையின் வேகம் அடங்க

வில்லை. சொடுக்கிச் சொடுக்கி இழுத்து, தனது முழுபாரத்தையும் வைத்துத் தொங்கி, தனது கால்களை குதிரையின் முன்கால்களின்மேல் உதைத்து நிறுத்தப்பார்த்தான்.

குதிரை மேலே எழும்பிற்று. இதற்குள் அமலநாதனது தோழர்கள் குதிரையைபிடித்து நிறுத்தினார்கள். வண்டியினுள்ளே, அன்னபூரணி மனக்கலக்கம் சிறிதுமில்லாமல், மந்தகாசம் புரிந்துகொண்டிருந்தாள். அமலநாதன் கூட்டத்தை கடிந்தான். குதிரையை தட்டிக்கொடுத்து அடக்கிவிட்டு, மாடப்புறுவை தோளிலேதாங்கி, வண்டியின் பின்புறம் வந்தான். தனது புறு கொக்கரிப்பதை அமலநாதன் கண்டான். வண்டிக்குள் ஒரு புருவும் யுவதியும் இருப்பதை பார்த்தான். "யாதொரு கஷ்டமும் நேரவில்லையே" என்று அமலநாதன் அன்னபூரணியை கேட்டான். இதற்குள் அமலநாதனுடைய புறு ஆரவாரம் செய்தது. "விபத்து ஒன்றும் நேரவில்லை. தங்கள் தீரத்தனத்தை மெச்சினேன். தங்கள் உதவிக்காக தங்களுக்கு வந்தனம்" என்றாள் பெண். "நானல்லவா முட்டாள்தனம்போனேன்? வண்டிக்குள்ளிருப்பவர்கள் பயந்து நடுநடுங்கிக்கொண்டிருப்பார்கள் என்று நினைத்து, அவர்களுக்கு தைரியம் சொல்ல எண்ணி, இங்கே வந்தேன். நான் முட்டாளாய்ப் போனேன். இந்தக் கேவலக்கூட்டத்துக்கிடையில், வெருண்ட குதிரையின் சேஷ்டைக்குள்ளாகியும் நீ மனங்கலங்காமல், அமைதியுடன் இருக்கிறாயா? எனது தீரம் பெரிதா? உனது அமைதி பெரிதா? எது என்று எனக்கு புலப்படவில்லை" என்று அமலன் பதறினான்.

"அவசரம் வேண்டாம்; நாளைக்கும் இதே வழியில், இதே வேளையில், வருகிறேன். அதற்குள் யோசித்துப் பார்த்து, எது பெரிது என்று சொல்லுங்கள். தங்கள் உத்தரவு" என்று வண்டியை விடச்சொன்னாள். அமலநாதன் திகைத்துப்போய், தூணைப்போல நின்றான். மீண்டும் மாடப்புறு தோளின்மேலிருந்தபடியே கொக்கரித்தது.

சிறிது நேரத்திற்கெல்லாம் திகைப்பு தெளிந்து, அமலநாதன் வண்டியை பார்த்தான். வண்டி தென்படவில்லை. தன் சகாக்களுடன் வீடுபோய்ச் சேர்ந்தான். நடந்த

நிகழ்ச்சியைப்பற்றி நினைத்து நினைத்துப்பார்த்தான். ஒன்றும் புரியவில்லை. உண்மையிலே அது நடந்ததா என்று தன்னையே கேட்டுக்கொண்டான். கேள்விக்குப் பதில் சாத்தியமில்லை. அன்றிரவு அவனுக்கு உறக்கம் வரவில்லை. "சிலையுருவத்திலே, அமைதியைக்காணலாம். செத்த பிணத்தில் காணலாம். உயிருள்ள அந்த சிறிய உருவத்திலிருந்த அமைதியே அமைதி. அந்த அமைதியல்லவா உண்மையான வீரத்தனத்தின் பலனாகும்? ஆண் மகன் என்று பெருமைப்பட என்னைப்பற்றி எண்ணிக்கொண்டிருந்தேனே! என்ன வீணான எண்ணம்! அவள் பதில்சொன்னதைப் பார்த்தாயா? யோசிப்பதற்கு காலம் கொடுத்தாளே! அவள் கேலிசெய்ததாகவும் தெரியவில்லை. அவள் பேசினது இயற்கை என்றே காதில்பட்டது. அதில் விகாரம் ஒன்றும் காணப்படவில்லையே! எனது ஆயுளை இதுவரையிலும் வீணாக கழித்துவிட்டேன் என்பதில் சந்தேகமே இல்லை. அவளது அமைதியின் முன்னே என் வீரம் எதற்காகும்" என்று யோசித்துக்கொண்டே, உறங்கிப்போனான்.

மறுநாள், தோழர்கள் எவரையும் அழைக்காமல், மயானத்துக்கு புறப்பட்டான். "ஏ மயானமே! சிவபிரான் தவம்செய்யும் பீடமே! என்னை நீ ஏளனத்துக்குள்ளாக்கி விட்டாயே! எனக்கு நீ எவ்வளவோ கற்பித்தாய்! உன்னை நமஸ்கரிக்கின்றேன். ஆனால் நேற்றைக்கு அந்தச் சிறுபெண் எனக்கு கற்றுக்கொடுத்த பாடத்தை நீ என்னிடமிருந்து ஒளித்து விட்டாயே! உன்னைத்தவிர எனக்கு அடைக்கலமேது" என்று அழுதான். பிறகு ஒருவாறு தனது மனதை தேற்றிக்கொண்டு, வீடுநோக்கி புறப்பட்டான். வருகிறவழியில் வண்டியை நோக்கிய வண்ணமாகவே வந்தான். அவனுடைய தோளில் மாடப்புறா வீற்றிருந்தது என்று சொல்லவும் வேண்டுமா? சொந்த நினைப்பில்லாமல், வந்துகொண்டிருந்தான். வண்டியும் எதிரேவந்தது. வண்டியை நிறுத்தி, அன்னபூரணி கீழே இறங்கினாள். என்னவெல்லாமோ சொல்லவேண்டுமென மனப்பாடம் செய்து வைத்துக்கொண்டிருந்தனவெல்லாம் அமலநாதனை விட்டகன்றன.

இத்தருணத்தில் அன்னபூரணி சொல்லுகிருள் :— "நாங்கள் என்னை இன்றைக்கு சந்தித்ததற்காக வந்தனம். நோளிலிருக்கும் மாடப்புறு எங்கு தங்களுக்குக்கிடைத்தது? தங்களுடைய தோழர்களை இன்றைக்கு காணேமே". அமலநாதன் அப்படியே நின்ருன். இந்த சாதாரண கேள்விகளை அவன் எதிர்பார்க்கவேயில்லை என்று சொல்லவாவேண்டும்? "நான் கேட்டதைப்பற்றி, இன்னொருநாள் யோசிக்கவேண்டாம். என்னுடன் கூடவாருங்கள்" என்றுசொல்லி அன்னபூரணி கால் எடுத்துவைத்தாள். வழிநடத்தி அழைத்துச் செல்லப்படும் குருடனைப்போல, அமலநாதன் அன்னபூரணியின் பின்னுலே சென்ருன். சிறிது தூரத்திற்குப்பிறகு, அவர்கள் இருவரும் ஒரு தோட்டத்திற்குள் நுழைந்தார்கள். தோட்டத்தின் மத்தியில், பூச்செடிகளுக்கிடையே, சலவைக்கல் மேடை ஒன்றிருந்தது. அதைக் காண்பித்து அதில் அமலநாதனை உட்காரச்சொன்னுள், அன்னபூரணி, மௌனமாக. அவன் உட்கார, அதற்குப்பின்னர் அன்னபூரணியும் உட்கார்ந்துகொண்டாள்.

"உன் மனதிலிருப்பதை மறைத்துவிட்டு மாடப்புறுவைப்பற்றி கேட்டாயே! நன்ருயிருக்கிறது. எதுபெரிது என்று நேற்றைக்கு என்னை யோசிக்கச்சொன்னுய். அதையல்லவா, நீ என்னை கேட்டிருக்கவேண்டும்" என்று அமலநாதன் அன்னபூரணியை வினவினுன். "ஒருதரம் கேட்ட கேள்வியை நான் திரும்பவும் கேட்பதில்லை. ஏன் தெரியுமா? கேட்ட கேள்விக்கு பதில்சொல்லுவது மற்றவர் கடமை. பதில் வராவிடின், கேள்வி மற்றவருக்குப் பிடிக்கவில்லை என்று அருத்தம். அதை அத்துடன் நிறுத்திக்கொள்ளுவது என் வழக்கம்" என்ருள். "பழைய கேள்விக்கு பதில் வராமலிருக்கையில், புதிய கேள்வி போடுவதற்குமட்டும் உனக்கு உரிமை எவ்வாறு கிடைத்தது" என்ருன் அமலநாதன்.

"ஒரு கேள்வி வெறுப்பாயிருக்கலாம். மற்ருெரு கேள்வி இனிப்பாயிருக்கலாம் அல்லது அசதியிஞல் முதல் கேள்விக்கு பதில்வராமல் இருக்கலாம். மூன்ருந்தரமும் கேட்டுப்பார்த்து பதில்வராவிடின், கேள்வியையும் பேச்சை

யும் அடியோடு நிறுத்திக்கொள்ளுவது முறை" என்றாள் அன்னபூரணி.

"நல்லது! உன்னோடு வாதம்செய்யத் துணியவில்லை. நான் உன்னிடத்தில் கற்றுக்கொண்டுபோக வந்திருக்கிறேன். வண்டி கொடையடித்துப் பொடியாகக்கூடிய நிலைமையிலும் கூட்டத்தின் ஏளனத்திற்கிடையிலும், நீ எவ்வாறு கலங்காமல் அமைதியுடனிருந்தாய்" என்றான் அமலநாதன்.

"அதிலே வியப்பேயில்லை. கலங்கி செய்யக்கூடிய காரியம் என்ன? தெரிந்தா அவர்கள் அந்தக் கூப்பாடு போட்டார்கள்? பரம விரோதியானாலும் விபத்துக்காலத்தில் அவனை காப்பாற்றவேண்டும் என்பதை அவர்கள் உணர்ந்திருந்தால், அவர்கள் ஏளனம் செய்து நகைப்பார்களா? எனது தகப்பன் கருமி. வட்டிக்குவிட்ட இடத்தில், அவர் ஒரு செப்புக்காசுகூட தள்ளிக்கொடுப்பதில்லை. அதனால் அவரிடம் ஜனங்களுக்கு கோபம். ஆனால் அவருடைய வட்டி தொழிலுக்கும், இயற்கையாக மனிதர்கள் யாவருக்கும் வரக்கூடியதுபோல எனக்கு வந்த விபத்துக்கும் அவர்கள் வேற்றுமை படுத்தாமல், சம்பந்தம் உண்டாக்கிக்கொண்டு சிரித்து ஏளனம் செய்தார்கள். அதையறிந்த நான் அமைதியுடன் இல்லாமலிருக்க முடியுமா? வண்டியைப் பொடியாக்கும் விபத்து என்றீர்கள். அந்த சமயத்தில் மனம் கலங்கினால், இன்னும் வேறுவகையான, விபரீத ஆபத்துக்கள் தோன்றும். ஆபத்து என்பது மனிதனுடைய உயிர் வலிமையை சோதிக்கவருவதாகும். உயிருக்கும் ஆபத்துக்கும் போராட்டம் நடைபெறுங் காலையில், அமைதியுடனிருந்தாலன்றி, உயிர் ஆபத்தின் பேரில் வெற்றி பெறாது. அமைதி போய்விடின் ஆபத்து ஜயமடையும்" என்றாள் அன்னபூரணி.

அமலநாதன் அன்னபூரணியின் முகத்தை நோக்கியவாறே இருந்தான். பதுமையைப்போல அசைவற்று இருக்கையில், "ஏன் பேசாமல் இருக்கிறீர்கள்" என்றாள் அன்னபூரணி. "உனது பிராயத்துக்கு மீறிய அறிவும் அனுபவமும் உனக்கு எங்கிருந்து கிடைத்தன என யோசித்துக் கொண்டிருக்கிறேன்" என்றான் அமலநாதன். "பெண்களின்

அற்பபுத்தியையும் சில்லறை அழகுகளையும் பெரிதாக புகழ்வது ஆண்பிள்ளைக்கு ஒரு சம்பிரதாயம்" என்றாள் அன்னபூரணி.

அமலநாதன் திடுக்கிட்டு எழுந்து நின்றான். "நான் போகிறேன்" என்றான். காரணம் என்னவென்றாள்.

"உனது கால் தூசிகூட நான் பெறமாட்டேன். எனக்கு வெறும் புகழுரை தெரியாது. உன்னுடன் சல்லாபம்செய்ய, எனக்கு புத்தியும் பதவியும் வேண்டும். போய்வருகிறேன்" என்றான். அன்னபூரணி அவனுடைய கையை பிடித்துக் கொண்டாள். "உங்களுடைய புத்தியையும் பதவியையும் காட்டிலும் என்னுடையது சற்றேனும் உயர்ந்ததல்ல. உங்களுடைய அடக்கமே உங்களுடைய புத்தி விசேஷத்தையும் பதவி உயர்வையும் காண்பிக்கவில்லையா? அது உங்களுக்கு தெரியாதாயின், நான் இப்பொழுது தெரிவிக்கின்றேன். அடக்கத்தை தழுவிய ஆண்மையை உங்களிடம் நான் கண்ட பின்னரும், அதை சொல்லாமலிருக்கமுடியுமா? அது இருக் கட்டும். தங்களுக்கு எங்கிருந்து அந்த மாடப்புறு கிடைத் தது" என்றாள் அன்னபூரணி.

"நான் கேட்க எண்ணினதையே நீ முந்தி கேட்டுவிட் டாய். உன்னிடம் ஒன்று இருக்கிறதே, அது எங்கிருந்து கிடைத்தது" என்றான் அமலநாதன்.

"நாம் இருவரும் கேள்விச்சண்டை போட்டுக்கொண் டிருக்கிறோம். ஆனால், இந்த இரண்டு புறுக்களும் தோழமை கொண்டு விளையாடுகின்றன. மனிதர்கள் பட்சிஜாதிகளிட மிருந்து புத்தியையும் நேசத்தையும் கற்கவேண்டும்" என் றாள் அன்னபூரணி.

இரண்டு புறுக்களும் ஒன்றையொன்று தழுவி விளை யாடிக்கொண்டிருப்பதை அமலநாதன் கண்டான். இருவரும் வெகுநேரம் வரையிலும் மௌனமாய் இருந்தார்கள். ஆனால், அன்னபூரணியின் கை அமலநாதனைவிட்டு அகலவில்லை.

"நேற்றைக்கு நீ கேட்ட கேள்வியை யோசித்துப் பார்த்தேன். எது பெரிது என்று தெரியவில்லை. உனக்குத் தெரிந்தால் சொல்லு" என்றான் அமலநாதன்.

"நான் சொல்லுகிறேன், கேளுங்கள். நீங்கள் யோசிக்கவேயில்லை. உங்கள் மனம் நேற்றைய சம்பவத்திலிருந்து குழம்பிக்கொண்டே இருக்கிறது. குழம்பிய மனது முடிவுக்கரையை காணமுடியாது. அன்புடன் கூடிய அமைதியும் அடக்கத்தை தழுவிநிற்கும் ஆண்மையும்—இரண்டும் சமம் தான். இரண்டின் முடிவும் ஒன்றேயாகும். இரண்டின் முடிவும் ஆத்ம சமர்ப்பணமாகும், தியாகமாகும். ஒன்றுக்கு தாய் என்று பெயர். மற்றொன்றுக்கு தகப்பன் என்று பெயர். ஒன்று பெண்; மற்றொன்று ஆண். இரண்டும் சேர்ந்தது உலகம், இயற்கை" என்றாள்.

"ஆணும் பெண்ணும் தமக்காக வாழவில்லை. இயற்கையின் ஏவலை சிரமேற்கொண்டு உலகத்தின்பொருட்டு உயிர் வாழ்கின்றார்கள், உயிரை விடுகின்றார்கள். இதுதானே நீ சொல்லவிரும்புவது" என்றான் அமலன்.

"அதுவே, அதுவே" என்று மகிழ்ச்சியுடன் அன்னபூரணி திருப்பித்திருப்பி சொன்னாள். அவரவர் புறா அவரவர் மடிமீது வந்து ஒன்றையொன்று இனிய குரலில் அழைத்தது.

"இன்றைய கனவு, நாளைய வாழ்வு. நாளைய வாழ்வு மறுநாள் மரணம்." என்றாள் அன்னபூரணி.

"ஆம் ஆம்" என்றான் அமலன்.

"கடவுள் கூட்டிவைத்த நம்மை இனி காலம்தான் பிரிக்கவேண்டும்" என்று அன்னபூரணி சொல்ல, "ஆம்" என்றான் அமலநாதன். "நாளைக்கும் இங்கேயே" என்று முடிப்பதற்குள் வண்டிக்காரன் தலையை நீட்டினான். "சரி" என்று அமலநாதன் எழுந்து நின்றான். அன்னபூரணி வண்டியை நாடிச்சென்றாள். அமலநாதன் வீட்டைநோக்கிப்போனான்.

வீட்டிலே அமலநாதன் பின்வருமாறு யோசிக்கலானான் :—"என் கண்ணை நம்பினால், அவள் பெண் தான். என் காதை நம்பினால், அவள் பேசியது பேச்சே. எனது அறிவு எனக்கு துரோகம் செய்யாவிடில், அவள் கூறியது உண்மைதான். ஆண் என்றாள், பெண் என்றாள், உலகம்

என்றாள், இயற்கை என்றாள். இவற்றை அவள் யாரிட மிருந்து கற்றுக்கொண்டாள்? நாம் யாவரும் இயற்கையின் அடிமைகள். இயற்கை ஜீவகோடிகளின் மூலமாய் தனது இச்சையை பூர்த்திசெய்துகொள்ளுகிறது; தனது சங்கற் பத்தை முடித்துக்கொள்ளுகின்றது. என்ன விநோதம்! மனிதர்கள் பிதற்றி பயனென்ன? தனி மனிதனைக்காட்டி லும் உலகம் பெரிது; உலகத்தை ஆட்டிவைப்பது இயற்கை. ஆகா! அவள் கூறியது உண்மையிலும் உண்மை. இயற்கை யால் ஏவப்பட்டு உலகத்தின் பொருட்டு உழைக்காத உடல் எதற்கு, உயிர் எதற்கு, வாழ்வு எதற்கு? இயற்கைக்கு அர்ப்பணம் செய்யப்பெறாத வாழ்வு வாழ்வாமோ? வீர னுக்குத்தான் வாழ்வு உண்டு. சூரன் ஒருவனே சுகத்தை அனுபவிக்க முடியும்; பலவீனன் ஒருபொழுதும் சுகத்தை அனுபவிப்பதில்லை. பலவீனனுக்கு சுகம் என்பது பேயுரு வம் எடுத்து அவனை ஆட்டிவைக்கின்றது. அவனுக்கு ஒரு நாளும் அமைதி கிடையாது. என்ன மதியீனம்! அவள் யார் என்றும் அவள் பெயர் என்ன என்றும் கேட்க மறந்து போனேனே! நல்லது, நாளைக்கு ஆகட்டும்."

இது ஒருபுறமிருக்க, அன்னபூரணி தனது அறையில் அமலநாதனை நினைத்துக்கொண்டிருந்தாள். "தமக்கு எவ் வளவு குண விசேஷங்கள் இருக்கின்றன என்று அவர் அறியவில்லை. அவர் பட்டை வாங்காத வைரம். என்ன அடக்கம்! எத்தகைய ஆண்மை! அவர்தான் உண்மையான ஆண்பிள்ளை. ஆத்ம சமர்ப்பணம் நிறைந்துள்ள அவர் யார், பெயர் என்ன என்று அறிந்து கொள்ளாமல் போனேனே!" என்று தனக்குள்ளாகவே பேசிக்கொண்டு, உறங்கிப்போனாள்.

மறுநாளும் அவர்கள் சந்தித்தார்கள். "உங்களை ஒன்று கேட்க விரும்புகிறேன்" என்றாள் அன்னபூரணி.

"நீ நேற்றையதினம் சொன்னது பொய்யா? என்னை ஏளனம் செய்ய பார்க்கிறாயா? உன்னுடைய பாவனை மரி யாதை எனக்குப்பிடிக்கவில்லை. ஆணும் பெண்ணும் சமமா யின், நீ ஏன் என்னை "உங்களை" என்று மரியாதை செய்ய

வேண்டும்? உன்னை நானும் "உங்களை" என்று மரியாதை செய்ய விரும்புகிறாயா" என்றான்.

"தவறு; மன்னித்துவிடு; உன் பெயர் என்ன? என் பெயர் அன்னபூரணி.

"என் பெயர் அமலநாதன்."

"நேற்றையதினம் ஆத்ம சமர்ப்பணம் என்றாயே, அதற்கு வழி என்ன? அதை எவ்வாறு செய்வது? நீ அறியாமலே எனக்கு குருவாகி விட்டாய், சொல்."

"நாம் அதற்குத்தயாராய் இருப்பின், இயற்கைத்தாய் அதற்கு வழிகாட்டுவாள்."

"நீ சொல்லுவது சத்தியமாய் இருக்கலாம். அது தத்துவம்போல தோன்றுகிறது. அது எனக்குப் புரியவில்லை."

"காலத்தால் அது உனக்குப் புலனாகும். ஆத்ம சமர்ப்பணம் என்பது உணரப்படவேண்டிய, அனுபவிக்க வேண்டிய விஷயம். உனக்கு உபதேசம் செய்யும் எனக்கும் அது முழுதும் புரியவில்லை. ஆனால் புரியும் என்ற தைரியம் மட்டும் இருக்கின்றது."

"கலியாணம் ஆயிற்றா, உனக்கு?" என்றான்.

"இல்லை" என்றாள் அவள்.

"கலியாண உத்தேசம் உண்டோ, உனக்கு?"

"இல்லையானாலும் இயற்கை விடாது" என்றாள்.

"யாரை மணக்கப்போகிறாய்?"

"உன்னை."

அமலநாதன் இந்த விடையை எதிர்பார்க்கவும் இல்லை. மேலே சொன்ன கேள்விகளை ஏன் கேட்கவேண்டும் என்றும் நினைத்தான். "எனக்கு கொஞ்சம்கூட மரியாதை தெரியவில்லையே" என்று அவன் மனம் வருந்தினான். அவனுடைய உள்ளத்தின் நிலையை தெரிந்துகொண்டு "அமலநாதா, நீ ஏன் வருந்துகிறாய்? நீ கேட்டது இயற்கையின் தூண்டுதலால். நான் பதில்கூறியதும் இயற்கையின் தூண்டுதலால். இயற்கையால் ஏவப்பட்ட நாம் ஏன் மரியாதை பார்க்கவேண்டும்? ஏன் நாணம் அடையவேண்டும்? நாணம்

என்பது இயற்கையை முறிக்க, ஏய்க்க எத்தனிப்பதாகும். நெடுவழி நடக்கத் துணிந்தவர்கள் நடுவழியில் பயங்கொள்ளலாமா? உள்ளத்தை ஒளிப்பது இயற்கைக்கு துரோகம் செய்வதாகும்; ஆத்ம சமர்ப்பணத்திற்கு பங்கம் விளைவிப்பதாகும். உள்ளத்தை திரைபோடுபவர்கள்தான் மரியாதை பேசுவார்கள், நாணம் அடைவார்கள். மானம் வேறு; நாணம் வேறு. கோழைத்தனமும் கபடமும் சேர்ந்தால், அது நாணமாகும். நாணத்தை நயவஞ்சகம் என்றும் சொல்லலாம். பெண்களிடம் நாணத்தை, அச்சத்தை விரும்பிய ஆடவர்கள் அவர்களை நயவஞ்சகக்காரர்களாக்கிவிட்டார்கள். இயற்கையின் தேவையை அறியாமல், ஆத்ம சமர்ப்பணத்தின் அவசியத்தை உணராமல், உலகத்தின் மூலகாரணத்தை மறந்து, பெண்கள் உயிர்வாழ துவக்கி, தங்கள் பெருமையை இழந்து தங்களை இழிவுபடுத்திக்கொண்டார்கள். சபையிலே ராமனை மணாளனாக வரித்த சீதைக்கு நாணம் இல்லை. மன்னர்களின் முன்னிலையில் நளனைப் பதியாகவேண்டின தமயந்தி நாணத்தைப்பற்றி கவலை கொள்ளவில்லை. இயற்கையை அறியாத மூடர்கள், உலகத்தின் உண்மையை காணாத அறிவிலிகள், இறுதியில் நயவஞ்சகர்களாகி நாணப்பிரசங்கம் செய்வார்கள். அது நமக்கு வேண்டாம்" என்றாள் அன்னபூரணி.

"விஸ்தாரமாக வீடு கட்டிக்கொண்டு வாழ்பவர்கள் நோய்வாய்ப்படுகிறார்கள். அவர்கள் இயற்கை வாழ்வைக் கண்டு அஞ்சுகின்றார்கள். இரவியின் ஒளியிடை குளித்து, இன்பக்காற்றைப்பருகி, இயற்கையோடு ஒட்டிக்கொண்டால், "கரவினில் வந்து உயிர்க்குலத்தினை அழிக்கும் காலன் நடுநடுங்க" விழிக்கலாம். அன்னபூரணி! நீ நாணத்தைப் பற்றி கூறியதை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். துடுக்காகக் கேட்கிறேன் என்று நினைக்காதே. நீ என்னை மணக்க உன் பெற்றோர்கள், உற்றார் உறவினர்கள் சம்மதிப்பார்களா" என்று அமலநாதன் கேட்டான்.

"என் மனம் உன்னை நாட, நான் வேறொருவனை மணம் முடித்துக்கொள்ள இசைவேனா? இயற்கைதான் அனுமதியளிக்குமா" என்றாள்.

"நல்லது நான் செய்யவேண்டியது என்ன" என்று கேட்டான்.

"நீ அமலநாதனுக இரு. அதுதான் உன்னிடமிருந்து நான் விரும்புவது. உனது சுபாவத்தை எவர்பொருட்டே னும், எதன்பொருட்டேனும் மாற்றிக்கொள்ள இடங் கொடுக்காதே. மற்றதை இயற்கை முடித்துக்கொள்வாள்" என்ருள்.

"உன்னைவிட்டு பிரிய மனம் இல்லை" என்ருள்.

"நாம் ஒரு நாளும் பிரியமுடியாது, பிரியப்போவதும் இல்லை. மனம் கலங்கப்பெறுவது மாயையினுலே" என்ருள்.

"எனக்கு ஒரு பித்து உண்டு. அதை நீ தெரிந்து கொள்ளவேண்டும். நான் சுடுகாட்டுச்சாமி. மயானத்தில் நீண்டகாலம் கழிப்பதில் எனக்கு விருப்பம்" என்ருன் அமலநாதன்.

"இவ்வளவுதானே! பூந்தோட்டத்தினிடையே, மணம் கமழும் மலர்களின் மத்தியில், தென்றல் காற்றுவீச, சல வைக்கல் மேடையில் உல்லாசமாய் காலம்கழிப்பது என்ற மயக்கம் என்னை ஆட்டிவருகின்றது. அதை நீ மன்னிப்பா யாக" என்ருள்.

அமலநாதன் நகைத்தான். அன்னபூரணியும்கூடச் சிரித்தாள். "இயற்கை மலர்ந்து மணம் கமழ்ந்துவிட்டது" என்ருள் அன்னபூரணி. "என்ன ஆச்சரியம், நீ நினைத்த வாறே நானும் எண்ணினேன்" என்ருன் அமலநாதன். "ஆத்ம சமர்ப்பணத்தின் முதற்படி இதுவே ஆகும்" என்றுகூறின அன்னபூரணியிடம் அமலநாதன் விடை பெற்றுக்கொண்டு தோட்டத்துக்கு வெளியே சென்ருன்.

வீதி வழியாக அமலநாதன் சென்றுகொண்டிருக்கை யில், ஆங்காங்கு ஜனங்கள் முட்டு முட்டாக நின்று குசு குசு என்று பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் முகம் பிரசன்னமாயிருக்கவில்லை. திகிலடைந்தவர்களாய் காணப் பட்டார்கள். காரணம் அறிய விரும்பி, அவர்களை அணுகி ஞன் அமலநாதன்.

"போச்சு, போச்சு" என்றான் ஒருவன். "ஆபத்து வந்தது" என்றான் இன்னொருவன். "என்ன செய்வோம்" என்று ஏங்கினார்கள் மற்றும் பலர். அமலநாதனுக்கு ஒன்றும் புலனாகவில்லை. என்னவென்று கேட்டான். "உனக்குத் தெரியாதா? அந்தப்பாவி பாஞ்சால மன்னன் நமது நாட்டின் மீது படையெடுத்து வந்திருக்கிறான். எல்லைப்புறத்துச் சேனையை முறியடித்துவிட்டு, நாட்டின் உள்ளே பிரவேசித்து விட்டான். நெஞ்சில் இரக்கமின்றி அவன் பெண்டு பிள்ளைகளைக் கொன்று ஊர்களை கொள்ளை அடிக்கிறானாம்! மதுராபுரிக்கு நேரே இன்னும் சில தினங்களுக்குள் வந்து விடுவான் என்று சேதி சொல்லுகிறார்கள்" என்றான் ஒருவன்.

"நமது வீரசேனன் எங்கே" என்றான் அமலநாதன்.

"அவன் மதுராபுரிக்கு 20 மைலுக்கு அப்பால் கூடாரம் அடித்துக்கொண்டு, எதிரிகளைய வழிமறித்துத் துரத்த ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறானாம். எல்லைபுறத்துச் சேனையின் துரோகத்தால் இவ்வாறு நேர்ந்தது என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். நாம் என்ன கண்டோம்" என்றான் மற்றவன்

"வீரசேனன் தங்கியிருக்கும் ஊரின் பெயர் தெரியுமா" என்றான் அமலநாதன்.

"பார்வதிபுரம்" என்றான் மற்றவன்.

கூட்டத்தைவிட்டுப் பிரிந்த அமலநாதன் வீட்டுக்கு நேரே சென்றான். தாயை அழைத்துப் பின்வருமாறு சொன்னான் :—"அம்மா! நமது நாட்டிலே சண்டை தோன்றியிருக்கிறது, உனக்குத்தெரியுமா? பாஞ்சால ராஜன் நமது நாட்டின் மீது படையெடுத்து வந்திருக்கிறானாம். அவனை என் கையால் கொல்லவேண்டும். நான் சண்டைக்கு செல்லப் போகிறேன். உன்னிடம் சொல்லாமல் செல்லக்கூடாதே என்று சொன்னேன்."

இதைக்கேட்டு சொர்ணபாய் திடுக்கிட்டுப் போனாள். "அப்பா! உனது தந்தை இறந்தபின் நான் உன்னையல்லவா நம்பி உயிர் வாழ்ந்து வந்தேன்? நீ சண்டைக்குப் போகி

றேன் என்கிருயே! அது தகாது. ஏழைக்குடியானவன் சண்டைக்குப்போனதாய் நான் கேட்டதில்லையே? அரசன் இல்லையா? சேனையில்லையா? பச்சைப்பாலனுகிய உனக்கு என்ன தெரியும்? அப்பா! போகலாகாது. உன்னை உன் தகப்பன் பெயரால் ஆணையிட்டு மறிக்கிறேன்" என்ருள் சொர்ணபாய்.

அமலநாதன் சொல்லுகிருன் :—"அம்மா! கேள். உழுது பயிரிடுபவன் தன் வயலுக்கு தண்ணீர் பாய்ச்ச வேண்டினுல், ஊர் வாய்க்காலை வெட்டி செப்பனிடவேண்டும். நாட்டுக்கு ஆபத்துவரும் காலையில், குடிமக்கள் யாவரும் 'ஆயத்தம், போருக்கு ஆயத்தம்' என்று அரசனிடம் சொல்லிக்கொள்ளவேண்டும். அவன் கட்டளைப்படி நடக்க வேண்டும். அரசன் தனியாக நின்று என்ன செய்யமுடியும்? சேனையிலுள்ளவர்கள் மாண்டால், புதிய சேனைக்கு ஆள் வேண்டாமா? சேனைக்கு ஆள் அனுப்புவது, கொடுப்பது யாருடைய பொறுப்பு? அது பொதுஜனங்களின் பொறுப்பாகும். மேலும் வீரசேனன் அன்னத்தை நாம் இன்றளவும் தின்றுவருகின்ருேம் என்பது உனக்குத் தெரியாவிடில், இப்பொழுதேனும் என்னிடமிருந்து தெரிந்துகொள். என்னுடைய உடம்பை வீரசேனனிடம் நீ தாராளமாய், மனம் உவந்து ஒப்புவிக்கவேண்டும், என்ன சொல்லுகிருய்".

"போய் வா என்று சொல்லுவதற்கு எனக்கு மனம் வரவில்லை; வீரசேனன் அன்னத்தைத்தின்ருேம் என்று நீ சொன்ன பிறகு, உன்னை யிரு என்று சொல்லுவதற்கும் என் உள்ளம் இடங்கொடுக்கவில்லை. உனக்கு எது கடமை என்று தோன்றுகிறதோ, அவ்வாறே செய். நீ க்ஷேமமாய் திரும்பி வர, எனது இஷ்ட தெய்வமாகிய உன் பிதாவை துதித்து வருகின்றேன். நீ எப்பொழுது செல்லுவாய்" என்ருள்.

"நாளைக்கு" என்ருன் அமலநாதன்.

"அன்னபூரணியிடம் சொல்லிக்கொள்ளாமல் எவ்வாறு போவது? அவளிருப்பிடத்தை நாடிச்செல்லுவது தவருயிற்றே! என்ன செய்வதென்று தோன்றவில்லையே! நாளைக்குப் பொறுத்துப்பார்க்கலாம் என்ருலோ, எதிரி என்ற விஷத்தை நாட்டில் பரவவிடலாகாதே! ஆண்டவன் இதற்

கொரு வழிகாட்டமாட்டாளு? மயானக்கடவுளே! நீ எங்கு இருக்கின்றாய்? ஆபத்துக்காலத்தில் ஒதுக்குப்புறமாய் நீ இருப்பது தர்மமாகுமா? நான் உன்னை அரைக்கணமும் மறந்ததில்லையே? எனக்கு ஒரு வழிகாட்டு" என்று புலம்பிக்கொண்டு, வீட்டிற்குவெளியே வந்தான். பராக்குப் பார்த்துக்கொண்டிருக்கையில், கடிதம் ஒன்று கையில் விழுந்தது. பிரித்துப்பார்த்தான். பின்வருமாறு இருந்தது:—

அமலநாதா! பாஞ்சால மன்னன் நமது நாட்டை படை எடுத்து வந்திருப்பதை நீ அறிந்திருப்பாய். எனக்கு இப்பொழுதுதான் தெரியும். தான் கஷ்டப்பட்டு சேர்த்த பொருளை போர்க்காலத்தில் "பங்கிடு" செய்து, பந்தோபஸ்தில் வைப்பதற்காக, எனது தகப்பனார் எங்கேயோ போய்விட்டார். அவருக்கு யுத்த சங்கதி முன்கூட்டியே தெரியும்போலிருக்கிறது. இன்றிரவு அவர் வீட்டிலிருக்க மாட்டார். உனது உள்ளம் என்னை சந்திக்க துடித்துக் கொண்டிருக்கும் என்று எனக்குத்தெரியும். எனவே இரவு ஒன்பது நாழிகைக்கு, மேலவீதியில் 28 இலக்கமுள்ள வீட்டிற்கெதிரே, நீ வருவாயாகில் நான் உன்னை சந்திப்பேன். வரும்பொழுது உன் புரவையும்கூட எடுத்துக்கொண்டு வா.

அன்னபூரணி.

ஆபத்துக்காலத்தில் கைவிடாதவர்கள் கடவுளும் குலஸ்திரீகளும் தான் என்று அமலநாதன் உளறினான். நாழிகை ஒன்பது ஆகவில்லையே என்று புலம்பினான். ஒரு நிமிஷம் போவது ஒருநாளாகத்தோன்றிற்று, அவனுக்கு. அமலநாதன் துடித்தாலும் அன்னபூரணி எதிர்பார்த்து நின்றாலும், போகிறபொழுது போய்த்தானே ஆகவேண்டும்? அப்படியிப்படியுமாக பொழுதும் ஒருவாறு போயிற்று. குறித்தநேரத்தில் குறிப்பிட்ட இடத்துக்கு போய்ச்சேர்ந்தான் அமலன். கதவுதிறந்தது. காலடிசத்தம் கேட்டது. "வா" என்றாள் அன்னபூரணி. சந்தடிசெய்யாமல் உள்ளே நுழைந்தான் அமலநாதன். கையைப்பிடித்து அழைத்துச்

சென்றாள். மினுமினுவென்று விளக்கும் எரியும் அறைக்குள் அவர்கள் நுழைந்தார்கள். விளக்கை பெரிது செய்தாள் அன்னபூரணி. இருவரும் அன்னபூரணியின் படுக்கையில் உட்கார்ந்து கொண்டார்கள்.

அமலநாதன் கண்களில் நீர் பெருகிற்று. கண்ணீர் கன்னத்தில் கரைபுரண்டு ஓடக்கண்ட அன்னபூரணி, அதைத் தன்னிரு மெல்லிய கரங்களால் துடைத்தாள். கண்ணீரும் நின்றுவிட்டது. ஆனால் இருவரும் வாய் திறந்து பேசவில்லை. கடைசியாக அமலநாதன் கூறுகின்றான் :—“அன்னபூரணி! நான் கோழை. நான் பயங்கொள்ளி. என்னை ஈன்றெடுத்துப் பரிவுடன் பாதுகாத்த என் அருமைத்தாயினிடம் சிறிது நேரத்திற்கு முன், நான் வீர தத்துவம் பேசினேன். உன்னைக்கண்டதும் நான் கண்ணீர் விட்டேன். என்ன கோழை” என்றான்.

“அமலநாதா! நீ அங்கு செய்தது சரி. நீ இங்கு செய்ததும் சரி. தாய்க்கும் உனக்கும் ரத்த சம்பந்தத்தை தவிர, இயற்கை சம்பந்தம் கிடையாது. உனக்கும் எனக்கும் இரத்த சம்பந்தம் இல்லை. ஆனால் இயற்கை சம்பந்தம் உண்டு. தாயின் உலகம் போற்றப்படவேண்டிய உலகம். நம்முடைய உலகம் படைக்கப்படவேண்டிய உலகம். தாயினிடம் அன்பு பழக்கத்தால், பாசத்தால் ஏற்பட்டதாகும். என்னையும் உன்னையும் இயற்கை இருகப்பிணித்துக் கட்டிவிட்டது. இயற்கையின் கூத்தை அனுபவிக்கவேண்டும்; அதைக்கண்டு ஆத்திரப் படலாகாது” என்றாள் அன்னபூரணி.

“நான் சண்டைக்குச் செல்லட்டுமா” என்றான்.

“சந்தேகம் வரக்காரணம் என்ன” என்றாள் அன்னபூரணி.

“போரில் நான் இறந்துபோனால், என்னை நீ மறந்து விடுவாயோ” என்றான் அமலநாதன்.

“இப்பொழுது பேசினது வீரன் அமலநாதன் அல்ல, குழந்தை அமலநாதன்” என்றாள் அன்னபூரணி.

"சென்று வருகிறேன்" என்றான்.

"சரி, நீ வருமளவும், உன் புறா என்னிடம் இருக்கட்டும்" என்றாள் அன்னபூரணி.

*   *   *   *   *   *

பார்வதிபுரத்திற்கு வந்து சேர்ந்தான் அமலநாதன். வீரசேனனைக்கண்டான். அவன் கட்டளையைப் பெற்றுக்கொண்டான்.

இரண்டொரு நாட்கள் சென்றன. பாஞ்சால மன்னன் கொல்லப்பட்டான் என்றும் அவனது சேனை முறியடிக்கப்பட்டது என்றும் மதுராபுரிக்கு செய்தி எட்டிற்று. பாஞ்சால மன்னனை கொன்ற வீரன் யார் என்று ஜனங்கள் வினவினார்கள். அமலநாதன் என்று அறிந்தார்கள். அவன் கதி என்னவாயிற்று? அவன் போர்களத்தில் மாண்டு போனதாகச்சேதி வந்தது. வீரசேனன் கட்டளைப் பிரகாரம், அமலநாதனது படம் மதுராபுரி நகரின் வீதிகளில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பெற்றது. தனது வீட்டு மெத்தை மீதிருந்து, அன்னபூரணி ஊர்வலத்தைப் பார்த்தாள். மறுநாள் மாலையில், அமலநாதனது பித்தாகிய மயானத்துக்கு அவள் தூக்கிச்செல்லப் பெற்றாள். அன்றிரவே, அவள் பிடிசாம்பலாய்ப் போனாள்.

வண்ணுர வீரம்மாள்

சித்தூர் சமஸ்தானத்தில் புளியந்தோப்பு என்று ஒரு கிராமம் இருந்தது. அந்த கிராமத்தில் புளியமரங்கள் மிகவும் அதிகம். அதனுலேதான் ஊருக்கு புளியந்தோப்பு என்ற பெயர் வந்தது. புளியந்தோப்பு, கிராமமானதால், வீடுகள் அதிகமில்லே. பிராமணர்களின் வீடுகள் சில. அவர்கள் தனித்தெருவில் வசித்துவந்தார்கள். வியாபாரிகள் சிலர். அவர்களுக்கு பெருத்த வியாபாரம் கிடையாது. குடும்ப வாழ்க்கைக்கு தேவையான உப்பு மிளகாய் முதலியன அவர்கள் விற்று வந்தார்கள். அதிகமான ரூபாய் நாணயங்கள், அவர்களுக்கு தினசரி வியாபாரத்தின் மூலமாய் கிட்டுவதில்லே. செப்புக்காசு வாணிபம்தான் அதிகம். பயிர்த்தொழிலில் ஈடுபட்டு குடியானவர்கள் வசித்தார்கள். இவர்களின் தொகைதான் பெரும்பான்மை. இந்த பண்டைக்காலத்து கிராமத்தில், ஒரு நாவிதன், ஒரு தச்சன், ஒரு கொல்லன், ஒரு வண்ணுன், ஒரு ஜோஸியன், ஒரு (தங்க) ஆசாரி—முதலியவர்கள் வாழ்ந்து வந்தார்கள். ஊரின் ஒரு கோடியில் உழைத்தும், வயிருற உண்ண கூலி கிடைக்காத தீண்டாதார்கள் குடியிருந்து, எவ்வாருே காலங்கழித்து வந்தார்கள்.

புளியந்தோப்பு விஸ்தாரமான கிராமம் இல்லே. ஊரில் குடியிருக்கும் மனிதர்களின் மொத்த எண்ணிக்கை ஐந்நூறுக்கு அதிகப்படாது. நஞ்சை புஞ்சை வகையரு யாவும் இருநூறு ஏகரா நிலமிருக்கும். அதாவது புளியந்தோப்பு ஆள் ஒவ்வொருவருக்கும் அரை ஏகரா நிலம்கூட பங்கு வராது. ஆனுல் பூமி இப்படி பங்கிடப்பட்டது என்று நினைக்கவேண்டாம். புளியந்தோப்பில், சொந்த பூமியுள்ள குடும்பங்கள் இருபது இருக்கலாம். பாக்கி சுமார் அறுபது குடும்பங்களுக்கு நிலம் இல்லே; குடியிருக்கும் வீடுகள்கூட அவர்களுக்கு சொந்தமில்லே. பூமி சம்பந்தப்பட்டவரையிலும், மேற்கூறியவாறு பங்கு ஏற்பட்டிருந்தாலும், பொதுவாக மனக்குறையும் பொருமையுமில்லாமல், புளியந்தோப்

பார் வாழ்ந்து வந்தனர். ஏனெனின் அவர்களுடைய வாழ்க் கைத் தேவைகள் அதிகம் இல்லை. கலியாணம் முதலியன மிகச் செட்டாக நடைபெற்றன. விலைபெற்ற ஆடைகள் அவர்கள் அணிந்ததில்லை. தங்க நகைகள் சில வீடுகளில் மட்டுமிருந்தன.

ஏழைக்குடியானவர்கள் வீட்டில் மண்பாத்திரங்கள் புழங்கிவந்தன. வெள்ளிக்காப்புகள் சில வீடுகளில் உண்டு. கள்கடை அந்த ஊரில் இல்லை. இருக்கிறவர்கள் இல்லாத வர்களுக்கு கொடுத்து உதவி எப்படியோ பொது வாழ்க்கை யில் அதிகமாக மேடுபள்ளமில்லாமல் நடத்திவந்தார்கள். இவ்வாறு வெளியுலகத்தை அதிகமாக எதிர்ட்டுப்பார்க்காமல் வாழ்க்கை நடைபெற்று வந்த புளியந்தோப்பில், சோமதேவ சாஸ்திரிகள் என்று ஒருவர் இருந்தார். அவர் பரம்பரை வைதீக குடும்பத்தை சேர்ந்தவர். சோமதேவரின் பாட்ட னார்காலத்தில் அவருக்கு மூன்று ஏகரா நிலம் அரசனால் சன்மானம் கொடுக்கப்பட்டது. மானியமாய் வந்த நிலத் தைக்கொண்டும் வித்வான் என்ற பெயரினாலும் அவர் திருப்திகரமாய் இல்லறம் நடத்திவந்தார்.

அவருக்குப் பெரிய வீடு இல்லை. இல்லறம் இனிது நடத்திய சோமதேவரின் பாட்டனாருக்கு மூன்று ஆண் குழந்தைகள் பிறந்தனர். அவர்களில் ஒருவர்தான் சோம தேவரின் பிதா. சோமதேவரின் பிதாவுக்கு அவரது தகப்ப னாரின் மூலமாய் மூன்று சாஸ்திரங்களில் தேர்ச்சி கிடைத்த தாயினும், பூமியில் பூர்வ சொத்தான மூன்று ஏகரா நிலத் தில் மூன்றில் ஒரு பங்கு (ஒரு ஏகரா) பாக லப்தமாய் கிடைத்தது. ஒரு ஏகரா நிலத்தையும் தனது மூன்று சாஸ்திரப்பயிற்சியையும் கொண்டு, அவர் இல்லறம் நடத்தத் துணிந்தார். குடியிருப்பு வீட்டில், அவருக்கு மூன்றிலொரு பங்கு.

சோமதேவ சாஸ்திரிகளும் மூன்று சகோதரிகளும் அவர்களது பிதாவுக்கு பிறந்தனர். இவர்கள் குழந்தைகளா யிருக்கும் பொழுதே, புளியந்தோப்பின் பழைய நிலைமை மாறத்தலைப்பட்டது. தங்க் நகைகள் ஏற்பட்டுவிட்டன. ரூபாய்கள் தோன்றின, நோட்டுகளும் வந்துவிட்டன.

போதாக்குறைக்கு மதுபானக்கடையும் ஸ்தாபிக்கப்பெற்றது. சோமதேவ சாஸ்திரிகளுக்கு ஸம்ஸ்கிருதத்திலே தான் பயிற்சி. அவருடைய மூன்று சகோதரிகளும் தங்கள் புக்ககம் செல்லுமுன்னரே, தங்கள் பிறந்த வீட்டு பூமி ஒரு ஏகராவும் விலை போகும்படியாயிற்று. காலம் மாறின விந்தை அது. நாகரிகம் தோன்றிய மயக்கால், நகைகளுக்கு ஆசை பெண்களின் உள்ளத்தில் உண்டாயிற்று. சீர்வரிசைகள் சரியாய் செய்யாவிடின், பெண்களுக்கு கலியாணம் செய்ய முடியாதோவென்று பெற்றோர்கள் மனம் ஏங்கும் காலம் வந்துவிட்டது. சோமதேவ சாஸ்திரிகளின் வீட்டில் தரித்திரம் இவ்வளவு தாராளமாய் விளையாடி வந்தபோதிலும், அவருக்கும் பரம்பரை மூாமூலையொட்டி கலியாணம் நடைபெற்றுவிட்டது.

“எனக்கு ஏற்பட்டது கலியாணம் இல்லை. எனக்கு கட்டை கட்டிவிட்டார்கள்” என்று அலுத்துக்கொண்டு சொல்லுவார் சோமதேவ சாஸ்திரிகள். கலியாணமாயிற்று என்றால் குழந்தைகள் பிறந்தனவென்று சொல்லவும் வேண்டுமா? தரித்திரனுக்கு சோற்றுக்கு பஞ்சமே அன்றி, குஞ்சுகளுக்கு பஞ்சமில்லை என்று கிராமத்தார் சொல்லிக்கொள்ளுவது உண்டு. அதுபோல சோமதேவ சாஸ்திரிகளுக்கு மூன்று ஆண் குழந்தைகள், நான்கு பெண் குழந்தைகள். குழந்தைகள் பிறக்கப்பிறக்க, சாஸ்திரிகளின் வயிற்றில் இடி விழுந்ததுபோலாயிற்று.

“மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான்” என்று நொண்டித்தத்துவத்தை கொண்டித்தனமாய் பேசிக்கொண்டிருந்தால், வாயில்லாக் குழந்தைகள் வளர வேண்டாமா? என்ன செய்வார், பாவம்? அவர் காலத்தில் சோமதேவசாஸ்திரிகள் கற்ற வித்தைக்கும் அவர் தரித்திருந்த சாஸ்திரிகள் என்ற பட்டத்துக்கும் விலையுமில்லை, கௌரவமும் கிடையாது. அறிவு விற்பனைப்பொருளாய்வேண்டப்பட்டாலன்றி, அறிவாளி பிழைப்பது எங்ஙனம்? மேலும் சாஸ்திரிகள் படித்தபடிப்பு பயன்படக்கூடாத காலம் வந்துவிட்டது. இரண்டுஆண்டுகளுக்கு ஒரு முறை நிச்சயமாய் ஒரு புதுக் குழந்தையை வீட்டில் எதிர்பார்த்த சாஸ்திரிகள் வெளியே

போய் சம்பாதிக்கும் இயல்பில்லாதவராகவும் ஆகிவிட்டார். எனவே, சாஸ்திரப்பயிற்சியை மூட்டைகட்டி வைத்து விட்டு, பக்கத்துக் கிராமங்களில் பிச்சை எடுக்கத்துணிந்து விட்டார். இவ்வாறு அவரது குடும்ப காலக்ஷேபம் நடை பெற்று வந்தது.

தான் கெட்டது போல தனது குழந்தைகளும் கெடலாகாது என்று எண்ணி, சாஸ்திரிகள் தனது பிள்ளைகளை வடமொழிக்கல்வியில் பழக்கவில்லை. நாகரிக முறையில் நவீன அறிவும் ஆராய்ச்சியும் பெறுதற்பொருட்டு தனது பையன்களை ஆங்கிலப்பள்ளிக்கு அனுப்பி வந்தார். அவ்வாறு ஆங்கிலம் கற்றவர்களில் ஒருவன் நாராயணன். இவன் சோமதேவசாஸ்திரிகளின் நடுப்பிள்ளை. ஆங்கிலம் சிறிது கற்றுக் கொண்டான். அதிகமாக கற்றுக் கொள்ள அவனுடைய குடும்பத்தின் வறுமை இடங்கொடுக்கவில்லை. தான் பிழைப்புத் தேடினாலன்றி, தனது குடும்பம் அழிந்து போகும் என்று அறிந்து கொண்ட நாராயணன் வேலைக்கு அலைந்தான். எந்த வேலைக்கு தான் தகுதியுள்ளவன் என்று அவனுக்கே தெரியவில்லை. கூலிவேலை செய்வதற்கு உடம்பில் சக்தி போதாது. இவ்வாறு திகைத்துக்கொண்டிருக்கையில், காலவசத்தால் கமலாபுறம் என்ற ஊரில், பள்ளிக்கூட உபாத்தியாயர் வேலை அவனுக்கு கிடைத்தது. கமலாபுறத்துக்கும் புளியந்தோப்புக்கும் சுமார் நூறு மைல் இருக்கும். வண்டிப்பாதை சரியாக இருக்காது.

கமலாபுறம் புளியந்தோப்பைக் காட்டிலும் பெரிய ஊர். அந்த ஊரில் சுமார் முன்னூறு வீடுகளுக்கு அதிகமிருக்கும். தங்கள் ஊர் வளர்கிற ஊர் என்று கமலாபுறத்தார் சொல்லிக் கொள்ளுவார்கள். "அஷ்டமத்திலே சனி உட்கார்ந்து அனர்த்தங்களுக்குள்ளாகி தேய்ந்துபோகிற ஊர் போகட்டும். நம்ம ஊருக்கு குருவின் ஒன்பதாம் மடத்து வீட்சிண்யம் (பார்வை) பூராவாக விருக்கிறது. அது வளர்ந்து கொண்டேபோகும். அதற்கு ஒரு நாளும் அழிவுகிடையாது" என்று கமலாபுறத்து குட்டைச்சுவடி ஜோஸியர் சொல்லுவார். அவர் சொல்லுவதற் கேற்றாற்போல, ஊரில் பள்ளிக்கூடம் ஏற்பட்டது. இந்தப்பள்ளிக்கூடத்துக்குத்தான்

நாராயணன் உபாத்தியாயராக வந்திருக்கிறான். முன்னிருந்த "அம்மைமூஞ்சி" வாத்தி இறந்துபோகவே, பள்ளிக்கு பின்னர், "பவுண்டு" (பட்டிமேச்சல் மேயும் கால்நடைகளை அடைத்து அபராதம் வாங்கும் இடம்) வந்தது. அதற்குப் பின்னர் பஞ்சாயத்து ஏற்பட்டது. பிறகு சிறுகோயில் தோன்ற, அதற்கு திருவிழாவும் அமைக்கப்பெற்றது. மேலும் கமலாபுறம் நீலா நதிக்கரையில் உள்ளதாகையால், அதன் வெள்ளம் கமலாபுறத்தை வளம்பெறச் செய்து வந்தது.

பெற்றோர்களிடம் விடைப் பெற்றுக்கொண்டு நாராயணன் கமலாபுறத்துக்கு கால்நடையிலே (நூறுமைலும்) வந்து சேர்ந்தான். வழியிலே எங்கே படுத்துறங்கினான், என்ன உண்டான் என்பது தெரியாது. கமலாபுறத்தில் அவனுக்கு வேலைகிடைத்தது ஒரு கனவானுடைய சிபார்சு கடிதத்தின் மூலமாக.

அப்பொழுது நாராயணனுக்கு பதினெட்டு வயது. "சொட்டவாளைக்குட்டி" மாதிரியிருப்பான். அவன் இடுப்பு குறுகி, மார்பு விரிந்திருக்கும். நல்ல அழகிய தோற்றமுள்ளவன். மாநிறத்தான். பதினெட்டு அடிக்குமேல் பாய்ந்து தாண்டுவான். திவ்யமான தொண்டை. குழந்தைகளை அரவணைத்து, அழைத்து வைத்து, தித்திக்கும்படி அவர்களுக்கு சிறுகதைகள் சொல்லுவான். ஓட்டம்பிடித்தால் மூன்றுமைல் வரையில் மூச்சுதிணறுமல் ஓடுவான். புளியங்தோப்பில் ஆருவது ஆழமான குளமாவது இல்லாமையால் அவனுக்கு நீந்தத்தெரியாது. அந்தக்குறையையும், கமலாபுறத்து நீலாநதியைக்கண்டபின்னர் தீர்த்துக்கொள்ளலாம் என்று அவன் சந்தோஷமடைந்தான்.

கால்நடையாக வழிப்பிரயாணம் செய்து களைத்துப்போன நிலைமையில், நாராயணன் பள்ளிநிர்வாகிப் பெரியார் முன்னிலையில் போய் நின்றான்.

"உட்காரு, அப்பா! யார் நீ" என்றார் பெரியார்.

"தங்கள் ஊர்ப்பள்ளிக்கு தாங்கள் உபாத்தியாயராக நியமித்த நாராயணன்" என்றான்.

"வாத்தியாரே! வாரும். நல்லவேளை! பழைய வாத்தியார் இறந்த ஒருமாத காலமாக, இந்த ஊர்ப்பையன்கள் கழுதை மேய்க்கிறார்கள். நீர் வந்திருக்கும் லக்கினம் முகூர்த்தத்துக்கு எடுத்ததாகும். சுபஸ்ய சீக்கிரம் என்பது சுலோகம். ஆளைவிட்டு பள்ளிக்கூடத்தை காண்பிக்கச்சொல்லுகிறேன். அங்கேபோயிரும். பையன்களை அழைத்து வருவார்கள். லக்கினம் தவறிப்போகாமல், பள்ளிக்கூடத்தை ஆரம்பித்துவிடும்" என்றார்."

"சரி" என்றான் நாராயணன்.

ஆள் முன் செல்ல, நாராயணன் பின்நடந்தான். "கமலாபுறத்தில் எல்லோரும் இந்தப் பெரியவரைப் போலத்தான் இருப்பார்களோ? சாப்பிட்டாயா என்று மரியாதைக்குக் கூட அவர் கேட்க மறுத்துவிட்டாரே! வாத்தியார் வந்த சந்தோஷத்திலேயே, அவர் அதை மறந்து விட்டாரோ? என்னமோ, போகப் போகத் தெரிகிறது. பார்த்துக்கொள்வோம். வந்த முதல்நாளே வருந்துதல் கூடாது" என்று எண்ணிக்கொண்டே போனான் நாராயணன்.

"எந்த ஊர்" என்று வழியிலே ஒருவர் கேட்டார்.

"இந்த ஊருக்கு புதிதாய் வந்திருக்கும் வாத்தியார் நான்" என்றான் நாராயணன்.

"சரிதான்" என்று அவர் போனார்.

நல்ல கமலாபுறம் என்று நினைத்தான் நாராயணன்.

"யார் ஐயா அங்கே போகிறது" என்று பின்னிருந்து ஒரு குரல் வந்தது.

"அயலூர்" என்றான் நாராயணன்.

"இந்த ஊர் இல்லை என்று எனக்குத்தெரியும். அதை நீர் சொல்லவேண்டுமா? காலமே கெட்டு வருகின்றது. உம்மை நான் கேள்விகேட்டது பிசகு. நீர் யாராயிருந்தால் எனக்கென்ன" என்று சொல்லிக்கொண்டே அவர் போனார்.

"வாத்தியார் வேலை இந்த ஊரில் அழகாயிருக்கும்போலிருக்கிறதே" என்று எண்ணிக்கொண்டே போகையில், "களைப்பாய்ப் போகிறீர்களே? சாப்பிடவில்லைபோலிருக்

கிறது. இந்தாருங்கள்; இந்த பழங்களை சாப்பிடுங்கள்" என்று ஒரு சிறு பெண் சொன்னாள். வாய் பேசாமல், நாராயணன் அவைகளை வாங்கிக்கொண்டான்.

"நான் இந்தஊர் பள்ளிக்கூடத்தின் புது வாத்தியார். அங்கே நீ வருவாயானால், உன் பழங்களுக்கு காசு கொடுக்கிறேன்" என்றான் நாராயணன்.

"சும்மாப் போங்கள், சுவாமி" என்றாள் அந்தப்பெண்.

அக்கினி திராவகத்தைதப்போல கொதிக்கும் மணல் பரந்த பாலைவனத்தில் நீர்ச்சுனையைப் பிரயாணி கண்டால், அவன் மனம் எவ்வாறு இருக்கும்? அதைப்போல, நாராயணன் மனது துள்ளிக்குதித்தது.

நாராயணன் (அவன் பள்ளி வாத்தியாராக நியமிக்கப் பட்ட சிறிது காலத்திற்கு முன்னரிலிருந்து தன்னை நாராயணசர்மா என்று அழைத்துக்கொண்டான்)—பள்ளியை அடைந்தான். வந்த ஆள் பள்ளியின் கதவைதிறந்தான். பள்ளியாவதற்கு முன் அது குடியிருப்பு வீடாக இருந்தது. வீடு, திண்ணை, எங்கே பார்த்தாலும் புழுதிமயமாக இருந்தது.

"நான் போய்வருகிறேன்" என்றான் கூடவந்த ஆள். அவனும் போய்விட்டான்.

"இவ்வளவு புழுதியில் எப்படி பள்ளியை துவக்குகிறது" என்று எண்ணி, துடைப்பத்திற்காக, வீடுமுழுதும் தேடி அலைந்தான். உத்தரக்கட்டையில் ஒடிந்த விளக்கு மாறு ஒன்றை கண்டான். அதை சீர்படுத்தி, பெருக்க ஆரம்பித்தான். இதற்குள் தத்தம் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு, தகப்பன்மார்கள் பலர் அங்கே வந்தார்கள். நிர்வாகிப் பெரியவரும் அங்கே வந்து சேர்ந்தார்.

"என்ன வாத்தியாரே! உமக்கு சமயம், பொழுது தெரியவில்லையே! கூட்டுகிற வேலையை நாளைக்கு வைத்துக் கொள்ளக்கூடாதா? அதற்கு லக்கினம் தவறிப்போய்விட வில்லையே! குப்பை கிடந்தால் படிப்பு வராதா" என்று பெரியவர் பிரசங்கம் செய்தார்.

நாராயண சர்மா தூடைப்பத்தை சிறிது தூரத்தில் கொண்டுபோய் வைத்துவிட்டு, கையைக்கூட துடைத்துக் கொள்ளாமல் வந்து சேர்ந்தான்.

“என்ன அய்யா! கையிலே முழுநீளக் குப்பையை வைத்துக்கொண்டு, கையை சுத்தம் செய்துகொள்ளாமல், சொல்லிக்கொடுக்க வந்துவிட்டீரே” என்றார் பெரியவர்.

கைகளை தனது உடையின் பின்புறத்தில் துடைத்துக் கொண்டான் நாராயண சர்மா. தரித்திரத்திற்கும் அடிமைத்தனத்துக்கும் எவ்வளவு நெருங்கிய சம்பந்தம் உண்டு என்று அவனுக்கு அப்பொழுது தெரியவந்தது. குரங் கோட்டி, குரங்கை “லங்காபட்டினம் தாண்டடாயா” எனக் கேட்டு, அந்த தாண்டச்செய்யும் வீதி விநோதம் அவனுக்கு ஞாபகம் வந்தது. லக்கினம் தவறிவிடாமல், அன்றைக்கு ஒருவாறு பாடம் முடிந்துவிட்டது. பெற்றோர்களும் பையன் களும் கலைந்து போனார்கள்.

“அவஸ்தைதப்படாதேயும். உமக்கு அரிசி அனுப்பு கிறோம். இந்தப்பள்ளியின் அடுத்தபக்கத்தில் சமைத்துக் கொள்ள இடமிருக்கிறது” என்று சொல்லிவிட்டு நிர்வாகப் பெரியார் அகன்றுவிட்டார்.

பள்ளிக்கூட வீட்டை சுற்றிப்பார்த்தான் நாராயணன். பக்கத்தில் ஒரு அறையிருந்தது. அதற்கும் வெளி வீதிக்கும் தனிவழியிருந்தது. அடுப்புக்கட்டிகள் இரண்டு இருந்தன. உடைந்ததும் உடையாததுமாக நாலைந்து மண்பாண்டங்கள் இருந்தன. பள்ளி ஊர்க்கோடியில் என்பதை சொல்ல மறந்து விட்டேன். பள்ளிக்கூட கட்டிடத்துக்குப்பக்கத்தில் நடை பாதையின் ஓதுக்குப்புறத்தில் ஒரு கிணற்றைக்கண்டான். அந்தக்கிணறு ஊர் தண்ணீர்ப்பந்தலுக்காக ஏற்பட்டிருக்க வேண்டுமென தெரிந்துகொண்டான். பள்ளிக்கும் நீலா நதிக்கும் இரண்டு பர்லாங்கு தூரம் இருக்கும். தண்ணீர் பந்தல் வாளியை எடுத்து, கிணற்றினின்றும் ஜலம் இறைத்து, தனது உடம்பைக் கழுவி சுத்தம்செய்து கொண்டான். பிறகு கையில் வைத்திருந்த பழங்களை தின்று ஏப்பமும் விட்டான். ஆனால் பள்ளியில் குவிந்துகிடந்த குப்பைமட் டும் அவன் கண்ணை உறுத்திற்று.

தண்ணீர்ப்பந்தல் துடைப்பத்தை கடன் வாங்கிக் கொண்டு, பள்ளியில் நுழைந்தான். இதற்குள் அரிசி, பருப்பு, கொஞ்சம் எண்ணெய், மிளகாய், சிறிதுமோர், சிறிது நெய்—இத்தனையும் வந்து சேர்ந்தன. ஆனால் எதைக் கொண்டு அவைகளைச் சமைப்பது? விறகு இல்லை; பாத்திரங்கள் கிடையாது. கையால் தொட்டதும் பதார்த்தங்களை பக்குவமாய்ச் சமைத்துவிடும் சக்தி நளனுக்கு இருந்ததைப்போல, நாராயணனுக்கு இல்லை. சாமான்கள்கொண்டு வந்தவர்கள் அவைகளைச் சாண்குப்பையிலே வைத்துவிட்டு, கூடையைப்பின்னால் அனுப்புங்கள் என்று உத்தரவிட்டுச் சென்றார்கள்.

பழம் சாப்பிடுவதற்கு முன், களைப்பையறியாத நாராயணனுக்கு பசியால் இப்பொழுது காது அடைத்தது. தனது குடும்பத்தாரை நினைத்து, தனது தரித்திரத்தை நினைத்து, தனது தற்போதைய கமலாபுறத்து நிலைமையை நினைத்து, "கோ" வென்று அழுதான் நாராயண சர்மா. அப்பொழுது பிற்பகல் இருபது நாழிகையிருக்கும். கோடை காலம். களைப்பும், கண்ணீரும்சேர்ந்தவுடன், அவனையறியாமல், அவன் குப்பையிலேயே படுத்துக்கொண்டு தூங்கி விட்டான். எவ்வளவுகாலம் அவன் இப்படி தூங்கினான் என்பது அவனுக்கு தெரியாது. கண் விழித்துப்பார்த்தான். பள்ளிக்கூடத்து வாயிற்படியண்டை சிறிய பெண் ஒருத்தி உட்கார்ந்திருந்ததைக் கண்டான். தனக்குப் பழம் கொடுத்தபெண் என அவனுக்குத் தெரிந்தது.

"சுவாமி! நெடுநேரம் தூங்கிப்போனீர்களே! பொழுது போக இன்னும் இரண்டு நாழிகைதானே இருக்கிறது? நான் இங்கே வந்தேன். எல்லாம் திறந்திருந்தது. நீங்கள் தூங்கிக் கொண்டிருந்தீர்கள். கூடைச்சாமான்கள், பள்ளிக்கூடச் சாமான்களைப் பார்த்துக்கொண்டு இங்கேயே உட்கார்ந்து கொண்டிருந்தேன். பொழுது போயிற்றே, எழுப்பலாமா என்று நினைத்தேன். அசதி என்று சும்மாயிருந்துவிட்டேன். நீங்கள் ஆகாரத்திற்கு என்ன வழி செய்தீர்கள்" என்றாள் அந்தப்பெண்.

நாராயணசர்மாவுக்கு என்ன சொல்லுவது என்று ஒன்றுமே தெரியவில்லை. அந்தப்பெண்ணின் செயலைக்கண்டு, அவன் மனம் குழம்பிப்போனான்.

“எங்கள் வீட்டில் மோர் இருக்கிறது; கொண்டு வரட்டுமா” என்றாள்.

“நீ யார்” என்றான்.

“என் பெயர் வீரம்மாள். நான் வண்ணார வீடு” என்றாள்.

“வீரம்மா! நீ சொன்னதற்கு ரொம்ப சந்தோஷம். ஆபத்துக்காலத்தில், பிராமணர்கள் வேறு ஜாதியாரிடமிருந்து உப்புப் போடாத மோர் மட்டும் வாங்கிக் கொள்ளலாம் என்றிருக்கிறது. நீ கொடுக்கும் எதையும் தட்ட எனக்கு இஷ்டமில்லை. ஆண்டவன் உன்னைக்காப்பாற்ற வேண்டும்” என்றான் சர்மா.

“சுவாமி! ஆண்டவனை கூப்பிடாதேயுங்கள். எங்கள் வீட்டில் நாங்கள் பத்துக்குழந்தைகள் பிறந்தோம். பாவி நான் ஒண்டிதான் பாக்கி. அந்த ஆண்டவனுக்கு எங்கள் குடும்பத்திலே இரக்கம் கிடையாது. ஊரைச் சுற்றிவரும் போதெல்லாம் அவனுக்கு கண் இருக்கிறது. எங்கள் வீட்டுக்குப் பக்கத்திலே, அவன் கண் அடைத்துப் போகிறது. எங்கள் அம்மா அப்பா அழுகிறது, ஆண்டவனுக்குத் தெரிந்தால், அவன் சும்மாயிருப்பானா? நீங்கள் எங்கள் குடும்பத்தைப்பற்றி கவலைப்பட்டால், அது சாத்தியப் படாது. இப்பொழுது நீங்கள் ஆகாரத்திற்கு என்ன வழி செய்யப் போகிறீர்கள்” என்றாள் வீரம்மாள்.

“அதுதான் தெரியவில்லை. பாத்திரங்கள் இல்லை; விறகு இல்லை. வீடு புழுதிமயமாய் இருக்கிறது. கடைசியாக, எனக்கு சமைக்கத்தெரியாது. ஆனால் பசியோ காதடைக்கிறது. எங்கள் ஊரிலிருந்து இங்கு வந்துசேர, நூறுமைல், நடந்து வந்துசேர்ந்தேன். வழியிலே சரியாக சாப்பாடு கிடையாது” என்றான். சொல்லச்சொல்ல, அவன் கண்களில் நீர் பெருகிற்று.

"ஒன்று சொல்லுகிறேன், வருத்தப்படாமலிருந்தால் சொல்லுகிறேன். என்னிடம் நீங்கள் கோபங் கொள்ளலாகாது. எங்கள் வீட்டிலிருந்து விறகும் சிறு வெங்கலப் பானையும் கொண்டுவந்து, நான் சோறு சமைத்துவிடுகிறேன். இன்றைக்கு மோரை ஊற்றிச் சாப்பிட்டுவிடுங்கள். நாளைக்கு நன்றாக நீங்களே சமைத்துக்கொள்ளலாம்" என்றாள்.

"நீ சொன்னதில் எனக்கு வருத்தமுமில்லை. கோபமுமில்லை; ஆனால் சாத்தியப்படாத சங்கதி. நான் பிராமணன். உன்னைப்போல உத்தமப்பெண் சமைத்து சாப்பிடுவதை என் மனம் ஏற்றாலும், ஊரார் சம்மதிக்க மாட்டார்கள். அவர்கள் திட்டுவார்கள். என்னை ஊரைவிட்டுத் துரத்திவிடுவார்கள். வயிற்றுப்பிழைப்பு தேடிவந்த என் கதி என்னவாகும்? என்னை நம்பிக்கொண்டிருக்கிற என் குடும்பத்தின் கதி என்னவாகும்? நீ புத்திசாலி எனத்தோன்றுகிறது. நினைத்துப்பார்" என்றான் வாத்தி.

"சுவாமி! சுவரை வைத்துத்தானே சித்திரம் எழுத வேண்டும்? நீங்கள் பட்டினி கிடந்து இறந்துபோனால், உங்கள் கதி என்னவாகும்? உங்கள் குடும்பத்தின் கதி என்ன வாகும்? நினைத்துப்பாருங்கள்" என்றாள் பெண்.

"நீ சொல்லுவது சரிதான். நான் ஒப்புக்கொள்ளுகிறேன். நீ சமைத்து நான் சாப்பிட்டேன் என்பதை என் தகப்பனார் தாயார் கேள்விப்பட்டால், அவர்கள் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு, பிராணனை விட்டு விடுவார்கள். என் தேகம் அவர்கள் எனக்குக்கொடுத்த தேகமாகும். ஒரு வழி சொல்லுகிறேன் கேள்; நீ சொன்னபடி கொண்டு வா. நீ இங்கேயே உட்கார்ந்து கொண்டு, நீ எனக்கு, சமைக்கும் வித்தையை சொல்லிக்கொடு. நான் சமைக்கிறேன். அவ்வளவு தான், வைதீகத்தை, ஜாதியை முறிக்காமல், என்னால் செய்ய முடிந்தது" என்றான் நாராயணசர்மா.

பேச்சை வளர்க்க மனமில்லாமல், வீரம்மாள் வீட்டிலிருந்து சாமான்களைக் கொண்டுவந்தாள். சமையல் அறையை ஒருவாறு சுத்தம் செய்து, அடுப்புமூட்டி உலையைவைத்தான் சர்மா. அடுப்பை எரியவிடுகிற ரகசியம் அவனுக்கு

தெரியவில்லை. அடுப்பு முழுதும் ஒரே புகை மூட்டமாக இருந்தது. இதனிடையே, துடைப்பத்தை கையிலெடுத்து, ஒரு விநாடியில், பள்ளிமுழுமையையும் வீரம்மாள் சுத்த மாகக்கூட்டி, குப்பையை வெளியேகொண்டுபோய் எறிந்து விட்டாள். வீரம்மாள் என்ன சொல்லிக்கொடுத்தும், பதம் பார்த்து வடிக்கும் வழக்கம் தெரியாமல், சோற்றைக் களி யாக்கிவிட்டான் சர்மா. அந்தக் களியிலே மோரை ஊற்றி சாப்பிட்டு, அன்றிரவைப்போக்கினான். பசியிலே அந்தக் களியும் அமுதமாய் இருந்தது என்று சொல்லவும் வேண் டுமா? ஏழைக்கு ஒருநாள் ஒருவருஷமாக கழியும். பொருள் உள்ளவனுக்கு வருஷம், நிமிஷத்தில் பறந்துபோகும்.

மறுநாள் காலையில் குயவனிடம் கடனாக, சமையலுக்கு வேண்டிய மண்பாத்திரங்களை சர்மா வாங்கிக்கொண்டான். வீரம்மாளின் உதவியால், குழம்புவைத்தான். குழம்பிலே என்னன்ன சாமான்களோ போட்டுப்பார்த்தான். அதில் ருசிமட்டும் இல்லை. பழகினால் எல்லாம் தானாக வந்துவிடும் என்று எண்ணிக்கொண்டான். தினந்தோறும் வீரம்மாள் பள்ளிக்கு வந்து, அதை கூட்டி மெழுகி சுத்தம்செய்வாள். கூலிவேலையன்றல்லவா? எனவே, அதை குறைகூற, யாரால் முடியும்? ஆனால் சமையல் பாண்டங்களை சுத்தம்செய்ய, சர்மா அவளுக்கு அனுமதிகொடுப்பதில்லை. ஏன் என்று அவள் கேட்டால், ஜாதி என்று சொல்லி விழிப்பான்.

பள்ளிக்கூடத்தில் சுமார் இருபத்தைந்து பையன்களும் ஒரு சிறு பெண்ணும் படித்து வந்தார்கள். ஏன் ஒரு பெண் மட்டும் என்று கேட்கலாம். அந்த ஒரு பெண் வந்ததுகூட ரொம்ப நிர்ப்பந்தத்தினாலே. அந்தப்பெண்ணின் தகப்பனா ருக்கு தன் பெண் படிக்கவேண்டும் என்ற ஆவல் அதிகமா யிருந்ததால், அவர்மட்டும் தனது குழந்தையை அனுப்பி வைத்தார். ஊராருக்கு இது பிடிக்காத சங்கதியாகும்; என் றாலும் அவர்கள் பொறுத்துக்கொண்டார்கள், அந்தத்தனி மனிதனுடைய பிடிவாதத்தையும் பணத்தையும் கருதி.

சர்மாவின் சம்பளம் என்ன? மாதம் ஐந்து ரூபாயும் அமாவாசை நாளன்றைக்கு பையனுக்கு கால் மரக்கால்

வீதம் அரிசியும். ஊரார் எவரும் விரும்பாத மரக்கட்டை, சர்மாவுக்கு விறகாக அனுப்பப்பெறும். புதுப்பிள்ளை வந்து சேர்ந்தால் ஒரு தேங்காய், பாக்கு வெற்றிலை, ஒரு அணு குருபாத காணிக்கை நாராயண சர்மாவுக்கு வரும். இருபத்தைந்து குழந்தைகளும் ஒரே வகுப்பல்ல. அட்சராப்பியாசம் முதல் கூட்டிப்படிக்கத்தெரிந்த பையன்கள் வரையில் இருந்தார்கள். இவர்களை கட்டிமேய்க்கும் கஷ்டம் பள்ளி வாத்திமார்கள் அறிவார்களேயொழிய, பெற்றோர்களுக்கு ஒருநாளும் தெரியப்போவதில்லை. வீட்டிலே குறும்பு செய்தால், பள்ளிக்கூடத்துக்கு அனுப்பு என்று கம்பீரமாகத் தகப்பன் சொல்லிவிடுவான்; ஆனால் பள்ளி வாத்தியின் கஷ்டத்தை அவன் அறிவானா? “என் பையனுக்கு சரியாய் படிப்பு வரவில்லை. வாத்தியாரின் கவனிப்புபோதாது” என்று குறைகூறமட்டும் அவனுக்குத்தெரியும்.

ஆனால், பச்சைக்குழந்தைகளைக் கண்ணாறக்கண்ட பிறகு, நாராயண சர்மா தனது கஷ்டமொன்றையும் நினைத்துக்கொண்டதேயில்லை. சமையல் நேரத்தைக்கூட மறந்து விடுவான். குழந்தைகளைத் தெய்வங்களாக அவன் கொண்டாடினான். நாராயண சர்மாவின் அதிருஷ்டத்தால், அவன் கமலாபுறத்துக்கு வந்த இரண்டொரு தினங்களுக்குள் அமாவாசையும் வந்தது. அந்த மாத சாப்பாட்டு அரிசியும்கூட வந்து சேர்ந்தது. மாதம் முடிந்தபின், சம்பளமும் கைக்கு எட்டிற்று. ரொக்க ரூபாய் ஐந்து ரூபாயை கையில் பார்த்தவுடன், அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. ஐந்து மைல் தூரத்துக்கு அப்பாலுள்ள தபாலாபீசுக்கு ஓடி, நான்கு ரூபாயை தனது தகப்பனார் பெயருக்கு மணியார்டர் செய்தான். அன்று முழுவதும் அவன் அடைந்த களிப்பைச் சொல்ல முடியாது.

ஆறு வடியக்கொல்லும், பஞ்சம் தெளியக்கொல்லும் என்று உலகத்தார் சொல்லுவார்கள். அதுபோல, சோமதேவ சாஸ்திரிகள் நாராயணன் அனுப்பிய பணத்தைக் கையிலெடுத்து கனம்பார்த்து களிப்படையுங் காலத்தில், இரண்டுதடவை சொடுக்கி இழுத்து இறந்துபோனார். நாராயண சர்மாவுக்கு கடிதமூலமாக சேதி கிடைத்தது. விம்மி

விம்மி அழுதான். வீரம்மாளிடம் சொன்னான். ஊராரின் உத்தரவைப்பெற்று, தனது தகப்பனாரின் உத்தரக்கிரியைகளின் பொருட்டு, புளியந்தோப்புக்கு சென்றான். ஏழைக் குடும்பத்தின் மூலபுருஷன் இறந்துபோனால், அந்த விபரீத நிகழ்ச்சியின் பலனை யாரால் எழுத்தில் எழுதமுடியும்? வாயால் சொல்லமுடியும்?

சொல்லுவதென்ன? சோமதேவசாஸ்திரிகளின் உத்தரக்கிரியைகள் நடைபெற்றன. குடும்பத்துக்கு ஐம்பது ரூபாய் கடன் ஏற்பட்டது. கடன் பொறுப்பை நாராயணன் ஏற்றுக்கொண்டு, கமலாபுறத்துக்கு திரும்பிவந்தான். வந்ததும் வீரம்மாள் அவனை விசாரித்தாள்.

"இரண்டுவித நஷ்டங்கள் எனக்கு உண்டாகிவிட்டன. தகப்பனாரை சுகத்தில் வைத்து களிக்கவேண்டுமென எண்ணின எனக்கு அவர் இறந்தது ஒரு நஷ்டம். எனக்குச் சந்தோஷம் ஏது? அவருக்குப் பணிவிடைசெய்து பாது காக்க அவர் இல்லையே! அவர் இறந்ததனால் எனக்கு கடன் ஏற்பட்டது மற்றொரு நஷ்டம்" என்றான்.

"கவலைப்பட்டுச் செய்வதென்ன? கடனைத்தீர்க்கிற வழியைப்பற்றி யல்லவா இனிமேல் யோசிக்க வேண்டும்? கடனைத்தீர்த்து நல்ல பெயரோடு வெளியே வரவேண்டும்; அதுதான் கவலை" என்றாள் வீரம்மாள்.

"உன் யோசனையை மெச்சினேன்" என்றான் நாராயணசர்மா.

அந்தமாதம் முதல் தன் தாய்க்கு மூன்று ரூபாயும் கடனுக்கு இரண்டு ரூபாயும் அனுப்பி வந்தான். அமாவாசை அரிசி அவன் சாப்பாட்டுக்கு; பாதகாணிக்கைபணம் மணியார்டர் கூலிக்கு. இவ்வாறு இரண்டு ஆண்டுகள் கழிந்தன. ஆனால் கடன் தீர்ந்த பாடில்லை. இன்னும் இருபதுரூபாய்க்கு அதிகம், பாக்கி என்று கடன் கொடுத்தவன் சர்மாவுக்கு எழுதிவிட்டான். இப்பொழுது சர்மாவுக்கு வயது இருபது. வீராம்மாளுக்கு பதினைந்து. ஊரிலே சர்மாவுக்கு நல்ல மதிப்பு. பிள்ளைகளுக்கு அவனிடம் ரொம்பப்பிரியம்.

இந்தசமயத்தில் ஊரார் தபால் அதிகாரிகளுக்கு மனுச்செய்து கொண்டார்கள். கமலாபுறத்தில் ஒரு கிளை தபாலாபீஸ் ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும் என்பது மனுவின் கோரிக்கை. மனுவை விசாரிக்க தபால் இன்ஸ்பெக்டர் வந்தார். ஊரார் அவரை மரியாதை செய்து வரவேற்ருர்கள். சர்மாவும் அங்கிருந்தான். தபாலாபீஸ் வைப்பது எனமுடிவு செய்யப்பட்டு, வேலைக்கு சர்மாவை நியமிப்பது உசிதம் என வேண்டிக் கொள்ளப்பட்டது.

"அவன் யார், எங்கே அவன்" என்ருர் இன்ஸ்பெக்டர். சர்மா அவர் முன்னிலையில் வந்து நின்ருன்.

"நீ பிராமணனு? உன்னைப் பார்த்தால் பையன் போலிருக்கிறதே? தபாலாபீஸ் பணம் புழங்குகிற இடமாயிற்றே? கையரிக்கக் கூடாதே! பிராமணனு" என்ருர் இன்ஸ்பெக்டர்.

"நல்லபிள்ளை! வேண்டுமானல், அவருக்காக நான் ஜாமீன் நிற்கிறேன்" என்ருர் பள்ளிநிர்வாகிப் பெரியார்.

விஷயம் முடிந்து, தபாலாபீஸ் உத்தியோக மூலமாய்க் கூடுதலாக, இன்னொரு ஐந்து ரூபாய் சர்மாவுக்கு கிடைத்தது. இரண்டையும் சேர்த்து பார்க்கும்படியாக, அவனுக்கு காலமும் வேலையும் அமைந்தன. அன்றைய தபாலிலேயே தனது தாய்க்கு இந்த சந்தோஷச் செய்தியையும் எழுதி அனுப்பினன். அன்றையதினம் வழக்கம்போல் வீரம்மாள் வந்தாள்.

"வீரம்மா! சங்கதிகேட்க வில்லையே! நம்ம ஊருக்கு தபாலாபீஸ் வரப்போகிறது. நான் அதற்கு அதிகாரி. அதற்காக எனக்கு ஐந்துரூபாய் சம்பளம். இரண்டு சம்பளமும் சேர்ந்து எனக்குப் பத்துரூபாய் கிடைக்கும். இனிமேல் நான் பணக்காரனில்லையா" என்ருன் சர்மா.

"அப்பா! நல்லவேளை! இனிமேல் உங்களுக்கு கடன் தொந்திரவு இருக்காது. ரொம்ப சந்தோஷம். சுவாமி!" என்ருள்.

"வீரம்மா! நீ புத்திசாலி. பார்த்தாயா, அந்தப்பா ழானகடனை மறந்து விட்டேனே! உண்மை; இனிமேல் கடன்

இருக்காது. இனிமேல் உன்பாடங்களை நீயே படித்துக் கொள்ளவேண்டும். தபால்வேலையும் சேர்ந்தால் சமையல் செய்யக்கூட எனக்கு நேரமிராது. ஆகையால் உன்சந்தேகத்தை நீ கேட்டுக்கொள். நீ தனியாக எதையும் கற்றுக் கொள்ளக்கூடிய நிலைமைக்கு வந்து விட்டாய்" என்றான் நாராயணன். அவள் ஒன்றும் சொல்லாமலிருந்தாள். "பேசாமலிருக்கிறாயே" எனவினவினான்.

"ஒன்றுமில்லை; நான் சொல்வதைக் கேட்பதாயிருந்தால், சொல்லுகிறேன். வீணே வாயிழக்க இஷ்டமில்லை" என்றாள்.

"எனக்கு இது சந்தோஷ சமயம். நீ எதைக் கேட்டாலும் தருகிறேன்" என்றான்.

"உங்களுக்கு இனிமேல், அதிகமாக ஓய்வு நேரமிருக்காது. உங்கள் துணிகளை தோய்த்துக் கொண்டு வருகிறேன். புஸ்தகங்களையும் நானே படித்துக் கொள்ளுகிறேன்" என்றாள் வீரம்மாள்.

"நான் அயர்ந்து போனசமயம் பார்த்து, என்னை வார்த்தையால் கட்டுப்படுத்தி விட்டாய். நான் சொல் தவற முடியாது. உன்னிஷ்டம் போல் செய்" என்றான் சர்மா. வீரம்மாள் மிகுதியும் சந்தோஷமடைந்தாள்.

மேலே கூறப்பட்டது நடந்து ஒருவாரமிருக்கும் நாராயணசர்மா முகவாட்டத்துடனிருந்தான். அந்தசமயம் வீரம்மாள் வந்தாள்.

"சுவாமி! ஏதோ வருத்தப் பட்டுக்கொண்டிருக்கிறீர்களே! எனக்குச் சொல்லலாகாதா? தாயாருக்கு உடம்பு அசௌகரியமா? அல்லது கடனுக்காக அந்த ஆளிடமிருந்து கடிதம் வந்ததா" எனக்கேட்டாள்.

"உன்னிடத்தில் சொல்லக்கூடாதது என் ஆயுளில் ஒன்றுமே இருக்காது. உன்னைக்காட்டிலும் உலகத்தில் எனக்கு வேறு உதவி கிடையாது" என்று சொல்லும்பொழுதே, "சுவாமி! ஆண்பிள்ளைகள் ஒரு நாளும் மனங்கலங்கக்கூ

டாது. நீங்கள் கண்கலங்கினால், நாங்கள் போகிறவழி என்ன? எதற்கும் கவலைப்படலாகாது என்று என் தகப்பனார் அடிக்கடி எங்களுக்குச் சொல்லுவார். உங்களுக்கு இப்பொழுது என்ன வந்துவிட்டது. தபாலாபீஸில் ஏதேனும் திருட்டுப் போய் விட்டதா" என்று கேட்டாள்.

"ஒரு கடிதம் என் தாயாரிடமிருந்து வந்திருக்கிறது. அதைப்படித்தேன். வருத்தமுண்டாயிற்று. அதை நீ படித்துப்பார்" என்று கடிதத்தைக்கொடுத்தான். நீட்டின கடிதத்தை வீரம்மாள் வாங்கிக்கொண்டு, கொஞ்சம் தடவி, ஆனால் சரிப்படுத்திக்கொண்டு, பின்வருமாறு படித்தாள்:

சிரஞ்சீவி நாராயணனுக்கு ஆசீர்வாதம். சகல மங்களங்களும் உண்டாவதாக! நீ எழுதிய கடிதத்தை உன் தங்கை ஞானம்பாள் எனக்குப் படித்துக் காண்பித்தாள். ரொம்ப சந்தோஷமடைந்தேன். எல்லாம் கடவுளின் கிருபை. அவன் தான் நம்ம குடும்பத்தை காப்பாற்ற வேண்டும். ஞானம்பாளுக்கு இப்பொழுது பதினன்கு வயது (இந்த மாதத்தோடு) பூர்த்தியாகிற சங்கதி உனக்கு ஞாபகமிருக்கும். இன்னும் இரண்டு மாதங்களுக்குள் அவளுக்கு கலியாணம் பண்ணியாகவேண்டும். இப்பொழுதே, ஊரார் கண்டதெல்லாம் பேசுகிறார்கள். வைதீகாள் வீட்டுப்பெண்ணை பதினெட்டு வயதானாலும் கலியாணம் செய்துகொடுக்கலாம். அவர்களுக்கு சாஸ்திரமேது? அவர்களுக்கு அவர்கள்தான் சாஸ்திரம் என்று வம்பு பேசுகிறார்கள். உலைவாயை அடைத்துவிடலாம், ஊர் வாயை அடைத்துவிட முடியுமா? யோசித்துப் பார். உன் தமையனுக்கு கலியாணமாகாவிட்டாலும், உனக்கு இந்த வருஷம் எப்படியாவது தன் பெண்ணைக்கொடுத்துவிடவேண்டுமென்று உன் சின்ன மாமா கணபதி சாஸ்திரி ஒருகாலில் நிற்கிறான். நீயும் ஒண்டியாய் எத்தனைநாள் சமைத்து சாப்பிட்டுக்கொண்டிருக்கமுடியும்? இரண்டு கலியாணங்களும் இந்த வருஷம் கட்டாயம்

நடந்தாகவேண்டும். இரண்டுக்குமாக, ஐந்நூறு ரூபாய் பிடிக்கும். உனக்குத் தெரிந்தவிடத்திலேயே, கமலாபுறத்தில் கடனுக்கு ஏற்பாடு செய்துவிட்டு, எனக்கு உடனே பதில் எழுது. கலியாண காரியங்கள் சீக்கிரம் ஆகவேண்டும். எல்லாவற்றிற்கும் உடனே பதில் எழுது. நாங்களெல்லோரும் இங்கே சௌக்கியமாய் இருக்கிறோம்"

வீரம்மாள் கடிதத்தைப்படித்து முடித்தாள். பேசாமலிருந்தாள். அவள் முகத்தில் ஏதோ வாட்டம் ஏற்பட்டாற் போல நாராயணனுக்கு தோன்றிற்று.

"என்ன வீரம்மா! பேசாமலிருக்கிறாயே" என்றான் நாராயணன்.

"அம்மா எழுதியிருக்கிறது சரிதானே! உங்கள் தங்கைக்குக் கலியாணம் ஆகவேண்டும்! பிராமண வீட்டில் அதை அதிககாலம் நிறுத்தி வைக்க முடியாது. எங்கள் வீடா பிராமணர் வீடு? அம்மா சொல்லுகிறது போல, நீங்களும் எவ்வளவு காலம் ஒண்டியாயிருக்கிறது? நீங்கள் கடனைப்பற்றி கவலைப்படுகிறாப் போலிருக்கிறது. கடனைப் பற்றி நினைத்தால், கலியாணம் போகிறவழி எந்தவழி" என்றுகேட்டாள் வீரம்மாள்.

ஆனால் அவளுக்கு வழக்கமாயுள்ள உற்சாகத்துடன் அவள் பேசவில்லையென்று அவளுடைய குரலினின்றும் தெரிந்ததாக நாராயணனுக்குத் தோன்றிற்று. "கடன் கவலை எனக்கு இப்பொழுது போய்விட்டது. கடன் வாங்கிக் கடனைத் தீர்த்தவன், பின்னும் கடன் வாங்க பின்னடைய மாட்டான். எனக்கு இப்பொழுது வந்திருப்பது கலியாணக் கவலை" என்றான்.

"உங்கள் தங்கைக்கு கலியாணம் செய்யாமல் சும்மாயிருக்க முடியுமா? நீங்களும் கலியாணம் செய்துகொள்ள வேண்டியகாலம் தான்" என்றாள் வீரம்மாள்.

"என் தங்கைக்கு கலியாணம் செய்துவிடவேண்டும். அதை நான் தடுத்துப்பேசவில்லை. எனக்கு எதற்கு கலி—" என்று முடிப்பதற்குள் நிறுத்திக்கொண்டான்.

"ஏன் முடிக்கவில்லை? விழுங்கிவிட்டீர்களே" என்றாள் வீரம்மாள்.

"ஒன்றுமில்லை" என்றான் சர்மா.

"எதையோ மறைக்கப் பார்க்கிறீர்கள்? என்னைத் தவிர உலகத்தில் உங்களுக்கு வேறு உதவி கிடையாது என்றீர்களே" என்று வீரம்மாள் கேட்டாள்.

"நான் சொல்லாததற்கு அதுதான் காரணம்" என்றான் நாராயண சர்மா. பிறகு பேச்சும் நின்று விட்டது. வீரம்மாளும் வீடு போய்ச்சேர்ந்தாள். அன்றிரவே சர்மாவுக்கு காய்ச்சல் வந்துவிட்டது.

காலையில் வந்தாள் வீரம்மாள். சர்மா காய்ச்சலாக கிடப்பதைக் கண்டாள்.

"வீரம்மா! எனக்குக் காய்ச்சல். சுரம் எப்படியிருக்கிறது என்று உடம்பைத் தொட்டுப்பார்" என்றான்.

இதைக் கேட்டவுடன், வீரம்மாளின் உடம்பு தூக்கிப் போட்டது. ஒன்றும் பேசாமல், சர்மாவின் நெற்றியையும் மார்பையும் தொட்டுப் பார்த்தாள். காய்ச்சல் அதிகமில்லை என்றாள்.

"வாய் கசப்பாயிருக்கிறது" என்றான்.

வீரம்மாளுக்கு புதியதொரு தைரியம் உண்டாயிற்று. "நிறைய சர்க்கரை போட்டு, கஞ்சி வைக்கிறேன். குடியுங்கள், வாய்க்கசப்பு போய்விடும்" என்றாள்.

சிறிதுநேரம் பொறுத்து சரி யென்றான் சர்மா. சர்க்கரை உண்டா என்று கேட்டான். இல்லை எனவே, வீட்டுக்கு ஓடி, நொடிப்பொழுதில் சர்க்கரை கொணர்ந்து, கஞ்சி வைத்துக் கொடுத்தாள். குடித்தான் சர்மா. "மயக்கமாய் வருகிறது, தலையைப் பிடித்துக்கொள்" என்றான். தன் தொடையில் அவன் தலையை வைத்து, அதை இருகைகளாலும் அழுத்தி, ஆனால் வலிக்காமல் பிடித்துக்கொண்டாள், வீரம்மாள்.

"இதமாயிருக்கிறது" என்றான் சர்மா.

"அப்படியே தூங்குங்கள்" என்றாள் வீரம்மாள். தூங்கிப்போனான். சிறிது நேரத்திற்குள்ளாகவே விழித்துக்கொண்டு, "உன்னை தொந்திரவு செய்வது பாவம்; தலையணையில் தலைவைத்துப் படுத்துகொள்ளுகிறேன்" எனக்கூறி, தலையை அவள் தொடையினின்றும் எடுத்துவிட்டான். அன்று பள்ளிக்கூடம் கிடையாது. இரண்டு மூன்று நாட்களுக்குள் அவன் காய்ச்சல் குணமாய்ப் போயிற்று.

கமலாபுரம் பள்ளி, ஸர்க்கார் பள்ளியாக மாறி, ஒரு வருஷமாயிற்று. ஆனால் சம்பள உயர்வு மட்டும் சர்மாவுக்கு கிடையாது. திடீரென்று ஒருநாள் அவருக்கு ஒரு உத்தரவு ஒருவர் மூலமாக வந்தது. உத்தரவு பின்வருமாறு:—கமலாபுரம் ஆரம்பப்பள்ளி உபாத்தியாயர் நாராயண சர்மாவுக்கு: நீர் இருபத்து நான்குமணி நேரத்துக்குள் உம்முடைய வேலையை நமது ஆபீஸ் உத்தரவை உமக்குக் கொண்டுவந்து கொடுப்பவரிடம் ஒப்புவித்துவிட்டு, சேலூருக்குச் சென்று, அந்தப்பள்ளியின் தலைமை ஆசிரியர் பதவியை ஏற்றுக்கொள்ளவும். ஒப்புக்கொண்ட தேதிமுதல், உமக்குப் பதினைந்து ரூபாய் சம்பளம் போடப்பட்டிருக்கிறது. உமக்கு இஷ்டமிருந்தால், அந்த ஊர் தபாலாபீஸ் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளலாம். அதற்குத் தனியாக ஊதியத்தைப் பற்றி அதன் மேலதிகாரிகளுக்கு எழுதிக்கொள்ளவும்.

கல்வி இலாகா இன்ஸ்பெக்டர்.

உத்தரவு அவனுக்கு கிடைத்த நேரம் மாலே. மறுநாள் அதிகாலேயில் புறப்பட்டாலன்றி, சேலூருக்கு இரண்டு நாட்களுக்குள் போய்ச்சேர முடியாது. சுமார் அறுபது மைலிருக்கும். வந்தவரிடம் சார்ஜ் ஒப்புவித்தான். ஊர்ப்பெரியவரிடம் சொல்லிக்கொண்டான். மறுநாள்காலேயில் அருணேதயத்திற்குமுன், கமலாபுரத்தைவிட்டு புறப்பட்டுப்போனான்.

வழக்கம்போல, வீரம்மாள் மறுநாட்காலேயில் பள்ளிக்கு வந்தாள். வேற்று ஆளிருப்பதைப் பார்த்தாள். வாத்தியார் எங்கே என்று கேட்டாள். நீ யார், வாத்தியார் எங்கே என்று கேட்பதற்கு என்றான் அந்த ஆள்.

"அவரை எனக்குத் தெரியும்" என்றாள் வீரம்மாள்.

"அவரைப்போல என்னையும் தெரிந்துகொள். அவர் ஊரைவிட்டு ஒருவருக்கும் சொல்லிக் கொள்ளாமல் ஓட்டமெடுத்து விட்டார்" என்று துடுக்காக சொன்னான் புதிய வாத்தி.

"நீங்கள் யார்" என்று வீரம்மாள் வினவினாள். மங்கைப்பருவம் எய்திவரும் வீரம்மாளின் வயதுக்கிரமத்தை ஏற இறங்கப் பார்த்து, தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "அவர் இடத்துக்கு நான் வந்திருக்கிறேன். நீ எப்பொழுதும் போலவே வந்து கொண்டிருக்கலாம்" என்று வாய் அடங்காமல் உளறினான்.

"அவரும் வாத்தியார், நீயும் வாத்தியா? சீ! போ, மடையா" என்று சொல்லிவிட்டு வீர்ரென்று வீரம்மாள் வீடு போய்ச் சேர்ந்தாள்.

"அன்றைய தினமே, புதிய வாத்தி ஊர்வம்பைக் கிளப்பிவிட்டான். "கேட்டீர்களா செய்தியை! அந்த அயோக்கியன் நாராயண சர்மா, இந்த ஊர் வண்ணாரக்குடியை வைப்பாக வைத்துக் கொண்டிருந்திருக்கிறான். அவன் போய் விடவே, அவள் இன்றைய தினம் என்னிடம் வந்து, என்னைப் பிடிக்கப் பார்த்தாள். சீ நாயே என்று அவளை அடித்துத் துரத்திவிட்டேன்" என்று அபாண்டமான பொய்யை புனைந்து திரித்துவிட்டான். "வீரம்மாள் அப்படிப்பட்டவள் இல்லை" என்று ஊரார் சொன்னார்கள். சர்மாவுக்கு பரிந்து சிலர் பேசினார்கள். "என்னய்யா முழுப்புரட்டு! அந்தப்பெண் இன்னும் ஆளாகவில்லையே" என்று யாரேனும் கேட்டால், "காமத்துக்கு கண் கிடையாது" என்று உளறுவான். வம்பும் ஒருவாறு அடங்கிவிட்டது.

இவ்வாறு ஆறுமாதம் கழிந்திருக்கும். வழக்கமாக வண்ணான் துரைக்கு துணிகளை வெளுக்க எடுத்துச்செல்லுவாள் வீரம்மாள். அங்கே துணிகளை துவைக்கையில், தனது தகப்பனில்லாத காலத்தில், ஒவ்வொரு அடிக்கும் "வாத்தியாரே எங்கு போனீர்கள்? என்னை மறந்து போனீர்களே"

என்று சொல்லித்துவைப்பாள். நாளுக்கு நாள் மெலிந்து போனாள். ஒருவருக்கும் தெரியாமல், ஒரு நாள், துறையில், நீரில் விழுந்து இறந்துபோனாள்.

வீரம்மாள் இறந்து சிறிதுகாலம் இருக்கும். தான் கமலாபுறத்தை விட்டுச்சென்ற ஒரு வருஷகாலமாக, நாராயண சர்மாவுக்கு "லீவு" கிடைக்கவில்லை. எத்தனையோ தடவை மேலதிகாரிக்கு எழுதிப்பார்த்தான், பலிக்கவில்லை.

"இந்த சமயத்தில் லீவு கொடுக்கமுடியாது" என்று ஒவ்வொரு தடவையும் கடுமையாக அதிகாரியின் பதில் உத்தரவு அவனுக்கு கிடைத்தது. ஏக்கமுற்றான். "வீரம்மாளிடம் சொல்லிக்கொண்டு வர முடியவில்லையே" என்று பல தடவைகளில் வருந்த முறுவான். கடைசியாக லீவு கிடைத்தது. கமலாபுறத்துக்கு ஒருநாள் மாலையில் வந்து சேர்ந்தான். வீரம்மாள் தண்ணீரில் விழுந்து இறந்ததைக் கேள்விப்பட்டான். மறுநாட்காலையில், வண்ணான் துறையில் நாராயண சர்மாவின் பிரேதம் கண்டெடுக்கப்பட்டது.

கமலி — விமலி

காளஹஸ்திக்கருகே கிளியூர் என்று ஒரு கிராமம் இருக்கிறது. அந்த கிராமத்திலே குபேந்திரகுப்தா என்று ஒருவர் இருந்தார். அவர் பெயருக்குத்தக்க செல்வம் அவருக்குண்டு. "காளஹஸ்தி சீமையிலே பாதி பூமியும் தூக்க முடியாத பணமும் அவருக்குண்டு" என்று கிராமத்தார்கள் சொல்லிக்கொள்ளுவார்கள். ரொக்கப்பணத்திலும் நிலத்திலும் கூடி, அந்த இலாகாவில் அவர்தான் தலைமையான செல்வவந்தர். "தோட்டம் துறவு, ஆள்மாகாணம், வண்டி காடி" இவைகளைப்பற்றி சொல்லத்தேவையில்லை. அவருடைய வார்த்தை சுக்கிரவ ஆக்கினையைப்போல. அவர் பெயரைக்கேட்டால், அழுதபிள்ளை வாய்மூடும். அவரை நேரே பார்த்தால், எல்லோருக்கும் சிம்ம சொற்பனம்தான். அதிகாரம் "எட்டுக்கண் விட்டடிக்கிற" குபேந்திர குப்தாவுக்கு முப்பத்தைந்து வயதிருக்கும்.

வெங்கம்மாள் என்று அவருடைய மனைவிக்குப் பெயர். அவள் நிகறற்ற அழகுவாய்ந்தவள். தனவந்தர் குடும்பத்தில் பிறந்தவள். பிறந்த இடத்தில் செல்வம் லட்சக்கணக்கில் என்றால் புக்ககத்தில் செல்வம் பத்து லட்சக்கணக்கில். செலவைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை. அது விட்ட இடம் தொட்ட இடம் தெரியாது. குபேந்திர குப்தாவுக்கும் வெங்கம்மாளுக்கும சிறு பிராயத்திலேயே கலியாணமாகிவிட்டது. ஏராளமான சீர் வரிசைகளைச்செய்து கொடுத்து, வெங்கம்மாளை கிளியூருக்கு அனுப்பினார்கள் அவர்களது பெற்றோர்கள். அவள்போக, பல்லக்கு, வர, பல்லக்கு. வெங்கம்மாள் பிறந்த வீட்டில் அவள் தனிப்பெண். குபேந்திரகுப்தா தனிப்பிள்ளை. தனவந்தர்கள் இவ்வாறுதான் சம்பந்தம் செய்யப் பிரியப்படுவார்கள். பணத்தோடு பணம் சேர்ந்தால்தான், அது மணம் பெற்று, வாசனை வீசும் என்று அவர்கள் விகடமாய்ச் சொல்லிக்கொள்ளுவதுண்டு. கலியாணமாகி இருபது ஆண்டுகள் கழிந்தும், குபேந்திர குப்தாவுக்கு குழந்தை கிடையாது.

பிள்ளையில்லாக்குறையை யாரிடம் சொல்லிக்கொள்ளுகிறது? கடவுளிடம் முறையிடவேண்டியதுதான். வெங்கம்மாள் பல தடவைகளில் தனது புருஷன் மறுவிவாகம் செய்து கொண்டு, பிள்ளையில்லாக் குறையை நிவர்த்தித்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லுவதுண்டு.

“நான் மறுவிவாகம் செய்து, பிள்ளைக் குறையைத் தீர்த்துக் கொள்ளுவதாக நினைத்துக் கொள்ளுவோம். என் குறை தீர்ந்தது. அதனால் உன்குறை தீருமா” என்று வேடிக்கையாக சிரித்துக் கொண்டு சொல்லிவிட்டு, “உன் குறை தீருவதற்கு நீயுமல்லவா மறுவிவாகம் செய்துகொள்ள வேண்டும்,” என்று சொல்லிலே இடைக்குத்து குத்துவார்.

வார்த்தை வினையாக முடிந்ததே என்று வெங்கம்மாள் மிகுதியும் வருத்தப் படுவாள். “நான் சொன்னது தவறு, மன்னித்து விடுங்கள். மறுவிவாகம் செய்து குடும்பத்தில் விளக்கேற்றி வைக்க, ஆண்பிள்ளைகளுக்கு ஹிந்து தர்ம சாஸ்திரப்படி பாத்தியம் உண்டு. என் பிள்ளையானால் என்ன, என் சக்களத்தியின் பிள்ளையானால் என்ன? அது எங்களுடைய புருஷன் குழந்தைதானே? எங்கள் குடும்பத்தின் குழந்தைதானே? குடும்பம் பெருக வேண்டாமா? குடும்பத்திலே சூன்யமாயிருக்கலாகாது. இதுவரையிலும் பொறுத்திருந்தது போதும்” என்றாள் வெங்கம்மாள்.

“மறு விவாகம் செய்துகொள்ள உனக்கு ஆசையிருக்கிறாப்போலிருக்கிறது. அதை மறைத்துக்கொண்டு, எனக்கு சிபார்சு செய்கிறாய். நீ செய்துக்கொள். அதை நான் பிரபலப்படுத்திவிடுகிறேன். புது தர்ம சாஸ்திரத்துக்கு அது அஸ்திவாரமாகிவிடும்” என்றார்.

“உங்களுடைய பணக்கொழுப்பு அந்தமாதிரி உங்களைப் பேசத்தூண்டுகிறது. நீங்கள் சொன்ன வார்த்தைகள் என்னை ரம்பம்போட்டு அறுக்கின்றன. உங்களுக்கு இன்றையதினம் பைத்தியம் பிடித்திருக்கிறதா” என்றாள் வெங்கம்மாள்.

“எனக்கு பைத்தியம் பிடிக்கவில்லை. எனக்கு இரண்டாந்தாரம் கலியாணம் செய்துவைக்க உனக்கு யார் உத்தரவு கொடுத்தது? உன் உத்தரவை நான் வேண்டினேனா? பிள்ளை

யில்லையே, அதற்கு என்னசெய்வது என்று உன்னிடம் நான் முறையிட்டுக் கொண்டேனு? தெய்வமே என்று கிடக்கின்ற எனக்கு, மறுவிவாகம் செய்துவைக்க எண்ணின உனக்குத் தான் பைத்தியம் பிடித்திருக்கிறது. எனக்கு கலியாணம் வேண்டுமென்கிற காலத்தில் உன்னை யோசனைகேட்கிறேன். அப்பொழுது நீ உன் யோசனையைச் சொல்லலாம். குழந்தை யில்லாவிடில், நல்ல பிள்ளையாகப்பார்த்து சுவீகாரம் செய்து கொண்டால், குடி முழுகிப்போய்விடுமா" என்ருர் குபேந் திரன்.

தன்னைத்தவிர வேறு எவரையும் மணந்துக்கொள்ளத் தன் கணவனுக்கு விருப்பமில்லை என்று தெளிவாகத் தெரிந்துகொண்ட வெங்கம்மாள் தன் மனதுக்குள் பேரா னந்தமடைந்தாள். தனது ஆனந்தத்தை அடக்கிக்கொண்டு, "ஸ்தலயாத்திரை போய், சுவாமிதரிசனம் செய்வது நல் லது" என்கிருர்களே என்று மெதுவாக வாயெடுத்தாள்.

"பழைய கதைகளை நம்ப எனக்கு இஷ்டமில்லாவிடி னும், உனக்காக, உன்னைக்கூட்டிக்கொண்டு, கன்னியா குமரி முதல் பத்திரிநாத் வரையில் ஸ்தல யாத்திரை செய்ய, நான் தயாராயிருக்கிறேன். அந்த தேசங்களைப் பார்த்தது மாதி ரியுமிருக்கும். நீயும் பல புதிய பிரதேசங்களைப் பார்த்து, புதிய பழக்கங்களைக் கொள்ளுவாய். கர்நாடக முறையில், என் வாழ்க்கையை கட்டி அழ, இனிமேல் எனக்கு இஷ்ட மில்லை. நல்ல வேளையாக, ஒரு யுக்தி சொன்னுய். அதை முதலிலேயே சொல்லியிருக்க கூடாதா? இவ்வளவு பேச்சு வளர்ந்திருக்காதே" என்ருர் குப்தா.

கிணறுவெட்ட பூதம் புறப்பட்டது போலாயிற்று வெங்கம்மாளுக்கு. ஸ்தல யாத்திரைக்கு அவள் ஆசைப்பட, அவளுடைய கணவனுக்கு புதுமாதிரி வாழ்க்கையில் பிரிய முண்டாகி விட்டதை பார்த்து அவளுக்குச் சிறிது பய முண்டாயிற்று. புதுமாதிரி வாழ்வு எப்படியிருக்கும் என்று அவளுக்கு நிதானப்பட வில்லை.

புதுமாதிரி என்ருல் வீட்டிலில்லாமல், காட்டில் கூடா ரம் போட்டுக் கொண்டு வசிப்பதா? அல்லது வீட்டுக்கு

வராமலே வெளிநாடுகளில் சதா சஞ்சாரம் செய்து கொண்டிருப்பதா? பண்டைக்காலத்து ரிஷிகளைப் போல பர்ணசாலையில் வாழ்வதா? அல்லது பெரிய நகர மொன்றில் பங்களாவில் வசிப்பதா? காலையில் ஆகார முண்டா? நடுப்பகலில் ஏதேனும் உண்பதா அல்லது இரவில் ஏதேனும் உறக்க முண்டா? இன்னும் என்ன வெல்லமோ, அவள் மனத்தில் தோன்றின. புருஷனைக்கேட்பதற்கு அச்சமும், வெட்கமும். தன் புருஷன் எதைக் குறிப்பிட்டான் என்பதைத் தெரிந்து கொள்ள, இயல்பாகவே அவளுக்கு சக்தியில்லை. ஆனால், பண்டை க்காலத்து பத்தினி மார்களில் அவள் ஒருவளானதால், தன் புருஷன் இன்னது சொன்னான் என்பதைத் தெரிந்து கொள்ள, தன் மண்டையை உடைத்துக் கொண்டாள். ஒன்றும் விளங்கவில்லை.

இதற்குள், "எப்பொழுது புறப்படலாம்" என்று புருஷன் கேட்டார்.

"அதற்கென்ன இப்பொழுது அவசரம்? நல்ல நாள் பார்த்து நல்லவேளையில் புறப்படுவோம்" என்றாள்.

"நாள் நட்சத்திர லக்கினமெல்லாம் பார்த்து சபை கூட்டி, அக்கினி வளர்த்து எல்லோரும் ஆசீர்வாதம் செய்ய, கலியாணம் செய்து கொண்டோம். குழந்தைக்கு வழியைக் காணோம். நீயே ஸ்தல யாத்திரை போகவேண்டு மென்கிறாய். இன்னுமா நாள் பார்க்கவேண்டும்? பார்த்தது போதும். நாளைக்கே புறப்படவேண்டு மென்பது என் உத்தேசம். நல்லது செய்யவேண்டுமானால், அதை உடனே செய்ய வேண்டும் என்பது பழமொழி" என்றார்.

"நீங்களும் என்னைப்போலவே பேசுகிறீர்களே? அது அழகாயிருக்குமா? கர்நாடக வாழ்வைத் தள்ள நினைக்கும் உங்களுக்கு கர்நாடக பழமொழி எதற்காக? நீங்கள் புது மாதிரி பேசுங்கள், பார்ப்போம்" என்றாள் வெங்கம்மாள்.

"நீ அப்படி கேலி செய்வதானால், நாம் இப்பொழுதே புறப்படுவோம்" என்றார் குபேந்திரன். வெங்கம்மாளுக்கு இடிவிழுந்தது போலாயிற்று. அப்பொழுது ஒன்றும் சொல்லச் சரிபடவில்லை.

"சரி" என்றாள்.

கோடீசுவரன் நினைத்தால் போதும், எல்லாம் உடனே நடக்கும். ஸ்தல யாத்திரையின் பொருட்டு, குபேந்திரன் யாரிடமாவது கடன் கேட்கப்போக வேண்டுமோ? இருப்புப் பெட்டியைத் திறந்து, வேண்டுமென்பதை எடுத்துக்கொண்டார்.

"காளஹஸ்திக்கு சவாரி, ஜல்தி" என்று கட்டளையிட்டார். வெங்கம்மாளுடன் தாதியொருத்தி வருமாறு உத்திரவு போட்டார். இவையாவற்றையும் சொல்ல எவ்வளவு நேரம் பிடித்ததோ, அதற்கு குறைவாகவே, எல்லாம் சித்தமாய்க் காத்துக் கொண்டிருந்தன.

"நாங்கள் திரும்பிவரச் சிலமாதங்கள் பிடித்தாலும் பிடிக்கும்; சில வருஷங்களானாலும் ஆகும். அது வரையிலும் மஹா விருத்தியை (தனது பண்ணை, குடும்பம் முதலியன) சரியாகப் பார்த்துவாரும். அப்போதைக்கப்போது செய்ய வேண்டியதற்கு என்னிடமிருந்து கடிதம் வரும். அதைப் பார்த்து சகல நடவடிக்கைகளையும் நடத்தி வாரும். குறிப்பிட்ட இடத்துக்கு, தவறாமல் நமக்குத் தபால் எழுதி வாரும். மற்றயாவும் வழக்கம்போல" என்று குபேந்திரன் தனது மானேஜருக்கு தாக்கீது செய்தார். மானேஜருக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவர் பரக்கப் பரக்க விழித்தார்.

"என்னங்காணும் விழிக்கிறீர்? நான் சொன்னது காதில் விழுந்ததல்லவா? அந்தப்படியே செய்யும். எனக்கு பைத்தியமொன்றும் பிடிக்கவில்லை. சித்த சுவாதீனத்துடன்தான் இருக்கிறேன். தெரிந்ததா" என்றார் குபேந்திரன்.

"எஜமான் உத்தரவு" என்று உளறினார் மானேஜர்.

உடனே குபேந்திரன் தன் மனைவியை அழைத்துக் கொண்டு, தனக்கு வேண்டிய பரிவாரங்களுடன் காளஹஸ்திக்குப் புறப்பட்டார். காளஹஸ்தி வந்ததும், "ஸ்தல யாத்திரையில், சம்பிரதாய முறைப்படி எது செய்ய வேண்டுமானாலும் நீ செய்துகொள். ஆட்சேபிக்கவில்லை; ஆனால் நீ செய்கிறமாதிரி நானும் செய்யவேண்டுமென்று

ஆசைப்படாதே, யோசனை சொல்லாதே. இந்த ஒப்பந்தம் நமது ஸ்தல யாத்திரை முடியும்வரை, நம்மிருவருக்குள்ளும் இருந்து வரவேண்டும். என்ன சொல்லுகிறாய்'' என்றார் குபேந்திரன்.

"இஷ்டப்படி; உங்களைத் தடுத்து நான் ஒன்றும் சொல்லப் போவதில்லை'' என்றாள் வெங்கம்மாள். காளஹஸ்தியில், குபேந்திரன் தனக்குச் சொந்தமான வீட்டிலிருந்தார் என்று சொல்லத் தேவையில்லை.

அன்று சாயங்காலம் வெங்கம்மாள் காளஹஸ்திநாதனை தரிசிக்க ஆசை கொண்டு, தனது தாதியுடனும் மற்றுமொரு வேலைக்காரனுடனும் கோயிலுக்குச் சென்றாள். கோயிலிலே சுவாமி தரிசனம் செய்யும் பொழுதெல்லாம், "கடவுளே, கருணாநிதியே, ஏழைக்கிரங்கும் தயாமூர்த்தியே! நான் ஒன்று நினைக்க, அது வேறுவிதமாய், விபரீதமாய் முடிந்துவிட்டது. குலம் விருத்தியாக வேண்டுமென்று நினைத்தேன். என் புருஷனுக்கு ஏதோ கோணல்புத்தி வந்து சேர்ந்துவிட்டது. பிள்ளைவரன் எனக்கு இப்பொழுது வேண்டாம். என் புருஷனுக்கு யாதொரு கஷ்டமும் வராமலிருந்தால் போதும். கடவுளே! அவரைக் காப்பாற்றுவாயாக. அவர் மனம் கோணாமல் நடப்பதற்கு வேண்டிய சித்தத்தை எனக்கு எப்பொழுதும் கொடுத்தருள்வாயாக! எங்களை எந்நாளும் கைவிடலாகாது. மனிதர்களால் என்ன முடியும்? எல்லாம் நினது அருள்'' என்று பிரார்த்தனை செய்வாள்.

வெங்கம்மாள் கோயிலுக்குச் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம், குபேந்திரன் வெளியே புறப்பட்டார். ஆடம்பரமான உடை அவர் தரித்துக்கொள்ளவில்லை. யாரையும் அவர் கூட அழைத்துக்கொள்ளவுமில்லை. தனியே தன் வழிநடந்தார். அவர் இதுவரையிலும் அதிகமாக வெளியே தலைகாட்டாத பிரபு. எனவே, அவரை அநேகருக்குத் தெரியாது. ஊருக்கு வெளியே சென்று, தனியிடத்தில் அமர்ந்து யோசிக்கலானார். "மனிதனுக்கு சுகந்தான் பெரிது. வீட்டைப் பெரிதாக இதுவரையிலும் நினைத்து, எவ்வித சுகத்திலும் எனது மனது செல்லாமல், என் காலத்தை வீணாக்கி

விட்டேன். வெங்கம்மாளுக்கு என்னிடம் பக்தி இருக்கலாம்; அவளுக்கு என்னிடம் அன்பு, காதல் இல்லை. கணவனிடம் அவளுக்கு காதல் இருக்குமாகில், அவள் மனம் ஏன் குழந்தையை நாடிச்செல்ல வேண்டும்? குழந்தையை சாக்காகக் காட்டி, என்னை அடக்கியாண்டு, என் குடும்பத்தின் சொத்தை அனுபவிக்க வேண்டுமென்கிற நோக்கம் அவளுக்குப் பூராவாக இருக்கிறது. அதை மறைத்துக்கொண்டு, எனக்கு ஏதோபரிந்து பேசுவதுபோல, மறுவிவாகப் பேச்சை அவள் எடுத்திருக்கிறாள். அவள் கொட்டத்தை அடக்க என்னிடம் மருந்தில்லை என்று அவள் எண்ணிக் கொண்டிருக்கிறாள் போலும்! என் சுகத்தை யெல்லாம் மறந்து, இழந்து, வீட்டுக் கோழியாக நான் இருந்ததனால்லவா, அவள் அவ்வாறு பேசத் துணிந்தாள்? தனது ஆசைப்பூர்த்திக்கு என்னைக் கருவியாக உபயோகித்துக் கொள்ள நினைத்த வெங்கம்மாளுக்கு, இந்த ஸ்தல யாத்திரை முடிவதற்குள்ளாகவே, நான் புத்தி கற்பிப்பேன். அதுவும் இன்றைக்கே புத்தி கற்பிக்கிறேன். பணமும் புத்தியும் செய்யக்கூடாத சங்கதியும் உலகத்தில் உண்டா? குபேந்திரன் செயலற்றுப் போனவன் என்று எண்ணியல்லவா, வெங்கம்மாள் அவ்வாறு பேசினாள்? இருக்கட்டும், பார்த்துக் கொள்ளுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே, திடீரென்று எழுந்திருந்து சற்று விசையாக நடந்தார். அதற்குள் இருளும் சூழ்ந்து கொண்டது. யோசனையில்லாமல், எந்த தெருவழியாகவோ அவர் நடந்து சென்றார். வழியில் ஒரு ஆள் தென்பட்டான்.

இந்த வீதிக்குப் பெயரென்ன என்று தெரியாதது போல குபேந்திரன் அவனைக் கேட்டார். அவன் ஒன்றும் பேசாமல் நின்று கொண்டிருந்தான். அவனிடம் பேச மனமில்லாமல், குபேந்திரன் முன்னேகிச் சென்றார். ஆள் அவரைப் பின்தொடர்ந்தான். பின்னர் காலடி சப்தம் கேட்கவே, குபேந்திரன் திரும்பி, அந்த ஆளைப்பார்த்தார்.

"எஜமானை இந்த நாய்க்குட்டிக்குத் தெரியும். எஜமானுக்கு இந்த நாய்க்குட்டியை எப்படி தெரியும்? எஜமான் இஷ்டத்தை ஒருகோடி காண்பித்தால், நாய்க்குட்டி காத்துக் கொண்டிருக்கிறது" என்றான் அந்தஆள்.

தன்னைத் தெரியும் என்று கேள்விப்பட்ட உடனே, குபேந்திரனுக்கு அவரையறியாமலே ஒரு திகில் உண்டா யிற்று. "தெரிந்திருக்கலாம், அதற்கென்ன" என்று தனது மாமூல் தோரணையை விட்டுக்கொடுக்காமல் பேசினார் குபேந் திரன்.

"எஜமானுக்கு முப்பத்தைந்து வயதிருக்கும். இந்த நாய்க்குட்டிக்கு ஐம்பதுக்கு மேலாகிறது. எஜமான் இது வரையிலும் இந்த வீதிவழியாக, கால்நடையாக வந்ததை இந்த நாய்க்குட்டி பார்த்ததில்லை" என்றான் அந்த ஆள்.

"ஒருவீதி மற்றொன்றை போல; இந்தவீதியில் என்ன விசேஷம் அதிகமாயிருக்கிறது? நான் கால்நடையாக வரக் கூடாதோ" என்று குபேந்திரன் உறுமினார்.

"எஜமானுக்குக் கோபம் வந்தால், இந்த நாய்க்குட்டி எந்தமூலை? படீரென்று பிராணன் போக வேண்டியதுதான். இந்த நாய்க்குட்டி குலத்தை, எஜமான் வித்தியாசமாக நினைத்துக் கொள்ளலாகாது. இந்த வீதியில் எஜமானை ஒத்த கோடீசுரர்கள் கால் நடையாக நடந்தால், இந்த வீதியில் மங்களம் பெருகுமா! இந்த வீதிக்கு பாக்கியமில்லாக் குறை யைத் தவிர, வேறு எல்லாம் இருக்கிறது" என்றான் ஆள்.

"உன்னோடு நான் அதிக வார்த்தை பேசமுடியாது. நீ இன்றிரவு முழுவதும் இப்படியே பேசிக்கொண்டிருப்பாய் போலத் தோன்றுகிறது. இந்த வீதியில் என்ன விசேஷம்" என்றார் குப்தா. உள்ளபடியே, இந்த வீதி வழி அவர் வந்ததேயில்லை; எனவே, அந்த ஆள் வளைத்துப் பேசினது அவருக்கு விளங்கவில்லை. குப்தாவுக்கு மந்த புத்தியில்லை. சில விஷயங்களில் அவருக்குப் பழக்கக்குறைவு. சில விஷயங் களின் சங்கேதம் அவருக்குத் தெரியாது.

"எஜமானிடத்தில் நான் என்ன விஸ்தாரமாகச் சொல்லிக் கொள்ளுகிறது? பிரபுக்களின் இச்சைப் பூர்த்திக் காக ஏற்பட்டிருக்கும் வீதி இது. எஜமான் பாததூளி பதி னாயிரம் பொன் இந்த வீதிக்கு" என்றான் ஆள்.

"அப்படியா? நல்லது, இதைத் தெளிவாகச் சொல்லித் தொலைக்கிறதுதானே? உன் பாஷை எனக்கு இதுவரையி லும் புரியவில்லையே" என்றார் குபேந்திரன்.

"எஜமான் நோக்கம் தெரியாமல், நான் உளறலாமா? (இப்பொழுது நாய்க்குட்டி என்ற பதத்தை அந்த ஆள் உப யோகப்படுத்தவில்லை; அதை குபேந்திரன் கவனிக்கவில்லை). எஜமானை யொத்த பிரபுக்களுக்கு ஒரு ஜாடை காண்பித்தால் போதாதா? அதிலிருந்து அவர்கள் எவ்வளவோ பிடித்துக் கொள்ளுவார்களே! அண்ணமலை ரெட்டியார் வருணித்திருக் கும் சிருங்காரத்தைக் காட்டிலும் அதிகமான சுகம், எஜமான் வாய் அசைந்தால், இந்த வீதியில் கிடைக்கும். எஜமான் சித்தத்துக்கு நான் காத்துக் கொண்டிருக்கிறேன். நடுவீதி யிலே நின்று பேசுவது, எஜமானுக்கு கௌரவக்குறைவு" என்றான் அந்தஆள்.

தான் எண்ணின காரியம் தானாகவே கைகூடுவதை நினைத்து பரிபூரண ஆனந்தமடைந்து, ஆனால் அதை அடக் கிக்கொண்டு, எங்கே உட்காரலாம் என்றார் குப்தா.

"எஜமான் பேசுகிற ஆளின் பஞ்சம்தொலைந்துபோகும்; எஜமான் தங்கின இடம் தங்கம். கூடவாருங்கள்" என்று குப்தாவை அவன் அழைத்துக்கொண்டு, ஒருவீட்டினுள்ளே நுழைந்தான். வீடுமிகச் சுத்தமாக இருந்தது. வீட்டில் இருந்தவர்கள் இரண்டு பேர்கள். ஒருத்தி கிழவி. அவளுக்கு சுமார் அறுபதிருக்கும். கன்னங்கள் குழிந்துபோய், வா யிலே இரண்டொருபற்கள் தான் மிகுந்திருக்கும். இன்னொரு வளுக்கு வயது பதினெட்டு இருக்கும். தங்கரேக்கைப்போல அவள் உடம்பு. நல்ல வசீகரமான பார்வை. இனியகுரல். நடை அழகை வருணித்து முடியாது. குபேந்திரனை ஒரு சோபாவில் அமர்த்திவிட்டு, அந்தஆள் கிழவியை ஒதுக்குப் புறமாக அழைத்துச் சென்று, "இவ்விடம் வந்திருப்பது கிளியூர் குப்தா. இன்னைக்கி தெய்வாதீனமாக என்வலையில் மாட்டிக்கொண்டான். மேற்காரியம் உங்களுடையது" என்றான்.

கிழவி தனது பொக்கைவாயை நீட்டி முழக்கிக்கொண்டு, குப்தாவை, அதிவினயத்துடன் வரவேற்ருள். குறிப்பை உணர்ந்த கோகிலாம்பாள் (சிறுமியின் பெயர்) குப்தாவை நமஸ்காரம்செய்து, தாம்பூலம் கொடுத்து, ரோஜாமலர் ஒன்றை குப்தாவுக்கு அளித்து, கைகட்டிக்கொண்டு நின்ருள். குபேரந்திரனுக்கு என்ன சொல்லுவது, என்ன செய்வதென்று தெரியவில்லை.

"கோகிலம்! கண்ணே! கையைக் கட்டிக்கொண்டு நிற்பதைக்காட்டிலும், எஜமான் காலடியில் உட்கார்ந்தாலும், உன்னைப் பிடித்த கலிதீரும், பாவம் தொலையும். நம்மவீட்டிலே எஜமான் காலடி வைப்பதற்கு, நீ எத்தனை ஜன்மம் தவமிருந்திருக்க வேண்டும்? பிரபுக்களின் பார்வை கடவுளின் கடாட்சம்என்றுஉனக்குத்தெரியாதா? நீ என்ன செய்வாய்? நீயும் புதிது, எஜமானும் புதிது. எஜமானை வீட்டுக்குள்ளே கண்டதும், கிழவியின்வாய் அடைத்துப் போய்விட்டது. தான் இருப்பது எந்தஉலகம் என்று அவளுக்கு இப்பொழுது தெரியவில்லை. கோகிலம்! சற்றுநேரம் வீணை வாசி. எஜமான் மனது குளிரட்டும்" என்ருன் மாமா.

இந்த ஆர்ப்பாட்டமெல்லாம் குப்தாவுக்குப் புதிது. இவைகளை அவர் முழுதும் ஏற்றுக்கொள்ளவில்லையாயினும், புதிதான இந்த காதல்சின்னங்களை அவர் உள்ளம் வேண்டிற்று. வினயம், மரியாதை, அடக்கம், புகழ்ச்சி, தாசியின் வசீகரமான பார்வை, இவைகள் யாவும் குப்தாவுக்கு புதிது. புதிய உலகத்தைக் கண்டதாக, அவரது கனவு. வெங்கம்மாள் கொட்டம் அடங்கிற்று என்பது அவரது நினைவு. வீணுகானத்தைக் கேட்டார். அவர் இதயம் சிருங்கார சுகத்தை வேண்டிற்று. இரண்டொரு நாழிகை அங்கு தங்கியிருந்து, நூறுரூபாய் நோட்டு யொன்றைக் கையிலெடுத்து, கோகிலத்துக்கு முத்தம் கொடுத்து, விடையை வேண்டினர். கோகிலம் கீழ்நோக்குடன் தேம்பி அழுதாள். பணம் வேண்டுகிருள் என்று நினைத்து இன்னொரு நோட்டை வீசினர் குப்தா.

"நாங்கள் பணப்பேய்களல்ல. ஈசன் எங்களை இந்த ஈனத் தொழிலுக்குப் படைத்து விட்டாலும், கள்ளி வயிற்றில்

அகில் பிறப்பது, தங்களுக்குத் தெரியாதோ? பணம் இன்றைக்கு வரும் நாளைக்கு போகும். ஆனல், எஜமான்—" என்று முடிப்பதற்குள் அழுதாள். அழுதகண்ணீரை குப்தா துடைத்தார். வெங்கம்மாளுக்கு இத்தகைய பாக்கியம் நேர்ந்ததேயில்லை.

"நான் இருக்கிற வரையிலும் உனக்கென்ன கவலை" என்றார்.

"உங்கள் தங்கவாயால் அப்படி சொல்லுங்கள்" என்றாள் கிழவி. "எனக்கு எதற்கு பணம்? உங்களை நினைத்து பட்டினிகிடந்தாலே, எனக்கு புண்ணியம் வரும். பணத்தைப்பற்றிப் பேசினல் நான் அழுவேன்" என்று குழந்தையைப்போல அபிநயம் செய்தாள் கோகிலம்.

இதல்லவா உண்மைக் காதல் என்று குப்தா உளம் குழைந்து, மீண்டும் வருவதாக உறுதிகொடுத்த பின்னர், அவர் தனது இருப்பிடம் சென்றார்.

"அக்கா! இன்றையதினம் கோகிலம் நடந்துகொண்டது போல என்றைக்கும் நடந்துகொண்டால், காளதீஸ்வரன் கோயில் கல்லைக்கொண்டு, பங்களாகட்டி விடுவான் அந்த மூடன். நம்முடைய மூடையும் தொலைந்து போகும். கோகிலம்! சபாஷ்" என்றான் மாமா.

"சும்மாயிருங்க, மாமா. அவரிடத்தில் எனக்கு உண்மையாகவே பிரியம் வந்தது" என்றாள் கோகிலம்.

"கதையைக் கேளேன்! பிரியத்துக்கும் பணத்துக்கும் ரொம்பதூரம். பிரியப்பேச்சு வைத்துக் கொள்ளாதே, ஆத்தா" என்றாள் கிழவி. மதுரைவீரனைக் கும்பிடுவதற்காக ஒரு ரூபாய் பணம் பெற்றுக்கொண்டு, மாமா பறந்தோடிப் போனன்.

அன்றிரவு வெங்கம்மாளிடம், கண்டதற்கெல்லாம் கோபித்துக்கொண்டார் குப்தா. அவரைச் சாந்தப்படுத்தத் துணிந்தால், வெங்கம்மாள் பேரில் அவர் சீறிவிழுவார். அவரைச் சமாதானப்படுத்த முடியாவிட்டால், வெங்கம்மாளின் "மமதையைப்பார்" என்று மனம் பதறுவார்.

"கோகிலம் ஆகாயக்குயில்; வெங்கம்மாள் வெறும் வெங்க அம்மாள்" என்று தனது கிலேலடையை கருதிக்கரு திக் களிப்படைவார். தனது கணவனுக்குப் பித்தோ என்று வெங்கம்மாள் உள்ளம் குழைவாள். என்ன காரணத்தி ஞலோ, தனக்கும் தனது கணவனுக்கும் மனவேறுபாடு வந்து விட்டதாக மட்டும் அவள் தெரிந்துகொண்டாள். நோய் தெரிந்தாலும், மருந்து தெரியவேண்டாமா? வெங்கம் மாள் தவித்துப் போனுள். காளஹஸ்தி ஈசனிடம் முறை சொல்லிக் கொள்ளுவதைத் தவிர, வேறுவழி யொன்றும் தெரியாதவளாய்ப் புலம்பினுள்.

"பணத்தாசை, அதிகார ஆசைகொண்ட நீலி! ஏன் மாயப்புலம்பல் புலம்புகின்றுய்" என்று கேட்டார் குப்தா.

"நீலி" என்ற வார்த்தையை, அவரிடமிருந்து அவள் இதுவரையிலும் கேட்டதேயில்லை. பிளவு அதிகரித்துக் கொண்டே வந்தது. சிறிது காலத்துக்குப் பின்னர் அவர் கள் துங்கபத்திரையில் ஸ்நானம் செய்து, பண்டரிபுரம் முத லிய க்ஷேத்திரங்களுக்குச் சென்று, பம்பாய்க்குப் போய்ச் சேர்ந்தார்கள். குப்தாவின் இன்பப்பித்து தணியவில்லை. சிருங்கார சாகரத்தில் மூழ்கிக்கிடந்த குப்தாவுக்கு, அதற் குரிய சங்கேதங்கள் நன்றுய் தெரியவந்தன. கதையை வளர்த் துவானேன்? பம்பாயிலும் (ஏனைய இடங்களைப்போலவே) குப்தா தனது இன்பக்கூத்தை ஆடித்தீர்த்தார். இதற்குள் வெங்கம்மாள் உடம்பு துரும்பாகிப் போனுள்.

இப்பொழுது அவர்களுக்கிடையே பேச்சு வார்த்தை கிடையாது. இந்த நிலையில் அவர்கள் நாசிகைக்குச் சென் ருர்கள். சூர்ப்பனகைக்கு அங்கபங்கம் நேர்ந்து, அவ மானப்பட்ட இடம் நாசிகை அல்லவா? இந்த இடத்தில் குப்தாவின் அகங்காரத்திற்கு பங்கம் நேர்ந்தது. காரணம் தெரியவில்லை. அவருக்கு கடுங்காய்ச்சல் உண்டாயிற்று. கோகிலம் உள்ளிட்ட திருக்கூட்டத்தாரை அவர் நினைத்துக் கொண்டார். தான் மதுரைவீரன் பூஜை நடத்திய தோர ணையை நினைத்துக் கசிந்து கசிந்து உருகினுர்.

"எனது இன்ப வேட்டையின் முடிவு இதுதானு? என்னுடையது மாயமான் வேட்டையாக முடிந்ததே! இந்தப்

பாழான வெங்கம்மாளைக் கூப்பிடுவதைத் தவிர, எனக்கு வேறு வழியில்லையே! அவளது காலிலா போய் விழுவது" என்று என்னவெல்லாமோ எண்ணிக்கொண்டிருந்தார்.

"கஞ்சி கொண்டு வரட்டுமா? என்னிடம் கோபம் கொள்ளாதீர்கள். நான் என்ன செய்வேன்? தாங்கள் காய்ச்சலாய்ப் படுத்துக் கொண்டதிலிருந்து, நான் ஆகாரம் சாப்பிடவேயில்லை. என்னை வெறுக்காதீர்கள். எனக்கு தங்களைத்தவிர, போக்கிடம் கிடையாது" என்று பலவாறாக சொல்லிப் புலம்பினாள் வெங்கம்மாள்.

அவரது மனம் இளகிற்று. அன்று முதல் அவர்களுக்குள் ராஜி ஏற்பட்டது. குப்தாவும் குணமடைந்தார். எல்லோரும் பிரயாகைக்குச் சென்றார்கள். பிரயாகைக்குச் சிறிது தூரத்தில், தாராகஞ்சம் என்று ஒரு இடமிருக்கிறது. அங்கேதான் கங்கையும் யமுனையும் சேருகின்றது. (சரஸ்வதி என்ற கற்பனை நதியொன்று கங்கையிலே சூட்சமமாகக் கலந்து கொள்ளுவதாக ஐதீகம். எனவே, கங்கையும் யமுனையும் சரஸ்வதியும் சேரும் இடத்திற்கு முக்கூடல் என்று பெயர்.) தாரகஞ்சத்தில் தனி ஜாகை அமர்த்திக்கொண்டு, குப்தாவும் வெங்கம்மாளும் தங்கள் ஸ்தலயாத்திரைத் துவக்க வாழ்வை மறந்து இன்பமாய்க் காலம் கழித்தார்கள். வெங்கம்மாள் கர்ப்பவதியானாள்.

நீண்டகாலம் எங்கும் தங்காமல், கிழக்கு நோக்கிப் புறப்பட்டு, காசி, கயை முதலிய ஸ்தலங்களில் தங்கி, கல்கத்தா வந்து சேர்ந்தார்கள். பின்னர் ஜகந்நாதத்தை தரிசனம் செய்து, மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணையாறு முதலியவைகளில் ஸ்நானம் செய்து, இறுதியில் கிளியூருக்கு வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது வெங்கம்மாள் ஏழு மாத கர்ப்பம். பத்து மாதம் சுமந்துதானே, ஆகவேண்டும்?

வெங்கம்மாளுக்குப் பிரசவகாலம் நெருங்கிற்று. காலப் பிற்பாடாய் நேர்ந்த கர்ப்பமாதலால், அவள் மிகவும் வேதனைப் பட்டாள். கடைசியாகக் குழந்தைகள் பிறந்தன. இரட்டைகள். இரண்டும் பெண் குழந்தைகள். ஒன்று தகப்பனைப்போல இருந்தது. மற்றொன்று தாயைப்போல. ஒன்று கறுப்பு; மற்றொன்று சிவப்பு. இரண்டு குழந்தைகளும்

இரண்டு கண்களைப்போல ஜோடியாக வளர்ந்தன. முகத்தி லும் நிறத்திலும் அவைகளிரண்டிற்கும் எத்தனை வேற்று மைகள் இருந்தனவோ, அத்தனை வேற்றுமைகள் அவைகள் குணங்களிலும், காலம் கடக்கக் கடக்கத் தோன்றின. ஒரு குழந்தைக்கு கமலி என்றும் மற்றொன்றுக்கு விமலி என் றும் பிரசாதத்தையொட்டிப் பெற்றோர்கள் பெயர் வைத்தார் கள். குழந்தைகள் சுதந்திரத்தில் வாழவேண்டும், வளர வேண்டும் என்பது குப்தாவின் ஆசை. பெண் குழந்தை களுக்கு அடக்கத்தை பழக்கிவைத்தல் வேண்டுமென்பது வெங்கம்மாளின் ஆவல். புருஷன், மனைவிக்குள் இதைப் பற்றி அபிப்பிராயபேதம் உண்டாயிற்று.

"குழந்தைகள் இல்லாவிடில் துக்கம்; இருந்தால் சண் டையா" என்பார் குப்தா.

"சொல்லுகிறதைச் சொன்னேன். பின்னர் உங்க ளிஷ்டம் போல" என்பாள் வெங்கம்மாள்.

"இந்த முணுமுணுப்பு பழையபடி திரும்பி வந்து விட்டதா" என்று ஆர்ப்பரிப்பார் குபேந்திரன். வெங்கம் மாள் அப்புறம் வாய் திறக்கமாட்டாள்.

கமலியும் விமலியும் பொதுப்பள்ளிக்கு அனுப்பப்பட வில்லை. வீட்டிலே அவர்களுக்குப் படிப்பு. ரொம்பப்பணம் செலவழிக்கப் பட்டது. ஆங்கிலம் முதலிய பாஷைகளை பயின்றார்கள். இவைகளை நன்றாக எழுதப்பேச அவர்களுக் குப் பழக்கம் உண்டாயிற்று. வயது பதினைந்து ஆகியும் அவர்களுக்கு கலியாணம் ஆகவில்லை. பதினெட்டு வயதிற்கு மேற்பட்டுத்தான் கலியாணப் பேச்சு என்று குப்தா கட் டளை போட்டுவிட்டார்.

பதினெட்டு வயதானதும் குப்தா தனது குழந்தை களையும் மனைவியையும் கூடவைத்துக்கொண்டு, கலியாண பேச்சை எடுத்தார்.

"எனக்கு கலியாணம் வேண்டாம்; நான் ஆண் பிள் ளைக்கு அடிமையாக முடியாது. ரகசியமாக, நான் ஒன்று செய்தேன். அதைச்சொல்லி விடுகிறேன். 'அழகும் படிப்பும் உள்ள இளவயதுள்ள புருஷன் தேவை; தங்கள்

படங்களை அனுப்பவேண்டும்' என்று என் விலாசத்தைக் குறிப்பிட்டு பத்திரிகையில் விளம்பரம் செய்தேன். பலர் எனக்கு படங்களை அனுப்பி, காதல்கடிதங்களும் எழுதியிருக்கிறார்கள். அவைகள் இதோ இருக்கின்றன. அவர்கள் ஒருவரையாவது எனக்குப்பிடிக்கவில்லை" என்று கமலி கூறி விட்டு தகப்பனிடம் மன்னிப்பு கேட்டாள்.

"எனக்கு தெரியாமல் செய்தது குற்றம். நீ நாகரீக விபசாரத்தை நாடினும்போலும்! நான் உன்னை மன்னிக்க முடியாது" என்று குப்தாவெறுப்பாக பேசினார்.

"கமலியக்காள் சொன்னதற்குப் பிறகு, நான் சத்தியத்தை மறைக்கலாகாது. நான் கலியாணம் செய்துகொள்வதாகத் தீர்மானித்து விட்டேன். என்பேரில் கோபம் கொள்ளலாகாது. நமது மானேஜர் மகன் ராமேசம் எனக்கு பிடித்தவர். அவர் எம். ஏ. பட்டம் பெற்றிருந்தாலும், ஏழைகளுக்கிரங்கி, தன் தகப்பன் சொத்து தனக்குப் போதும் என்று திருப்திகொண்டு, கடவுளிடம் பக்தி கொண்டவராய், இந்த ஊரில் ஏழைமக்களுக்கு இரவுப் பள்ளிக்கூடம் நடத்தி வருகிறார். அவரையே நான் மணப்பதாக தீர்மானம் கொண்டிருக்கிறேன்" என்றாள் விமலி.

தகப்பனுக்கு அடங்காத கோபம் உண்டாயிற்று. "அந்த ராப்பிச்சைக்காரனா உன் புருஷன்? காந்தியை படித்து படித்து, உனக்கு, கீழ்மக்கள் சாவகாசம் உண்டாயிற்றுபோலிருக்கிறது. நான்பெற்ற இரண்டும் இப்படியா போகவேண்டும்? என்மமதை அடங்கிற்று! என்னைக் கொல்லுவதற்காக, வெங்கம்மா, நீ குழந்தைகளை வேண்டினாய் என்று அப்பொழுதே தெரியும். அதை இப்பொழுது நன்றாய் தெரிந்து கொண்டேன்" என்று குப்தா கோபம் துடி துடிக்கப் பேசினார். மற்ற யாவரும் வாய்திறக்கவில்லை. இதற்குப்பின், அவர் உடல் தேய்ந்து மாய்ந்து கொண்டே வந்தது. ஆறுமாத காலத்திற்குள் அவர் இறந்து போனார். அவர் பழைய வாழ்க்கை, புதியவாழ்க்கை, ராஜி, குழந்தை வளர்ப்பு எல்லாம் முற்றுப்பெற்றன.

03:13